Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

රිනමුරසු වාරමලර් நவ.07-13,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 334



## ஜனாதிபதித் தேர்தல் திரைமறைவுத் திட்டங்கள்!

இராணுவ நகர்வுகளால் இடம் பெயர்ந்து இழப்பதற்கு எதுவுமற்று வாழ்கின்ற இவர்களுக்கு எப்போது தீபாவளி?!

## புலிகளுக்குத் தூது?





## மீனாவுக்கு போட்டியா?

## வைர மோதிர போட்டி முடிவுகள்

# முரசம்

## வாக்குகளுக்கு வலை

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

ஜனாதிபதித் தேர்தல்
நடக்க இருப்பதால்,
பிரதான கட்சிகளுக்கு
தமிழ் பேசும் மக்கள் மீதும்
தற்காலிக கரிசனை
ஏற்படுவது இயல்பானதே!

மறுபடி பதவிக்கு வந்தால்
மூன்று மாதத்துக்குள்
இனப்பிரச்சனைக்குத் தீர்வு
என்றுள்ளார் ஜனாதிபதி!

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
இனிப்பான திட்டம்
தம்மிடம் உள்ளதாக
ரணில் விக்கிரமசிங்கா
தெரிவித்திருக்கிறார்.

சென்றமுறையும்
சந்திரிக்கா அம்மையார்
ஜனாதிபதித் தேர்தலில்
போட்டியிடும்போது,
சமாதானத்தை நிலைநாட்டவும்
இனப்பிரச்சனைத் தீர்வுக்கும்
ஆணை கேட்டிருந்தார்!

அமோகமான
வெற்றியைப் பெற்றிருந்தார்!

அதுபோன்றதொரு அமோக
வெற்றியை
இனிமேல் அம்மையார் மட்டுமல்ல,
வேறெந்த ஜனாதிபதி வேட்பாளரும்
பெறவே முடியாது!

அத்தி பூத்தாற்போன்று
கிடைத்த வாய்ப்பு அது!

அப்போது எழுந்த
ஆதரவு அலையில்
பேரினவாத அமைப்புக்களும்
ஓரம் கட்டப்பட்டது உண்மை!

அதே சூட்டோடு
தக்கதொரு தீர்வை
முன்வைக்க நினைத்திருந்தால்,
அற்புதமாகச்
செய்து முடித்திருக்கலாம்!

ஆனால், தீர்வு யோசனை
என்ற பெயரில்
நாடு தழுவிய விவாதத்துக்கு
அரை குறைப் பொதியை
தூக்கிப் போட்டனர்!

ஓரம் கட்டப்பட்ட
பேரினவாத சக்திகள்
விவாதம் என்ற பெயரில்
உசுப்பிவிடப்பட்டனர்!

அரைகுறைப் பொதியும்கூட
பேரினவாதக் சக்திகளால்
செத்த பொதியாகியது!

தீர்வைக் கொண்டுவர
இயலாமல் போனதற்கு,
புலிகளுடன் பேச்சு முறிந்ததை
காரணம் கூறுவது
பொருத்தமே இல்லாதது!

கௌரவமான தீர்வொன்றை
அறிவித்துவிட்டு,
அதனைப் புலிகள் ஏற்காதுபோனால்
அல்லது தடையாக இருந்தால்
அவ்வாறு கூறியிருக்கலாம்!

தமிழ்க் கட்சிகள்கூட
ஏற்கத்தக்க தீர்வை
அரசாங்கத்தால்
முன்வைக்க முடியவில்லையே!

எனவே, அமோக வெற்றிமூலம்
பதவிக்கு வந்த அம்மையார்
தமிழ் பேசும் தரப்புக்கு
தக்க தீர்வைத் தரத்தவறியுள்ளார்!

அமோக வெற்றிபெற்று
ஐந்து வருடத்தில்
செய்ய முடியாததை
மூன்று மாதத்தில்
செய்து முடிப்பது எப்படி?

அடுத்தவர் ரணில்;
அவரும் கூறுகிறார்;
'புலிகளுடன் பேசுவோம்;
பிரச்சனையைத் தீர்ப்போம்!'

17 வருடகாலமாக
ஆட்சி பீடத்தில் இருந்தபோது
ஐ.தே.கட்சியும்
யுத்தம்தான் செய்தது!

சர்வகட்சி மாநாடு,
பாராளுமன்றத் தெரிவுக்குழு
போன்ற அட்டகாசமான
இழுத்தடிப்பு நாடகங்களுக்கு
முன்னோடியே அவர்கள்தான்!

தற்போதுகூட
போரை நிறுத்துமாறு
ரணில் கூறவில்லை!

போரை நடத்துவதில்
தற்போதைய ஆட்சியாளரைவிட
தாம் திறமையானவர்கள்
என்பதற்கே
புள்ளி விபரம் தேடுகிறார்!

'போரை நடத்தியபடி
புலிகளுடன் பேசுங்கள்!' என்கிறார்.

'போருக்கு மத்தியில்
பேச்சுக் கிடையாது' என்பதே
புலிகளது நிலைப்பாடு!

சர்வதேச மத்தியஸ்தத்தை
ரணிலும் ஏற்கவில்லை.
அம்மையார் கூறுவதுபோல
'அனுசரணையாளர் போதும்'
என்பதே ரணிலின் நிலைப்பாடும்!

தற்போது 51 வீதமான
வாக்கைப் பெறுவதற்கு,
தமிழ் பேசும் தரப்பின்
வாக்குகளையும் கவர்வதற்காக
இனிப்பான பேச்சுக்கள்,
ஆசை காட்டல்கள்
என்று இரு தரப்பும்
வித்தை காட்டி வருகின்றன!

இந்த வித்தைகளுக்கு
தமிழ் பேசும் வாக்காளர்கள்
மயங்குவார்களா?
என்பதே கேள்வி!

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்**

# ஆன்மீகம்

## பஜனையும்-பக்தியும்



எந்த விஷயத்தையும் நாம் மனப்பூர்வமாகப் புரிந்து கொள்வதற்குப் பார்ப்பதும் கேட்பதும் மிகவும் முக்கியமானது. தானே படித்து அறிவு பெறுபவர்கள் மிகக்குறைவு. அதனால்தான் கல்விக்கூடங்களில் பாடங்களை உரையாற்றுகிறார்கள். எழுதிக் காட்டி படம் போட்டுப் பார்க்கச் சொல்கிறார்கள்.

பஜனைகளில் சேர்ந்து பாடும்போது இந்தப் பலன் நமக்குப் பக்திப் பணியிலும் கிடைக்கிறது. வாய்விட்டுப் பாடும்போது அவன் பிறர்பாடுவதைக் கேட்டு, தொடர்ந்து அதில் சிந்தனையை ஊன்றிக் கொள்கிறான். தன்னைச் சுற்றியுள்ள அனைவரும் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்து விடுவதை அவன் கவனிக்கிறான். அதனால் அவனுக்கு அந்த மனநிலையில், ஒன்றிப் போவது எளிதாகிவிடுகிறது. அவசரமிகுந்த, நெருக்கடி மிகுந்த இன்றைய வாழ்க்கையில் இப்படி இறைபஜனைமுலம் பக்திப் பணியில் ஈடுபடுவது ஒரு சுலபமான வழி.

இனிய இசையிலும் அழகான சத்தத்திலும் சொற்களை அமைத்துப் பாடும்பொழுது மனம் அதில் தொடர்ந்து ஈடுபடுகிறது. இவை திரும்பத் திரும்ப ஒரே சொல்லைக் கூறுவதோ, கூச்சல் போடுவதோ அல்ல. திரும்பத்திரும்ப தடம்மாறி செல்லும் மனத்தை ஒருமுகப்படுத்தும்- இரைச்சல் மிகுந்த உலகத்தின் சூழலிலிருந்து நம்மைத் திருப்பும்- முயற்சியே பஜனை. நம்மைச் சுற்றியுள்ள இயற்கையான அமைதியையே இந்த ஒலிக்கடல் நமக்குக் காட்டிவிடும்.

தொகுப்பு: அ. அரசரெத்தினம்- சேனையூர்.

## மரணத்துக்குப் பின் நன்மை பயப்பவை!

ஒரு முஃமின் தன்னுடைய மரணத்திற்குப் பின் நன்மையை அடைந்து கொள்ளும் காரியங்களாவன:

மார்க்க அறிவைக்கற்று அதனைப் பிறருக்கும் கற்றுக் கொடுத்துப் பரவச் செய்வது.

தனக்குப் பின் விட்டுச் செல்கின்ற நல்லொழுக்கமுள்ள குழந்தை.

பிறருக்கு வாரிசாக்கி விட்டுச் செல்கின்ற குர்ஆன்.

அவர் கட்டி வைக்கின்ற பள்ளிவாசல்.

வழிப்போக்கர்களுக்காகக் கட்டிவைக்கும் இளைப்பாறுமிடம்.

பொது மக்களுக்காக வெட்டி வைக்கும் கிணறு.

தன் ஜீவியத்தில் உடல் நலமுடனிருக்கும் சமயத்தில் கொடுக்கப்படும் தருமம்.

கூறியவர்: நபி (ஸல்) அவர்கள்.
அறிவிப்பவர்: அபூ ஹுறைரா (ரலி)
நூல்: மிஷ்காத்.

தொகுப்பு: ஏ.எஸ்.எம். ரஸ்மி (பஹ்மி), அப்புத்தளை.

# கவிதைப் போட்டி இல.331

## பரிசுக்குரிய கவிதை

### எ(உ)மது நா(வீ)டும்

இன நெருக்கடியில்
எமது நாடு!
இட நெருக்கடியில்
உமது வீடோ!!

ரவீந்திரநாத்
அரவிந்தன்'உதயா'-
அக்கரைப்பற்று.8.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### தீர்வு!

முரண் நீங்க,
பகை நீங்க
போர் நீங்க
பலி நீங்க,
சிறியதைப் பெரியது
அணைக்கட்டும்!

'அ. சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம்,
கண்டி

### சொகுசு வண்டி

காலையிலே கண்விழித்தால்
சாலையிலே காண்பதெல்லாம்
ட்ரக் வண்டி
கவச வண்டி
நான் குந்தியிருப்பதோ!
அப்பாவின் சொகுசு வண்டி!

சரஸ்வதி மயில்வாகனம்-
ஆரையம்பதி.

### நீங்காத நினைவுகள்

தத்தெடுத்த தடிமாமா
வித்தை செய்து காட்டினாலும்
செத்து மடிந்த அன்னை
சேயதனின் கண்ணுக்குள்ளே!!

உன்னஸ்கிரிய ஏ.பி.சதாசிவம்- மொறட்டுவ.



### சுமை

சோகச் சுமைகளின்
மத்தியிலும்
சுகமான சுமை!

எஸ்.எல்.எம். இர்ஷாத்-
அலவதுகொட.

### அரசியல்வாதி

காரியம் முடியுமுன்
தலையிலும் சுமப்பர்!
ஆசனம் அமர்ந்ததும்
தரையினில் வீசுவர்!

வீ. ஜெயராஜ்-
கோரகல்லிமடு, கிரான்.

### ஆகுவதோ?

"பெரும்பான்மையில் அடங்கும்
பேசும் சிறு பான்மை!
இருபான்மையும் சமனாய்
எப்போதில் ஆகுவதோ?

செல்வி இ. தமிழரசி- ஈச்சந்தீவு,
கிண்ணியா.

### மெத்தை

எனக்கில்லையோர்
அத்தை!
இதுதான் எனக்கோர்
மெத்தை!

ஞா. சுதாகரன்-
திருகோணமலை.

### கொண்டாட்டம்

குன்றினிலே
குமரனுக்குக்
கொண்டாட்டம்!

எஸ். கணேசமூர்த்தி-
அக்கரைப்பற்று.

### பாசம்

இவருக்கும்
தன்குட்டி
பொன் குட்டிதான்!


ந. ரதீஸ்வரன்-
தம்பிலுவில்-02.

### சென்றிடு...!

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
வாழும் மனிதருக்கெல்லாம்
வயிற்றைக் கரைத்திங்கு வாழ
ஏர்க்களம் ஏகிடு தமிழா!!

ரீ. விஜயலட்சுமி- மட்டக்களப்பு.

# கவிதைப் போட்டி இல.334



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.11.1999

கவிதைப் போட்டி இல.334
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

'கையில் சிக்கிய மின்னல்' முடிவு அபாரம். என்ன செய்தாலும் தீபக்கின் அப்பாவை சட்டத்தின் பிடியில் கொடுத்துவிட்டு முடித்திருக்கலாம். இன்னும் அழகாய் இருந்திருக்கும். அடுத்த முரசில் மிரட்ட வரும் 'திக்திக்' கதையை படிக்க ஆவலாய் உள்ளது. முரசின் கவியரசு கண்ணதாசனின் 'அரங்கம் அந்தரங்கம்' நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது. உனது பணி தொடர என் வாழ்த்துக்கள்.

எஸ். அபிராமி,
வாழைச்சேனை.

'கையில் சிக்கிய மின்னல்' தொடர்கதை ஒவ்வொரு வாரமும் மறைமுகமாகவே இருந்து எம்மை அசத்திவிட்டதோடு முடிவு இனிதாகவே இருந்தது. தந்த 'ராஜேஸ் குமாரிற்கும் நன்றியுடன் சுமந்து வந்த முரசிற்கும் எனது வாழ்த்துக்கள்.

செல்வி சாந்தி சுப்ரமணியம்,
வேவெஸ்ஸ, பதுளை.

இனிமையான, சுவையான, அருமையானதொரு தொடரான 'கையில் சிக்கிய மின்னலின்' இறுதி முடிவை இனிமையாக முடித்துவிட்டார் ராஜேஸ்குமார். பூவிழியின் நிலைதான் பரிதாபத்திற்குரியது.(தீபக்கின் கையில் சிக்கும் பாக்கியம் வர்ணாவிற்காவது கிடைத்ததே?

திருமதி (ராதா)புவனேஸ்வரி
சிவபெருமாள், டவுன்சைட், எஸ்டேட்.

இடி அமீன் தொடர் என்னை பயமுறுத்துகின்றது. கவியரசு கண்ணதாசனின் அரங்கம் அந்தரங்கம் தொடர் விறுவிறுப்பாக உள்ளது. கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமாரின் 'கையில் சிக்கிய மின்னல்' தொடரினை 25 வாரங்களாக நான் வாசித்து வந்தேன். தீபக்-வர்ணா இருவரும் வாழ்க்கையில் இணைவது எனக்கு மகிழ்ச்சியே, இத் தொடரினை தந்த முரசுக்கு என்னுடைய நன்றிகள்.

மு.இராமசாமிகவுண்டர்
ரதிதேவி, இறக்குவானை.

## அமர்க்களமான ஆரம்பம்

விறுவிறுப்பான, 'திக்திக்' தொடர்களை தந்து எம் இதயத் துடிப்பை அதிகரிப்பதென்றே தீர்மானித்து விட்டாயா முரசே?! சூடு சுவாரசியமான தொடர் (சிறு) கதைகள் துன்பத்தை விரட்டுகின்றன; படிப்பினையையும் ஊட்டுகின்றன. 'சிகப்பு வணக்கம்' ஆரம்பமே அமர்க்கள அசத்தல்!

எஸ்.பத்மா, உமாஜினி,
கொழும்பு-10.

அன்பின் முரசே

குற்றமில்லை என்று தெரிந்த பின்னும் மன்னார் அரச அதிபரை இறுக்க முயற்சிகள் நடக்கின்றன என அய்யாத்துரையார் கூறியது அப்பட்டமான உண்மையாகும். மன்னாரில் நடந்த பல்வேறு மனித உரிமை மீறல்களின் பின்னர் பாதிப்படைந்த மன்னார் மக்களுக்கு தங்களுக்காக குரல் கொடுக்க பா.உ (பாராளுமன்றில் உறங்குபவர்கள்) இருந்தும் பயனற்ற வேளையில் குரல் கொடுத்த அரச அதிபரின் கைது பனையில் இருந்து விழுந்தவனை மாடு மிதித்த கதையாகும்.

இராஜகுமாரன், மன்னார்.

## எதிர்பார்த்தோம்! ஏமாறவில்லை!

"சமவாய்ப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்!" என்ற செய்தி வந்ததும் இந்தச் சட்டமூலம் பாராளுமன்ற வாசலுக்குக்கூட வராது என்பதை கடந்தகால இலங்கை அரசியல் வரலாறுகள் எமக்கு உணர்த்தி இருந்த மையால் சமவாய்ப்புச் சட்டம் அரங்கேறாது என்றே எதிர்பார்த்தோம். அதனால் நாம் ஏமாறவில்லை. ஒருவேளை தமிழ் கட்சிகள் ஏமாந்திருக்கலாம்.

ஜிகே.யோகச்சந்திரன்,
வாச்சிக்குடா, அக்கரைப்பற்று-07.



## கௌரவமான செயல்

அன்பு முரசுக்கு

ஜனாதிபதித் தேர்தல் வரும், அதுதான் முதலில் வரும் என்று இராஜதந்திரியார் கூறியது பலித்துவிட்டது. காதிலை பூ சுந்தசாமியார் கூறியது போன்று இராஜதந்திரியாரின் வாய்க்குச் சர்க்கரை போடத்தான் வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் இரு கட்சிகளில் எதனையும் ஆதரிக்காது இருப்பதே கௌரவமான செயல்.

இ.பாலச்சந்திரன், திருமலை.

## என்ன நடவடிக்கை?

இனிய முரசே!

பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜனுக்கு படையினரும், பொலிசாரும் செய்த அவமானம் யாவரும் அறிந்ததே. இது பற்றி தொல்லை தவிர்க்கும் குழு விளக்கம் கேட்கிறதாம். இவர்கள் கேட்பார்கள். அவர்கள் கூறுவார்கள். யாருக்கு தேவை இந்த நாடகம்? சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வைக்கட்டும் பார்க்கலாம். விளக்கம் கேட்க ஒரு குழு தேவை தானா? இவர்கள் விளக்கம் கேட்டால், 'ஆம் இனத்துவேசத்தோடுதான் நடந்து கொள்வோம்' என்று உண்மையைக் கூறப் போகிறார்களாக்கும். ஏமாற்றுவதற்கு ஒரு அளவே இல்லையா?

எம்.சதீஸ்குமார், கொழும்பு-10.

## பூச்சாண்டி

தொல்லை தவிர்ப்புக் குழு அரசாங்கத்தின் தொல்லை தவிர்க்கும் குழு என்பது உண்மையிலும் உண்மை. உலக நாடுகளுக்கு இங்கு மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க குழுக்கள் உள்ளதாக பூச்சாண்டி காட்டுவதே இதன் வேலை. அடையாள அட்டை தொலைந்தால் உடனடியாக அதற்கான முறைப்பாட்டை பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக கூறப்பட்டது. ஆனால் அடையாள அட்டை தொலைத்த தமிழர்களுக்குத்தான் உண்மை தெரியும். மாதக் கணக்காக காத்திருக்கிறார்கள். இது மட்டுமா? பொலிஸ் நிலையங்களில் பதிவதற்கும் மாறுபட்ட விதிமுறைகள் மாறவேயில்லை. பத்திரிகைகள் சில தொல்லை தவிர்ப்புக்குழு அறிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால், பூச்சாண்டி காட்ட ஏதுவாக உள்ளது.

கு.ராசலிங்கம், கொழும்பு-06.

## கண்டிக்கவில்லை

முரசே!

சர்வதேச மத்தியஸ்தத்தை தாமும் கோருவதாக கூறும் டமில் கட்சிகள், அதனை மறுத்த அம்மையாரை கண்டிக்க முன்வரவில்லையே. முதுகெலும்பு இல்லாத அரசியல் நடத்திக் கொண்டு, 'நாமும்தான் தமிழ் மக்களது பிரதிநிதிகள்' என்று இவர்கள் கூறுவது வேடிக்கையிலும் வேடிக்கை. 'வந்தேறு குடிகள்' என்றாலும் வாலை ஆட்டுவர். எட்டி உதைத்தாலும் பல்லிளிப்பர் என்பது சரியாகத்தான் இருக்கிறது.

பி.மாதவன்,
மட்டக்களப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266


## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# அமரர் நடராஜா அற்புதராஜா

மலர்வு

16
09
1963



உதிர்வு

02
11
1999

## வழிகாட்டுமையா....

அகரத்தை முதற் கொண்டு அகிலத்தை ஆண்ட தமிழ்
ஆரணங்குக் கனி செய்து அழகுபார்த்தோர் எண்ணிறந்தோர்
இகமீதில் அவர் கணக்கு எண்ணிலடங்கா தெனினும்
ஈழத்தில் தமிழ் செய்தோர் ஏற்றமிகு வரிசையிலே
உனைப் போன்று உயிரோட்ட உணர்வனைய
ஊற்றுப்போல் எழுத்துக்களை
எவரொருவர் வடிக்கவல்லார்?
ஏக்கத்தால் நலிவடைந்து நாதியற்றுவிட்ட அன்னை
ஐம் பெருங் காப்பியத்தை அவனிக்கு அளித்தவளின்
ஒப்பரிய வளமதனை வாரி இறைத்தவனே
ஓடி மறைந்தாயோ தேடி அலைகின்றோம்!

எழுதுகோலை ஏந்தியவர்
எல்லோரும் அரியபெரு
எழுத்தாளராகி
நிலைபெற்று நின்றதில்லை
கருத்தாழம் மிக்க
கருவினையெலாம் வகுத்து
விருந்தாகப் படைத்தவர்கள் வெகுசிலரே!
அரசியலானாலும் அறிவியலானாலும்
அருங்கலைகளோடிணைந்த
கலைவடிவமானாலும்
பண்டைத் தமிழ் இலக்கியத்தின்
பண்பு நயமானாலும்
பகடி பண்ணிச் சிரிக்க வைக்கும்
படைப்புகளே யானாலும்
ஈழத்துத் தமிழர்களின்
எழுச்சி மிகு வரலாற்றை
காலவெள்ளம் கரைத் தொழித்து
உருக்குலைந்து போகாமல்
ஞாலமிது உள்ளவரை
காப்பாற்றிச் சேர்த்து வைக்கும்
கட்டுரைகளானாலும்
கற்பனையிலூற்றெடுக்கும்
கதைகளே யானாலும்
கள்ளங்கபடமற்ற

உள்ளத் தெளிவோடு
உன் பேனா உவந்தெழுதும்!

தமிழுக்கும் தமிழர்க்கும்
தீங்கு விளைவிப்பதற்கு
பொழுதைச் செலவிட்டு
பெரும் திட்டம் வகுப்போரை
கொடு வாளால் வெட்டி
வேரோடு சாய்ப்பதற்கு
கடுகளவேனும் நீ
அஞ்சாமல் சாடி வந்தாய்!
அநீதிதனை எதிர்க்க
அரிய தொரு கருவியென
பேனாமுனை தனையே
பேராயுதமாய்க் கொண்டாய்!
நாளை நடக்கின்ற
நிகழ்வுகளையெலாம் தேடி
வேளை வருமுன்னே
முன்னோடி நீ தந்தாய்!

தினமுரசு வார இதழ்
வருகின்ற வழிபார்த்து
சனசமுத்திரம் போல
சகலரையும் காக்க வைத்து
பெருமை சேர்த்த
பேராளன் நீயன்றோ?

ஈழத்தில் வெளியாகும்
வெகுபல ஏடுகளில்
ஈடிணையற்ற மக்கள்
ஆதரவைப் பெறவைத்தாய்!

அற்புதன் எனும் பேரில்
அற்புதப்படைப்புகளை
அள்ளி நீ அளித்த
அரியபெரும் வரிகளிலே
அச்சக மை காயுமுன்னே
காலனிடம் போனாயோ?
முரசம் எனும் மகிடமிட்டு
எழுதும் உன் எழுத்தெல்லாம்
அரிய பெரும் பொக்கிஷமாய்
ஆய்வாளர் மெச்சி நின்றார்!

நாடிழந்து நலிவடைந்து
நாதியற்றுக் கிடக்கின்ற
நற்றமிழன்னையினை
நானிலந்தன்னிலுயர்
கொற்றமொடு கொலுவிருக்க
தக்கதொரு வழிதேடி
உற்ற தோழர் தனைநாடி
உவப்புடனே சேர்ந்து நின்றாய்!

அன்னைத் தமிழணங்கை
எழுத்தால் அணிபூட்டி
வண்ணப் பேரழகியென
வரிசைபெற வைக்க எண்ணி
உண்மையுடன் உழைத்தவனே!
உன் எழுத்து அத்தனையும்
திண்ணம் நிலைபெற்று
திகட்டாத சுவைசேர்க்கும்!

சின்னஞ் சிறுவயதில்
சிறப்புடன் நீ செய்த பணி
இன்னொருத்தர்
எவர் நினைப்பார்?
பன்னிரெண்டு தரை மூன்று
ஆண்டுகள் நிறையுமுன்னே
உன்னைக் கொலை செய்தோர்
கொண்டபலனேது முண்டோ?
பென்னம் பெரிய இடி
எம் தலையில் வீழ்ந்ததுபோல்
பின்னமடைந்திதயம்
பெருந்துன்பம் மேலிட்டு
கண்ணீர் சுரந்து
பெரும் கடல் போல் பெருகுதையோ!
வண்ணத் தமிழணங்கும்
வாய் விட்டலறுகிறாள்!

உமைப் பிரிந்து ஏங்குகின்ற
எமைத்தேற்ற யாருளரோ?
நீ தொகுத்த வார்த்தைகளை
உன் நினைவில் தானிருத்தி
பணி தொடர முனைகின்றோம்
பக்கபலமாய் நின்றெமக்கு
தக்க வழிகாட்டுமையா!

~தினமுரசு ஊழியர்கள்~

# நடமாடுவோர்மீது தாக்குதல்!

மட்டக்களப்பில் இராணுவத்தினரை ஏற்றிய வாகனத் தொடரணி செல்லும் போது படையினரையும் பொலிஸாரையும் தவிர வேறு நபர்கள் தெருக்களில் நடமாட முடியாது.

இராணுவ வாகனத் தொடரணிகள் வரும்போது, பொது மக்களும், அவர்களது வாகனங்களும் எங்கேயாவது ஒதுங்கிவிட வேண்டும்.

இராணுவ வாகனத் தொடரணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எதிர் பாராத விதமாக முன்கூட்டியே வீதிக்கு வரும் மோட்டார் சைக்கிள் அணித் துருப்பினர் வீதியோரங்களில் மிக வேக மாக மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தி வருகின்றார்கள். அப்பொழுது அவர்களின் கைகளில் நீளமான பிரம்புகள் இருக்கும். அதனால் தெருவோரங்களில் அகப்பட்டோ ருக்கு அடித்துச் செல்கிறார்கள்.

புலிகளிடமிருந்து தமது வாகனத் தொட ரணியைப் பாதுகாப்பதற்கும், தெருவில் கண் ணில் அகப்பட்டோருக்குப் பிரம்படி கொடுத்து அட்டகாசம் புரிவதற்கும் என்ன சம்பந்தம் உண்டு என்று கேள்வி எழுப்பு கிறார்கள் பாதிக்கப்பட்டோர்.

# இலங்கை நேரம்

## குளறுபடி ஏற்படும்

இலங்கையின் உண்மையான நேரத்திலும் பார்க்க அரை மணித்தியாலத்தை அரசு கூட்டி வைத்துள்ளது. இவ்வருட இறுதியில் இரண்டாயிரமாம் ஆண்டு அரை மணி நேரம் முன்னதாகவே நமக்கு உதயமாகிவிடும் இந்த நேரத்தில் பிறக்கப்போகும் குழந்தைகளின் பிறப்புப் பதிவில் பாரிய குளறுபடி ஏற்படும்.

1999 டிசம்பர் 31ம் திகதி உண்மையான நேரம் இரவு 11.30க்குப் பிறக்கும் குழந்தைகளை 2000மாம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி பிறந்ததாக பதிய வேண்டிவரும். இதனால் மருத்துவமனை வட்டாரங்கள் பெரும் குழப்பத் திற்கு உள்ளாக நேரும்.

பிறப்புப் பதிவும் பிழையான திகதியைக் கொண்டிருக் கும். எனவே அரசு வருட இறுதிக்கு முன் பழைய நேரத்தை நடைமுறைக்கு கொண்டு வருவது அவசியமாகின்றது.

குறிப்பிடக்கூடிய எப்பயனையும் அரசுக்கு நல்காத நேர மாற்றத்தை அரசு வருட இறுதிக்கு முன் சீர்செய்யுமா?

அடுத்த ஆண்டு முதலில் பிறக்கும் குழந்தைகளை பதிவு செய்ய உலகெங்கும் முண்டியடிக்கிறார்கள். இவ்வாறான நிலையில் நம்நாட்டு மக்கள் அந்த வாய்ப்பை இழக்கப் போகிறார்களா?!

*சி.வி.சிவப்பிரகாசம்-நாவலப்பிட்டி.*

# மாவு, பருப்பு விலைக் குறைப்பு!

## நன்மை கிட்டவில்லை!

ஜனாதிபதித் தேர்தல் பற்றி அறிவிக்கப்பட்ட சூட்டோடு சூடாக அத்தியாவசியப் பொருட்களான கோதுமை மாவுக்கும், பருப்புக்கும் உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் விலைக் குறைப்புச் செய்யப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த அறிவிப்பு வந்து பல நாட்களாகியும் இன்றுவரை குறித்த உணவுப் பொருட்களின் விலையில் ஒருசதமேனும் குறைய வில்லை. பழைய விலைக்கே மாவும், பருப்பும் விற்கப்படுகிறது. கூட்டுறவுக் கடைகளில்கூட அதே பழைய விலைக்கே இந்தப் பொருட் கள் விற்கப்படுகின்றன.

புதிய விலைக் குறைப்புப் பற்றிக் கேட்டால் அது பற்றித் தங்களுக்கு இதுவரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை என்று கூறப்படு கிறது.

உலக சந்தையில் மாவுக்கும் பருப்புக்கும் திடீர் விலைக் குறைப்பு ஏற்பட்டதால் உள்ளூரில் மாவுக்கு ஒரு ரூபா குறைக்கப்பட்டுள்ளது இதனால் பாணுக்கும் விலை குறையும். என்று அரசு அறிவித்தது.

எல்லாம் அரசியல் நோக்கம் கருதிய பிரச்சார யுக்திகள்தான் என்று பாவனையாளர்கள் மனம் சலித்துக் கொள்கிறார்கள்.

இதேவேளை கடந்த ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நாடு பூராவும் அயடீன் கலக்காத உப்பு விற்பனை சட்ட விரோதமானது என அறிவிக்கப்பட்டிருந்தது.

# தடைவிதிப்பு!

கிழக்கு மாகாணத்தில் இராணு வத்தினர் இல்லாத பகுதிகளில் நவம்பர் மாதம் தொடக்கம் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் அமுல்படுத்த முடி யாது. ஆனால் கல்வி, சுகாதாரத் திட்டங் களுக்கு இந்தத் தடையிலிருந்து விலக்களிக் கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவி அமைப்புக்களுக்கே இந்தக் கட்டளை இரா ணுவ அதிகாரிகளால் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 22.10.99 அன்று பொலன்னறுவை மின்னேரியிலுள்ள கிழக்கு இராணுவ நட வடிக்கைத் தலைமையகத்தில் கிழக்கு பிராந் திய ஆணையிடும் அதிகாரி பிரிகேடியர் செனவிரத்தின மற்றும் மாவட்ட பிரிகேடியர் கள் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தி லேயே இது அறிவிக்கப் பட்டது.



## 2 வது பிறந்தநாள் வாழ்த்து

**சர்மிளா அன்ரனிற்றோ**

**07.11.1999**

செல்வி சர்மிளா தனது இரண்டாவது பிறந்த தினத்தை 07.11.1999 அன்று அவுஸ்திரேலியாவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறாள். அன்பு அப்பா, அம்மா, மற்றும் அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென பேபி சர்மிளாவை வாழ்த்துகின்றனர்.

*தகவல்: அப்பா, அவுஸ்திரேலியா.*

# விளம்பரப் பகுதி விளம்பரப் பகுதி


## ஜேர்மன்-தமிழ் அகராதி

- ☆ 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்கள்.
- ☆ இலக்கண விளக்கம்.
- ☆ புதிய அணுகுமுறையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.
- ☆ மாதிரிக்கடிதங்கள்.

தொடர்பு கொள்ளவும்–
K.Chandrasegaran (Swiss) 01/461 57.49, 01/241 16 30
Natel 079/285 83 09, Kanonengasse 19,8004 Zurich
V.Sivanesarajah (Swiss) 01/492 02 61

தமிழ் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

## CIMA ASIAN TAKE AWAY

Indische Spezialitated

இந்திய-இலங்கை அறுசுவை உணவுகளை சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்

CIMA ASIAN TAKE AWAY

Kanonengasse 19, 8004 Zurich. Zurich Kaserne மின் பின்புறம்

தினசரி சைவ–அசைவ உணவுகள்

புரியாணி
தண்டூரி வகைகள்
சப்பாத்தி

கொத்து ரொட்டி
நாண்
சமோசா மற்றும்

அனைத்துவகை தமிழ் உணவுகள்

Take away & Party Service

**CIMA ASIAN TAKE AWAY**

Kanonengasse-19,
8004 Zurich.

Tel: 01/241 16 30 Natel 079/ 285 83 09


## நன்றி நவிலல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 29 ↓ 06 ↓ 1934 | 03 ↓ 10 ↓ 1999 |

**குலமணி பொன்னுத்துரை**

(இளைப்பாறிய ஆசிரியை சண்டிலிப்பாய்)

எங்கள் குடும்பத்தின் என்றும் குலவிளக்காய் வாழ்ந்து–பள்ளிப் பிள்ளைகளின் வாழ்வில் என்றும் ஒளிவிளக்காய் மிளிர்ந்து, திக்கற்று கலங்கி நின்றோர் வாழ்வில் என்றும் கலங்கரை விளக்காய்த் திகழ்ந்து– மறைந்தாலும் நீர் என்றுமே எம் நெஞ்சில் அணையா விளக்காய் வாழ்கின்றீர்!

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது அன்புத் தாயாரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி, தொலைநகல், கடிதம் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மலர் வளையங்கள் வழங்கி யோருக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவி செய்தோருக்கும், அதன் பின் நடந்த 31ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக் கும் பாடசாலை அதிபர், ஆசிரிய, மாணவர்கட்கும் எமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு: கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளை, உற்றார் உறவினர்.

*தகவல்: மனோன்மணி- 34683245/PARIS*
*கிளி-3738703- LONDON*
*இன்பம்-LONDON*

## ஓராண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1923 ☆ 06 ☆ 18 | 1998 ☆ 10 ☆ 26 |

**அமரர் திரு. தம்பிமுத்து நடராசா**

**ஓய்வு பெற்ற காங்கேசன்துறை கூட்டுத்தாபன ஊழியர்**

எம் அன்பு இதய தெய்வமே
ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் அன்பு நினைவுகள்
என்றென்றும் மாறாது.
இன்னல்கள் பெரிதெனினும்
இன்முகம் காட்டி நின்றீர்கள்.
இன்று எம்மைவிட்டு– நீங்கள்
இறைவனிடம் சேர்ந்து விட்டீர்கள்.
நீங்கள் இல்லாப் பொழுதுகளோ
நீண்டெம்மை வதைக்குதையா!

**உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவி,**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*தகவல்: மகன் ந.செல்வச்சந்திரன், சிலாபம்.*


## உலகப் புகழ்பெற்ற எக்ஸ் ஒயில்

- ★வாதத்தால் வரும் வலிகள்
- ★உணர்ச்சியற்ற பாகங்கள்
- ★பிரயாணக்களைப்பு
- ★தலைப்பாரம்
- ★தலைச்சுற்று
- ★ஜலதோஷம்
- ★வயிற்றுவலி
- ★தலைவலி
- ★காய்ச்சல்
- ★பல்வலி
- ★காதுவலி
- ★மூக்கடைப்பு
- ★பூச்சிக்கடிகள்
- ★தசை வலிகள்
- ★சுளுக்கு ★இருமல்
- ★மதுவால் ஏற்படும் பிரச்சினை



Rs. 20.00 Only (3m.l)

**ஆகியவற்றிக்கு உடனடி நிவாரணி**

ஏக விநியோகிஸ்தர்

**SINGHA HOLDINGS (PVT) LTD.**

14, Ground Floor-Welikada Plaza-Rajagiriya.
Tel: 888214 Fax: 682984

## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. 298619, 97546610.

## BRIGHT BOOK CENTRE (PVT) LTD

தபால் மூலம் கல்வி நெறிகள்

- ☆ Nursery Teacher Training Course (NTTC)
  பாலர் பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி
- ☆ Method of Computerised Book Keeping & Accountancy (MCBA)
  கணனியின் உதவியுடன் கணக்கு பதிவியலும் கணக்கீடும்
- ☆ Spoken English & Sinhala - பேச்சு ஆங்கிலம் / சிங்களம்
- ☆ Business English - வியாபார ஆங்கிலம்.

மேலதிக விபரங்களுக்கு 8.50 முத்திரையொட்டப்பட்ட தபாலுறையுடன் கீழ்க்காணும் விண்ணப்பப் படிவத்துடன் தொடர்பு கொள்க.

APPLICATION FORM

NAME : ..........
ADDRESS : ..........
..........
விரும்பும் பாடநெறி : ..........

BRIGHT FUTURE IN YOUR HAND

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
**S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX. COLOMBO - 11.**
**P.O. BOX NO:162, TELEPHONE: 434770.**

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ;பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
**Fax-00941342464.**
**Tel-00941431137.**
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
**342463-344831**

# அற்புதன் அவர்களின் மறைவு!

மிகக் குறுகிய காலத்தில் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைக் கொள்ளை கொண்ட 'தினமுரசு' ஆசிரியர் அற்புதன் அவர்களின் மறைவை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தினமுரசின் எழுத்துக்களையும் அதன் வண்ணங்களையும் அதன் ஆசிரியர் அற்புதனையும் பிரித்துப்பார்க்க முடியாது. இந்த மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை.

1963 செப்டம்பர் 16ம் திகதி யாழ்- அராலியில் நடராஜா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். அவருக்கு ஒரு சகோதரி இருக்கிறார். மிக நீண்டகாலம் நல்லூருக்கு சமீபமாக முடமாவடியில் வசித்தவர். ஆரம்பக்கல்வியை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையிலும் க.பொ.த. (உயர்தரம்) வரையிலான கல்வியை வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரியிலும் மேற்கொண்டார். பாடசாலை நாட்களிலும், பாடசாலை விட்டு வெளியேறிய பின்னரும் தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்து த.வி.கூட்டணியினர் நடாத்திய பிரச்சார நடவடிக்கைகளால் ஈர்க்கப்பட்டார். காலஞ்சென்ற த.வி.கூ செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம், தலைவர் சிவசிதம்பரம் ஆகியோரின் பேச்சுக்கள் அவரைக் கவர்ந்தன. அற்புதராஜா அவர்கள் தனக்குள்ளும் பேச்சாற்றலைக் கொண்டிருந்தார். சிறுவயதிலிருந்தே கவிதை, கட்டுரை என எதையாவது எழுதும் பழக்கம் அவரிடமிருந்தது. 1974 தொடக்கம் 1977 வரை அவர் பரவலான சமூக அனுபவங்களைப் பெற்றிருந்தார்.

1980 ஆம் ஆண்டின் முற்பகுதியில் யாழ் குடாநாட்டின் உயர்தர, சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதியில் இழைக்கப்பட்ட அநீதிக்கெதிராக 'மாணவர் ஒன்றியம்' என்ற பெயரில் மாணவர்கள் யாழ் திறந்த வெளியரங்கில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் அற்புதராஜா உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய தலைமை விமர்சனத்துக்குள்ளானது. புதிய தலைமை ஒன்று வலியுறுத்தப்பட்டது.

இக் காலகட்டத்தில் 'ஈழமாணவர் பொது மன்றம்' (GUES) என்ற அமைப்பு ஈழவிடுதலைக்காகவும், சமூக மாற்றத்திற்காகவும் மாணவர்கள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்து வந்தது. அந்த மாணவர் அமைப்பு ஒரு சர்வதேசிய உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. உலகில் பல போராட்டங்களில் மாணவர்களின் பங்களிப்பு பற்றிக் கலந்துரையாடப்பட்டன. 1960களின் இறுதிப்பகுதியில் ஃபிரான்சில் எழுச்சிபெற்ற மாணவர் இயக்கம், 1970களின் நடுப்பகுதியில் தென்னாபிரிக்காவில் எழுச்சி பெற்ற மாணவர் இயக்கம் மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் மாணவர் இயக்கங்களின் பாத்திரம் குறித்தும் அலசப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் மாணவர் அமைப்பாக இருந்த ஈழமாணவர் பொதுமன்றம் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதற்காக இவற்றையெல்லாம் எடுத்துச் சொன்னது. இந்த அமைப்பு மாணவர்கள் மத்தியில் வேலை செய்வதுடன் நின்றுவிடாது பொருளாதார ரீதியாகவும், சாதி ரீதியாவும் ஒடுக்கப்பட்ட கூலி விவசாயிகள், வறிய மீனவர்கள், பெண்கள், புத்திஜீவிகள் எனப் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் செயற்பட்டுவந்தது. இந்த மாணவர் அமைப்பு படைப்பாற்றல் கொண்ட ஒரு இளைஞர் குழாத்தினை உருவாக்கியது. அவர்களில் 'ரமேஸ்' என்ற அற்புதராஜா அவர்களும் ஒருவர்.

1981 இல் நடைபெற்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அமைப்பாளர் மாநாட்டில் இவர் பங்குபற்றினார். இயக்கத்தை முன்கொண்டு செல்வதற்கான கொள்கை, நடைமுறைகள் தொடர்பான ஆர்வமூட்டும் விவாதங்களில் ஈடுபட்டார். விடயங்களை தர்க்க ரீதியாக முன்வைக்கும் திறமை அவரிடம் காணப்பட்டது.

அமைப்பாளர் மாநாட்டின் பின் அவர் இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த மாக்சிச லெனினிச (நக்சலைட்) குழுக்களின் அங்கத்தவர்களுடனும் மற்றும் இலக்கிய வாதிகளுடனும் பழகும் சந்தர்ப்பத்தினைப் பெற்றார். இக்காலத்தில் தத்துவம், அரசியல், இலக்கியம் என பல நூல்களை அவர் வாசித்தார். அவருடைய எதிர்காலக் கருத்தியலைத் தீர்மானிக்கும் முக்கியமான காலகட்டமாக இந்தக் காலம் அமைந்தது என்றால் மிகையில்லை. வேகமாக வாசிக்கும் ஆற்றலும், கிரகிக்கும் ஆற்றலும், எழுதும் ஆற்றலும் அவருக்கு கிடைத்த கொடைகள். மாக்ஸ், எங்கல்ஸ், லெனினால் எழுதப்பட்ட பல பிரபலமான தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களையும் மாக்சிம் கார்க்கியின்-தாய், நிரஞ்சனாவின்-நினைவுகள் அழிவதில்லை, ராகுல சாங்கிருத்தியானின்-வால்காவிலிருந்து கங்கைவரை, யூலியஸ் பூசிக்கின் -தூக்குமேடைக் குறிப்பு உட்பட பல நூல்களை வாசித்தார். அந்தக் காலத்தில் கவிஞர் இன்குலாப்பினால் எழுதப்பட்ட-சூரியனைச் சுமப்பவர்கள் கவிதைத் தொகுதி அற்புதனை மிகவும் கவர்ந்த கவிதைத் தொகுதியாகும். நவசீனாவின் தந்தை மாவோவின் தேர்ந்தேடுக்கப்பட்ட -இராணுவப்படைப்புக்கள் அவரால் ஊன்றிப்படிக்கப்பட்டன. அவருடைய இறுதிக்கால எழுத்துக்கள் பலவற்றிலும் அது தாக்கம் செலுத்தியது.

ஈழமாணவர் பொது மன்றத்தின் வெளியீடான 'ஈழமாணவர் குரல்', 'ஈழமுழக்கம்', ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் 'செந்தளம்', ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியின் 'செந்தணல்' ஆகிய பத்திரிகைகளில் எல்லாம் திரு.அற்புதராஜா ரமேஸ் அவர்கள் எழுதியவை ஏராளம்.

1982-83களுக்கிடையே அவருடைய எழுத்துக்களில் சோவியத் சார்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்திய சார்பு நிலைப்பாடுகள் காணப்பட்டன. தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்கு சோவியத் யூனியனதும், இந்தியாவினதும் பங்களிப்பை உறுதியாக வலியுறுத்தினார்.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், படையினர் மேற்கொண்ட கைதுகளுக்கெதிராகவும் 1982இல் யாழ் பெரிய கோவிலிலிருந்தும், சென் ஜேம்ஸ் தேவாலயத்திலிருந்தும் புறப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலங்களில் முன்னணியில் நின்று செயற்பட்டார். பெரிய கோவிலிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் பொலிசாரின் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள், வெகுஜனங்கள் மத்தியிலான பிரச்சார வேலைகளுடன் மாத்திரம் அவர் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு தொழிற்சங்ககங்கள், தமிழ் அரசியல் இயக்கங்கள், கட்சிகள், ஒன்றிணைந்து உருவான கூட்டுக் குழுவிலும் அங்கம் வகித்தார். இந்தக் கூட்டுக்குழுவின் நடவடிக்கைகளில் இவரின் பங்கு கணிசமானது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை எம்பிலிப்பிட்டியாவிற்கு மாற்றும் முயற்சிக்கு எதிராக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் நடத்திய போராட்டம்.

காங்கேசன்துறைச் சீமெந்து தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க கோரி நடாத்திய போராட்டம் என்பவை குறிப்பிடத்தக்கவை.

1984இல் நடைபெற்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் முதலாவது காங்கிரசில் பங்குபற்றிய திரு.ரமேஸ் இயக்கத்தின் கொள்கை திசைவழி பற்றி ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கினார்.

அவர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவ அமைப்பான மக்கள் விடுதலைப்படையின் அரசியல் கமிஷாராக விளங்கினார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருந்தபோது அதற்குரிய நிதி ஆதாரங்களை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்டவர்.

ஜே.ஆர். காலத்தில் இலங்கையில் அமெரிக்காவின் தலையீட்டை ஆட்சேபித்து சென்னையில் அமெரிக்க தூதரகத்தின் முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் முன்னணியில் நின்றவர்.

'ஈழமாணவர் குரல்' பத்திரிகையை வீடுவீடாக சென்று விற்றது, மட்டக்களப்பில் 1982 இல் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின்போது யாழ்ப்பாணத்தின் கடை கடையாக ஏறி இறங்கி பொருள்கள் சேர்த்து அனுப்பியது உட்பட பல்வேறு பணிகளையும் அவர் சகதோழர்கள், நண்பர்களுடன் சேர்ந்து மேற்கொண்டார்.

இந்த வேலைகள் எல்லாம் அரைப்பட்டினி, கால் பட்டினி கிடந்து கல்லிலும், முள்ளிலும் நடந்து, கட்டாந்தரையில் படுத்து மேற்கொள்ளப்பட்டவை. மீசை அரும்பாத மெலிந்த தோற்றம் உள்ள மிக இளம் பருவமது. சிகரட்டைப் பிடித்துக்கொண்டு இந்தச் சமூகத்தின் மாற்றம் பற்றிய நம்பிக்கைகளை மனதில் தேக்கி வைத்துக்கொண்டு அவரும் அவரது நண்பர்களும் உழைத்த காலம் அது. அந்தக் காலம் மறைந்து விட்டது... இப்போது அவரும்....!

உட்கட்சி முரண்பாடுகள் தீவிரப்பட்டிருந்த நிலையில் 1986 இன் பிற்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். விடுதலைப் புலிகளால் தடை செய்யப்பட்டது. அதன் பின்னர் சென்னை வந்த அற்புதராஜா அவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இன் முன்னாள் மத்திய குழு உறுப்பினரும், மக்கள் விடுதலைப்படையின் தளபதியும் தற்போதைய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் சேர்ந்து மீண்டும் செயற்படத் தொடங்கினார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து பிரிந்து வந்த ஒரு பிரிவினருடன் சேர்ந்து ஈழத் தேசிய விடுதலை முன்னணி அமைக்கப்பட்டது. பின்னர் சிறிது காலத்தில் அவர்கள் விலகிச் செல்ல ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைக்கப்பட்டது. பல்வேறு பொருளாதார நெருக்கடிகள், பசி பட்டினிக்கு மத்தியிலும் மனம் தளராது தொடர்ந்து செயற்பட்டார்.

1990 இல் மீண்டும் இலங்கைக்கு வந்து தமது அரசியற் செயற்பாட்டை ஆரம்பித்தார்கள். இலங்கை வானொலியில் தொடர்ச்சியாக ஒலிபரப்பப்பட்ட மக்கள் குரல் வானொலி நிகழ்ச்சி திரு.அற்புதராஜா அவர்களாலேயே நடத்தப்பட்டது.

தினமுரசு பத்திரிகை மூலம் தமிழ் அரசியல் உலகத்தையும், பத்திரிகை உலகத்தையும் அதிர வைத்தார். அவர் தான் வகுத்துக் கொண்ட பாதையின் படியே பத்திரிகையை நடாத்தினார். ஆர்ட்டிக் கண்டம் வரை உலகம் முழுவதும் வாசிக்கப்படும் பத்திரிகை தினமுரசு. பத்திரிகைத் துறையில் அவர் எந்தப் பல்கலைக் கழகத்திலோ, உயர் கல்வி நிறுவனத்திலோ நிபுணத்துவப் படிப்புப் படிக்கவில்லை. சிறுவயதில் கொப்பியில் எழுதிப் பழகியது தான் கைகொடுத்ததென்பார்.

1994 பாராளுமன்றத் தேர்தலில் அவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

அவரின் இயக்க வாழ்க்கையிலிருந்து பத்திரிகை உலக ஜாம்பவானாகியது வரை தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதில் எப்போதும் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. படாடோபமற்ற எளிமையான வாழ்க்கையையே அவர் விரும்பினார். சில வருடங்களுக்கு முன் அவருடைய தாயார் யாழ்ப்பாணத்தில் மரணமானார். அவர் மரணச்சடங்குக்குச் செல்லவில்லை. அவரது சொந்த வாழ்க்கை துயரம் மிக்கதாக இருப்பினும் அதனை அவர் மற்றவர்களுக்கு வெளிக்காட்டியது கிடையாது. மிக இளவயதிலேயே தனது பெற்றோரை விட்டுப் பிரிந்த அவர் குறுகிய காலமே தனது மனைவியுடனும், குழந்தையுடனும் வாழமுடிந்தது.

எமது சமூகத்தில் உருவாகிவிட்ட வன்முறைக் கலாசாரம்- உள்ளிருந்தே கொல்லும் வியாதி- எமது சமூகத்தின் சகல தளங்களிலும் புகுந்து விட்டது. அது தலைசிறந்த ஆற்றலுள்ள மனிதர்களை சமூகத்தில் இல்லாமல் செய்து கொண்டு வருகிறது. அதற்குத் தற்போதைய பலி திரு. நடராஜா அற்புதராஜா அவர்கள்.

**அவருக்கு எம் கண்ணீர் அஞ்சலிகள்.**

# இரு கட்சிகளிலும் இனத்துவேஷிகள் உள்ளனர்

## இ.தொ.கா.தலைவர் தொண்டா முரசுக்கு அளித்த பேட்டி

1994இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருந்தபோது அமைச்சர் தொண்டமானிடம் 'முரசு' பேட்டி எடுத்திருந்தது. இம்முறை ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டும் தொண்டமானிடம் பேட்டி கேட்டிருந்தோம். விரைவில் தருவதாக ஒப்புக்கொண்டிருந்தார். அதற்குள் அவர் சிந்தனையை மரணம் நிறுத்திவிட்டது.

1994இல் தொண்டமான் முரசுக்கு அளித்த பேட்டி முரசு 69இல் இடம்பெற்றிருந்தது. அதனை இந்த நேரத்தில் மறுபிரசுரம் செய்வது மிகப்பொருத்தம் என்று கருதுகிறோம். இப்பேட்டி ஒலிப்பதிவு நாடாவிலும் பதிவு செய்யப்பட்டதாகும்.



**கேள்வி: 82வது வயதில் பிரவேசித்திருக்கிறீர்கள். நீண்டகால அரசியல் அனுபவத்தைக் கொண்டிருக்கும் தாங்கள் இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரம் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்: இதுவரைக்கும் இலங்கையில் இனத்துவேஷ அடிப்படையிலேயே அரசாங்கங்கள் ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்து வந்துள்ளன. இப்பொழுது இனத்துவேஷத்தை விட்டு பொருளாதார அடிப்படையில் நாட்டை முன்னேற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதைக் காணக் கூடியதாகவிருக்கிறது.

**கேள்வி: ஐ.தே.க. அரசின் காலத்தில் மலையக மக்களுக்கு வாக்குரிமையும் தங்களுக்கு அமைச்சர் பொறுப்புக்களும் தரப்பட்டன. இன்று தாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கின்றீர்கள். இந்நிலையில் தாங்கள் ஐ.தே.க.வுடன் கொண்டுள்ள உறவு எத்தகையது?**

பதில்: 17 வருடங்கள் ஐ.தே.கட்சியில் இணைந்து அமைச்சர் பதவி ஏற்றிருந்தமையினால் தோட்டத் தொழிலாளர்களின், பிரஜா உரிமை, வாக்குரிமை போன்ற அடிப்படை உரிமைகள் சிலவற்றையாவது பெற்றுக்கொடுக்கும் வாய்ப்பு இருந்தது. இவை பூரணமானதல்ல. ஆனால் இதுதான் அடிப்படை. இதனை அடித்தளமாக வைத்து மக்களுடைய ஏனைய உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஐ.தே.கட்சியுடனான எமது உறவு எப்போதுமே LOVE AND HATE அதாவது அன்பும் அதே நேரம் வெறுப்பும் என்ற ரீதியில்தான் அமைந்திருந்தது. அண்மைக் காலங்களில்கூட சில சிக்கல்கள் எழுந்தன. அடிப்படை உரிமைகளை மட்டும் பெற்றால் போதாது. அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும்.

இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களைப் போன்று தோட்டத் தொழிலாளர்களும் வாழ்வதற்கேற்ற வழிமுறைகளை வகுத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கைகளை வற்புறுத்தியபோது அதற்குரிய மதிப்புத் தரப்படவில்லை. அத்தகைய எண்ணமும் அவர்களுக்கு ஏற்படவில்லை. தேர்தலுக்கு முதல் நாளன்றுகூட ஒரு கசப்பான சம்பவம் நடைபெற்றது.

வாக்குகள் எண்ணும் இடங்களில் எங்கள் சார்பில் கண்காணிப்பு முகவர்களாக சிலரை நியமித்து, உத்தியோக ரீதியிலான கடிதங்கள் வழங்கப்படவேண்டும் என்று கட்சி தலைமைப் பீடத்தைக் கேட்டுக்கொண்டோம். எமது கோரிக்கை உதாசீனம் செய்யப்படுவதை உணர்ந்து இறுதி நேரத்தில் ஓர் எச்சரிக்கையினை விடுத்தேன்.

தொழிலாளர்கள் எவரும் வாக்களிக்க வரக்கூடாது என்ற அறிக்கையினை விடப் போகிறேன் என்று எச்சரிக்கும் அளவு நிலமை சென்றது. அந்த அளவுக்கு அந்தக் கட்சியுடன் எமது உறவு இருந்து வந்துள்ளது.

இந்நாட்டில் இப்போதுள்ள நிலையில் ஐ.தே.கட்சி அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டு அமைப்பு ஆகிய இரண்டு கட்சிகளில் ஒன்றுதான் ஆட்சி அமைக்க முடியும். இக்கட்சிகளில் ஏதாவது ஒரு கட்சியுடன் ஒத்துப்போவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே ஐ.தே.கட்சியுடன் இத்தனை காலம் உறவு பூண்டிருந்த போதிலும் அது அந்யோன்யமான உறவாக இருந்ததில்லை என்பதுதான் நான் கண்ட அனுபவம்.

**கேள்வி: தங்களுடைய மகன் திரு.இராமநாதன் முன்னர் மத்திய மாகாண சபையில் ஓர் அமைச்சராக இருந்தவர். ஆனால் தங்கள் நடவடிக்கைகள் பேரப்பிள்ளையான ஆறுமுகம் தொண்டமானை அரசியல் ரீதியாக ஊக்குவிப்பதாக இருக்கின்றது. ஆறுமுகம் தொண்டமான் தங்களுடைய அடுத்த வாரிசாக வருவார் என்று பேசப்படுகின்றது. இது குறித்து என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்: இது ஒரு தப்பான கணிப்பாகும். இராமநாதன் என்னுடைய மகன் என்பதனால் அந்தப் பதவிக்கு அவர் வரவில்லை. எங்களில் பலதரப்பட்ட நிலையிலிருந்தும் பலர் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். அதேபோல என் மகனும் ஒரு சந்தர்ப்பத்திலே வர நேரிட்டது. அதே போலத்தான் என் பேரனும்-சந்தர்ப்ப வசத்தால்-எதிர்பாராத வேளையில் தேர்தல் வந்தமையினால்-மக்களும் விரும்பினார்கள். அவரும் தேர்தலில் நின்றார்.

இடைக்காலத்தில் திரு.செல்லச்சாமியால் ஏற்பட்ட சிக்கல்களில் எனக்கு உதவி புரிய வந்த என் பேரன் சந்தர்ப்பத்தால் தேர்தலில் நின்று ஜெயித்தாரேயல்லாமல், என்னால்தான் அவர் முன்னுக்குக் கொண்டு வரப்படுகிறார் என்றோ வாரிசாக உருவாக்கப்படுகிறார் என்றோ கூறுவது தப்புக்கணக்கு.

**கேள்வி: எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தங்கள் நிலைப்பாடு எப்படி இருக்கும்?**

பதில்: இ.தொ.கா.எப்போதும் தனது கொள்கைக்கு மதிப்பளிக்குமேயல்லாமல் தனிப்பட்டவருக்கோ வேறு ஸ்தாபனங்களுக்கோ மதிப்பளிக்கப் போவதில்லை.

நாட்டில் அமைதி நிலவவேண்டும். ஒரு ஸ்திரமான அரசாங்கம் இருக்க வேண்டும். அப்போதுதான் எமது சமூகம் போன்ற பின்தங்கிய மக்களுடைய அபிலாசைகள் நிறைவேற வாய்ப்பு ஏற்பட முடியும்.

ஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்ட இந்த இரு கட்சிகளில் எது முயற்சித்து வெற்றியீட்டுகிறதோ அக்கட்சி வெற்றிபெற நாம் ஒத்துழைப்பினை நல்குவோம். இதற்காக ஐ.தே.கட்சியைத்தான் ஆதரிப்போம் என்றோ காமினி எமக்கு வேண்டியவர்; அவருக்கு உதவுவோம் என்றோ நாம் வாக்களிக்கப் போவதில்லை. எமது சமூகத்துக்கு வேண்டிய உரிமைகளை எவர் பெற்றுத் தருவாரோ அவரையே நாம் ஆதரிப்போம்.

**கேள்வி: இலங்கையில் கடந்த 17 வருடகாலமாக நிலவிய ஐ.தே.க. ஆட்சிபற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்: ஐ.தே.கட்சி ஒரு மிதவாதக் கட்சி. அமைதியான கட்சி-வசதி படைத்தவர்கள் பெரும்பாலானோரை அணைத்து வைத்திருக்கும் கட்சி. ஆனால் பல சந்தர்ப்பங்களில் எம்மையும் சர்வசாதாரணமாக எண்ணிக் கணக்குப்போடும் நிலைக்கு அவர்களும் வந்துவிடுகிறார்கள்.


இரு கட்சிகளிலும் இனத் துவேஷிகள் இருப்பினும் இன்று சிறிதளவு அடங்கியே இருக்கிறார்கள். காங்கிரசுக்கும் ஒரு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது என்பதனை இரு சாராரும் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

### தமிழர் என்று சொல்ல புலிகளே காரணம்

**கேள்வி: மூன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளை தாங்கள் கண்டுள்ளீர்கள். இவர்கள் குறித்து தாங்கள் கொண்டுள்ள கண்ணோட்டம் என்ன?**

பதில்: இவர்களில் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும் திரு.பிரேமதாசாவும் ஓரளவு பொறுப்புள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால் திரு.விஜேதுங்காவை அவர்களுடன் ஒத்துப்பார்க்க முடியாது. இருப்பினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்று கூறுவதில் அவ்வளவு பெரிய மதிப்பு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. திரு.பிரேமதாசாமீது அரசியல் குற்றச்சாட்டுக்களை (IMPEACHMENT) கொண்டு வந்து ஆட்டிவைத்தார்கள். அவரே மிகவும் விவேகமானவர்-அவரையே ஆட்டி வைத்துவிட்டார்கள். அவரே ஆடிப்போய்விட்டார். நிறைவேற்று அதிகாரம் என்று சொல்வதெல்லாம் வெறும் பேச்சுக்கு அலட்டிக்கொள்கிறார்களே தவிர வேறு எதுவுமில்லை. என்னைப் பொறுத்தவரை இப்பதவி ஒரு பெரும் பதவியாகத் தெரியவில்லை.

திரு.விஜேதுங்கா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிதான். ஆனால் அவரையே பாராளுமன்றத் திறப்பு விழாவுக்கு வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் வரவேண்டாம் என்றார்களோ அல்லது இவராக போகாமல் விட்டாரோ தெரியாது. ஆனால் அவர்கள் வரவேண்டாம் என்று சொன்னதாகத்தான் செல்கிறார்கள். பிரேமதாசா தனக்கெதிரான குற்றச்சாட்டுக்களுக்கு நேராகப் பதில் கூறக்கூடிய திராணி இருந்தது. ஆனால் இவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவரானால் இவரால் ஏன் பாராளுமன்றம் போயிருக்க முடியாது? ஆகவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்பது வெறும் பூச்சாண்டி காட்டுவதைப் போலத்தான் எனக்குப்படுகிறது.



**கேள்வி: த.வி.புலிகள் குறித்து தங்கள் உண்மையான நிலைப்பாடு என்ன?**

பதில்: என் மனதுக்கு இன்று தமிழன் என்று நாம் சொல்லுவதற்கு அவர்கள்தான் காரணம் என்று படுகிறது. அவர்களுடைய போக்கும் நடவடிக்கைகளும் நமக்குப் பிடிக்காமலிருக்கலாம். இலங்கையில் மட்டுமல்ல, உலகின் வேறு எந்த நாட்டிலும் தமிழன் என்று மதிக்கப்படுவதெல்லாம் இன்று அவர்களால்தான். இதனை எந்தத் தமிழனும் புறக்கணிக்க முடியாது.

**கேள்வி: தேர்தலுக்கு முன்னர் தொண்டா அஷ்ரப் ஒப்பந்தம் என்ற பெயரில் வடக்கு-கிழக்கு பிரச்சனை குறித்து தீர்வுத் திட்டம் ஒன்றை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா அவர்களிடம் கையளித்திருந்தீர்கள். அத்திட்டத்தை மீண்டும் வலியுறுத்துவீர்களா?**

பதில்: சந்தர்ப்பம் வருமானால் அதுபற்றி மீண்டும் கேட்கத்தான் இருக்கிறோம். திரு.அஷ்ரப் ஆட்சியாளர் முகாமிலிருந்த போதும்அவரிடம்இதுபற்றி கேட்கவேண்டிய அவசியமில்லை. சந்தர்ப்பம் வருமானால் அதனை மீண்டும் வலியுறுத்துவோம். எப்போது-எந்தக் காலத்தில் என்பதை இப்போது கூற முடியாது.

**கேள்வி: வடக்கு-கிழக்குப் பிரச்சனையின் தீர்வு எந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள்?**

பதில்: இல.தொழி.காங்கிரஸ் சார்பாகவும் இதற்கான விரிவான திட்டத்தைத் தயாரித்து இலங்கை அரசாங்கத்துக்குக் கொண்டுத்திருக்கிறோம். புலிப்படைக்கும் கொடுத்திருக்கிறோம். அவர்கள் (புலிப்படையினர்) இதுவரைக்கும் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களைவிட இது நன்றாகவே இருக்கிறது எனக் கூறியிருக்கின்றனர். இருப்பினும் இன்னும் பல குறைகள் உள்ளன. அவற்றையிட்டுப் பேச வேண்டும். நேரடியாக வாருங்கள் என்றுதான் என்னை அழைத்தார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தினால் திருப்தியாக முடியலாம்.

தவிர்க்க முடியாத காரணத்தால் இவ்வாரம் அரசியல் தொடர் இடம்பெறவில்லை. அடுத்த வாரம் இடம்பெறும். ~ஆ.ர்.~

---

# "என்னுடைய வழியில் வராதவர்களை குறை சொல்லமாட்டேன்"

சமீபத்தில் தமிழ்நாடு சென்றிருந்த அமைச்சர் தொண்டா அவர்கள், அங்கிருந்து வெளிவரும் 'ஜூனியர் விகட'னுக்கு (6.10.99) அளித்த பேட்டி.

"நீங்களும் ஒரு தமிழர் என்ற முறையில், விடுதலைப் புலிகளின் ஆயதப் போராட்டத்தை ஆதரிக்கிறீர்களா...?"

"இலங்கையில் இரண்டுவிதமான பிரச்சனை இருக்கு. ஒன்று எங்களைப் போன்ற இந்திய வம்சாவழி மக்களோட பிரச்சனை. இன்னொன்று வட கிழக்குப் பகுதியில் இருக்கிற பூர்வீகத் தமிழர்களின் பிரச்சனை. இதில் வடகிழக்கில் தங்களுடைய தனிநாடு கோரிக்கையை அடைய இளைஞர்கள் போராடுகிறார்கள். ஒரு காலத்தில் தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி, சிங்கள இளைஞர்களும் போராடினார்கள். ஆனால் அவர்களை அரசாங்கம் அடக்கி விட்டது! தமிழ் இளைஞர்களை அடக்க முடியவில்லை.

என்னைப் பொறுத்தவரை, நான் ஜனநாயகத்தை நம்புகிறவன். அரசாங்கத்தோடு அனுசரித்து, போராட வேண்டிய நேரத்தில் போராடி, நாற்பதாண்டுகளுக்குப் பிறகு இந்திய வம்சாவளி மக்களின் உரிமையைப் பெற்றுத் தந்திருக்கிறேன். கம்பையோ, கத்தியையோ எடுக்காமல் நான் காரியம் பார்த்துக்கிட்டிருக்கிறேன்.

அதுக்காக, என்னோட வழியில் வராதவங்க செய்யறதைத் 'தவறு'னு நான் சொல்ல முடியாது. உங்களுக்கு வயிற்றைப் பசிக்குது... நீங்க ஏதோ ஒரு வழியில உணவுக்கு வழி செய்து சாப்பிடறீங்க... உங்க வழி பிடிக்கலேன்னு 'நீங்க பட்டினியா கெடங்க'னு நான் சொல்ல முடியாது..."

"இப்போதைக்கு இலங்கையின் வட கிழக்கில் யாரோட அதிகாரம் இருக்கு...?"

"அரசாங்கத்தோட ஆதிக்கம் தான் இருக்குது. ஒருசில பகுதிகளில் புலிப்படையின் ஆதிக்கம் இருக்கிறது. அவர்களும் சில விஷயங்களில் வரிவசூல் போன்ற வற்றை நடத்துகிறார்கள். முன்பு, யாழ்ப்பாணம் முழுக்கப் புலிகள்தான் ஆண்டுக் கிட்டிருந்தாங்க. இப்ப, அவங்களைக் கொஞ்சம் கொஞ்சமா காட்டுப் பகுதிக்குத் தள்ளிக்கொண்டு போயிடுச்சு இராணுவம்!"

"புதுக்குடியிருப்பில் இருபத்திரண்டு தமிழர்களை இராணுவம் குண்டு வீசி கொன்றது, அம்பாறையில் அறுபத்தோரு சிங்களர்களைப் புலிப்படையினர் வெட்டிக் கொன்றனர்... இந்தச் சம்பவங்களைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன...?"

"தமிழர்மீது இராணுவம் குண்டு போடுறப்ப, அது புலிப்படைக்குக் கஷ்டமாத் தெரியுது. அதுக்குப் பதிலடியா, சிங்களர் பகுதியில் புலிப்படைத் தாக்குதல் நடத்துது. சிங்கள மக்களுக்குப் பாதிப்பு வரும்போது தான் அரசாங்கம் பின்வாங்குது. தங்களுடைய நோக்கங்களை அடையணும்னா சொந்தத் தலைவர்களையே கூடக் கழிச்சுக் கட்டுறது புலிகளின் போக்கு.

'எங்களுடைய நோக்கங்களை அடைய முடியவில்லை என்றால், எந்தத் தடையையும் நீக்குவோம். இதுல நியாயம், அநியாயத்துக்கு இடமில்லை'னு அவங்க நினைக்குறாங்க. 'எங்கள்மீது உங்க அரசாங்கம் குண்டு போட்டால், அதன்பிறகு எங்களிடமிருந்து உங்களை அரசாங்கத்தால் காப்பாற்ற முடியாது.' என்பதைச் சிங்களர்களுக்கு உணர்த்தத்தான் புலிகள் இத்தகைய நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள்..."

"தமிழினத்துக்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொள்ளும் புலிகள், சமீபகாலமாக நீலன் திருச்செல்வம் போன்றவர்களைக் கொலை செய்து வருவது ஏன்...?"


"'இவங்களெல்லாம் திறமையிருந்தும் தமிழினத்துக்கு எதுவுமே செய்யல... இதுக்குப் பேசாம, வீட்டுலயே இருந்துக்கிட்டுச் சொந்த வேலையைப் பார்க்க வேண்டியது தானே'னு புலிகள் நினைக்குறாங்க! 'எதுக்காக மக்களுக்குச் சேவை செய்யுறதா சொல்லிக்கிட்டு, அரசாங்கத்துக்கு ஜால்ரா போடணும்...? நம்மோட உரிமையைப் பெற முடியாத போது, இவங்க அரசாங்கத்தோட எதுக்காக அனுரிசத்துப் போகணும்'னு புலிகள் நினைக்குறாங்க. அதனோட விளைவுதான், திருச்செல்வம் போன்ற தமிழ்த் தலைவர்களையும் புலிகள் கொலை செய்தது..."

"இலங்கையில் உள்ள மற்ற போராளிக் குழுக்கள் என்ன செய்கிறார்கள்...?"

"அவங்களெல்லாம் அரசாங்கத்துக்குக் கையாளா இருக்காங்க. பெரும்பாலானவர்கள் காட்டிக்குடுத்துப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். யாராவது கேட்டால், 'நாங்கள் ஜனநாயகத்துல நம்பிக்கை வைத்துப் போராடுகிறோம்'னு சொல்லிக்கிறாங்க. இதைக் கண்டித்துத்தான் பலபேரைப் புலிகள் 'க்ளோஸ்' பண்ணுகிறார்கள்..."

"தமிழர்கள் என்ற முறையில், வடகிழக்குப் பகுதியிலுள்ள இலங்கைத் தமிழர்களும் இந்திய வம்சாளியினருமான நீங்களும் ஏன் ஒன்று சேரக்கூடாது...?"

"போராடிப் பெற்ற உரிமையை நிலை நாட்டுவது என்னுடைய வேலை. இப்போதே 'மத்திய மாகாணத்துல யும் யுத்தம் வரும்'னு பிரச்சனை யைக் கிளப்பிவிடுறாங்க. எங்கள் பகுதியிலுள்ள சிங்களவர்களோ, 'தொண்டமான் கையில இருக்குற இளைஞர்கள், புலிப்படையோட ஏஜெண்டுகள்... அவங்களெல்லாம் போராடுகிறதுக்கு ரெடியாகுறாங்க'னு சொல்றாங்க.



- இலங்கை அமைச்சர் பரபரப்பு பேட்டி

நம்முடைய சக்தியைக் குறைக்க இதுவும் ஒரு வழி. எங்களைப் பொறுத்தவரை, சிங் களவர்களுக்கு மத்தியில் நாங்கள் இருக் கிறோம். 'அரசாங்கத்தோட அனுசரிச்சுப் போனாதான் நம்முடைய உரிமைகளைப் பெறமுடியும்'னு நாங்க நினைக்கிறோம்..."

"நீங்கள் இப்படி நினைப்பதால், உங்கள்மீது புலிகளுக்கு வெறுப்பு வராதா...?"

"வரத்தான் செய்யும்... அதை ஏத்துக்கிடத்தான் வேணும். 'தலைவர்'னு வந்துட்டா, எல்லா விதமான தியாகமும் செய்யத் தயாரா இருக்கணும்..."

"அப்படியென்றால், இலங்கையில் தமிழர்கள் ஒன்றுபட வழியே இல்லையா...?"

"விசித்திரமான ஒரு நிலை இருக்கு, இப்ப அங்கே! தமிழர்கள் ஒன்று சேருவதால் ஆபத்தும் துவேசமும் தான் அதிகரிக்கும். 'தமிழனெல்லாம் ஒண்ணு சேந்துட்டான்டா'னு சொல்லிக்கிட்டு, சிங்களர்கள் எல்லாரும் ஒண்ணு சேர்ந்துடுவாங்க... அதனால பிரச்சனைகள்தான் அதிகமாகும்..."

# தேர்தல் வெற்றிக்கான திரைமறைவுத் திட்டங்கள்!

அலசுவது - இராஜதந்திரி

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு சிங்கள அரசியல் கட்சிகள் தீவிரமாகக் களத்தில் குதித்துள்ளன.

இக் கட்சிகளிடையே பொதுஜன முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையேதான் நேரடியான மோதல் இடம்பெறுகிறது.

மூன்றாவது முக்கிய அணியாக ஜே.வி.பி. இருக்கின்றபோதும், ஜனாதிபதித் தேர்தலில் அதன் வேட்பாளர் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு எவ்வகையிலும் இருக்கப்போவதில்லை.

ஆனாலும் பிரதான போட்டியாளர்களான சந்திரிக்கா-ரணில் ஆகியோரது வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் பாத்திரத்தை ஜே.வி.பி வகிக்க உள்ளது.

ஜே.வி.பி நாடு முழுவதும் குறைந்தபட்சம் மூன்று இலட்சம் வாக்குகளுக்கு குறிவைத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் வெற்றிபெற வேண்டுமானால் அளிக்கப்படும் வாக்குகளில் 51 வீதமான வாக்குகள் தேவைப்படும்.

கடந்த மாகாணசபைத் தேர்தல்களில் பொ.ஜ.முன்னணி, ஐ.தே.கட்சி ஆகியவை பெற்ற வாக்குகளை நோக்கும்போது, இரு தரப்புமே 51 வீதமான வாக்குகளைப் பெறுவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய கட்டத்திலேயே உள்ளன.

இந்நிலையில் ஜே.வி.பியின் வேட்பாளர் மூன்று இலட்சம் வாக்குகளைப் பெறுவாரேயானால் இரண்டு பிரதான வேட்பாளர்களையும் அது பாதிக்கவே செய்யும்.

எனினும் ரணிலைவிட சந்திரிக்கா அம்மையாருக்கான வாக்குகள்தான் ஜே.வி.பி. வேட்பாளரின் வாக்கு வேட்டையில் கவரப்படப்போகின்றன.

அதேபோல மக்கள் ஐக்கிய முன்னணி எனப்படும் சிங்களப் பேரினவாதக் கட்சியின் சார்பாக தினேஷ் குணவர்த்தனாவும் ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கப் போகிறார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் படுதோல்வி கண்டவர் தினேஷ் குணவர்த்தனா. எனினும் தீர்வுப் பொதி பற்றிய விவாதங்கள், யுத்த சூழல் உருவாக்கியுள்ள பேரினவாதப் பெருமிதங்கள் போன்றவற்றால் மறுபடி பேரினவாத சக்திகளுக்கு ஒட்சிசன் கிடைத்துள்ளது.

ஐந்து மாகாணசபைகளுக்கான தேர்தலில் மேல் மாகாண சபையில் தினேஷ் குணவர்த்தனாவின் கட்சி மறுபடி சில ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. இக் கட்சியோடு பொ.ஜ. முன்னணியும் பேச்சு நடத்தி ஆதரவு பெற்றிருந்தது.

தினேஷ் குணவர்த்தனாவுக்கு இலட்சக்கணக்கான வாக்குகள் குவிந்துவிடப்போவதில்லை. ஆனாலும் அவர் பெறும் ஒவ்வொரு வாக்கும் பேரினவாத முகாமில் இருந்து பெறப்படும் வாக்குகளாகும்.

யுத்த வெற்றிப் பிரசாரங்கள் மூலம் பொதுஜன முன்னணி பேரினவாத முகாமின் வாக்கு வங்கிகளுககும் குறிவைத்துள்ளது.

இந்நிலையில் தினேஷ் பெறும் வாக்குகளும் அம்மையார் பெறக்கூடிய வாக்குகளில் ஒரு பகுதியையே கவரப்போகின்றன.

இவர்கள் போதாது என்று வாசுதேவ நாணயக்காராவும் ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்கியுள்ளார். இவரும் பொதுஜன முன்னணிக்கே சேதம் ஏற்படுத்தப் போகிறார்.

ஜே.வி.பி, வாசுதேவ நாணயக்காரா போன்றோர்கள் கடந்த காலத்திலும் ஐ.தே.கட்சியை கடுமையாக எதிர்த்தே வந்தனர்.

எனவே அவர்கள் இம்முறையும் எதிராகப் போட்டியிடுவது ஐ.தே.கட்சியை ஓரளவுதான் பாதிக்கும். ஆனால் ஜே.வி.பி.யும், வாசுதேவவும் சென்ற தேர்தல்களில் தங்களுக்குரிய வாக்கு வங்கிகளை பொதுஜன முன்னணிக்கு ஆதரவாகவே திருப்பியிருந்தனர். இதனால் இம்முறை அவர்கள் தனித்துப் போட்டியிடுவதால் பொ.ஜ.முன்னணிக்கே பெரும் இழப்பாகும்.

அதேபோன்று தினேஷ் குணவர்த்தனாவுக்கு ஆதரவான வாக்குகளும் சென்றமுறை அம்மையாருக்கு ஆதரவாகவே அலையோடு அள்ளுப்பட்டு வந்திருந்தன. இம்முறை மறுபடி தனக்குரிய வாக்குகளை தினேஷ் ஓரளவு திரட்டிக் கொள்ளப் போகிறார்.

ஆகவே, வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிக்கனியை சுவைக்க வேண்டுமானால், தானாகக் கனியாது என்று தெரிந்தால், அடித்துக் கனிய வைத்தாவது சுவை காண்பதற்கு சகல தரப்பும் திட்டமிடக்கூடும்.

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் நடைபெற்றது போன்று தேர்தல் முறைகேடுகள் இத்தேர்தலிலும்.பரவலாக தலைவிரித்தாடக்கூடிய சூழலையும் மறுப்பதற்கில்லை.

பொதுஜன முன்னணியைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முடிவை சந்திரிக்கா அம்மையாரே எடுத்திருக்கிறார்.

நம்பகமான சோதிடரின் அறிவுறுத்தலுக்கு ஏற்பவே மலரப்போகும் அடுத்த நூற்றாண்டுக்கு முன்பாக தேர்தலை நடத்தி முடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டில்- ஜனவரி மாதத்தின் பின்னரே தேர்தலை நடத்துவதற்கு முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

வன்னிப் போர்முனையில் மழைக்காலத்தின் பின்னர் பாரிய படை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுவிட்டு, அதன் சூட்டோடு சூடாக தேர்தலை நடத்தி முடிக்கவே அம்மையார் விரும்பியிருந்தார்.

ஆனால் அம்மையாரது நம்பகமான சோதிடரது முடிவு வேறுவிதமாக இருந்துள்ளது.

அம்மையாரது சாதகப்படி இந்த ஆண்டுக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடித்தால்தான் வெற்றி கிட்டும். இந்த ஆண்டுக்குள் நடத்தத் தவறினால் அடுத்த ஆண்டு ஜூலை மாதத்துக்கு பின்னர்தான் தேர்தலை நடத்த வேண்டும். என்று சோதிடர் திட்டவட்டமாகக் கூறியிருந்தாராம்.

தேர்தல் நடத்தும் முடிவை எப்போது அம்மையார் அறிவிப்பது என்பதற்கான சுபநேரமும் சோதிடராலேயே கணித்துக் கூறப்பட்டிருந்ததாம்.

இதனால்தான் க.பொ.த.சாதாரண பரீட்சைகளைக்கூட முன்கூட்டியே நடத்தி முடித்துவிட்டு, தேர்தலை நடத்துமளவுக்கு அவசரம் ஏற்பட்டது.

தமது ஆட்சியின் சாதனைகளை நம்புவதைவிட, தனது ஜாதகத்தையும், சோதிடரையுமே இம்முறை அம்மையார் நம்பியிருக்கிறார் என்று தெரிகிறது.

கடந்த காலத்தில் பிரேமதாசா மாந்திரிகர்களது உதவிகளை நாடியதாகவும்,

> **வடக்கில் பரிச்சயமான தமிழர் போட்டியிடுவதை ஐ.தே.கட்சி விரும்புகிறது. கொழும்பில் வாக்குகளைக் கவரும் தமிழர் போட்டியிடுவதை பொ.ஜ.முன்னணி விரும்புகிறது!**

அவர்கள் சொற்படியே தேர்தல்களை நடத்தியதாகவும் எதிர்க்கட்சிகள் கூறிவந்தன.

இப்போது சந்திரிக்கா அம்மையாரும் சோதிடரை நம்பியே களத்தில் இறங்கியுள்ளார்.

பதவியைத் தக்கவைத்துக் கொள்ள ஐ.தே.கட்சித் தலைவர்கள் கையாண்ட அணுகுமுறைகளையே தற்போதைய பொ.ஜ.முன்னணித் தலைவியும் கையாண்டு வருகிறார் என்பதும் பல நிகழ்வுகள் மூலம் துலக்கமாகியே வந்துள்ளது.

இரண்டு பிரதான வேட்பாளர்களும் தமது வெற்றி வாய்ப்பு ஒரு சில வீதங்களால் பாதிக்கப்படலாம் என்று கருதுகின்றனர்.

அதனால் தமிழ் பேசும் வாக்காளர்களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினரையாவது திருப்தி செய்யும் நடவடிக்கையில் சந்திரிக்காவும், ரணிலும் அக்கறை கொண்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட உடனேயே தமிழ்க் கட்சித் தலைவர்களை ரணில் துரிதமாகச் சந்தித்து முடித்துவிட்டார்.

தமிழ் பேசும் மக்களைக் கவரத்தக்க சுலோகங்கள் என்னவென்று அறிவதிலும் ஐ.தே.கட்சி ஆர்வம் காட்டிவருகிறது.

அதேபோன்று பொதுஜன முன்னணியும் தமிழ்பேசும் வாக்காளர்களைக் கவருவதற்கான உத்திகள் சிலவற்றைக் கையாண்டுள்ளது.

எனினும் இந்த இரு தரப்புமே தமிழ்பேசும் மக்களது அடிப்படை பிரச்சனை பற்றிய தமது நிலைப்பாடுகளை முன்வைக்கத் தயாராக இல்லை என்பதும் ஊன்றிக் கவனிக்க வேண்டியதாகும்.

வடக்கு-கிழக்கு இணைந்த ஒரே நிர்வாக அலகுக்குள் சுயாட்சி அதிகாரம் வழங்குவதற்கு இரு பெரும் கட்சிகளுமே தயாராக இல்லை.

அது போன்றே இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்னும் தமிழ் பேசும் தரப்பின் கோரிக்கையையும் இரு தரப்புமே நிராகரித்துள்ளன.

இவற்றுக்குப் புறம்பாக, புண்ணுக்குப் புனுகு பூசுவது



போன்ற வாககுறுதிகளையே இரு தரப்பும வழங்கி வருகின்றன.

அண்மையில் தன்னைச் சந்தித்த ஈ.பி.டி.பி தூதுக்குழுவிடம் சில வாக்குறுதிகளை அம்மையார் கூறியுள்ளார். செம்மணியில் கண்டெடுத்த எலும்புகளுக்கு உரியோரது குடும்பங்களுக்கு நஷ்டஈடு தருவது, யாழ்ப்பாணததுககான தனியார் கப்பல் போக்குவரத்துக்கு அனுமதி போன்றவை அவற்றில் முக்கியமானவை.

யாழ் குடாநாட்டுக்கான கப்பல் போக்குவரத்தை அரசாங்கம் தானாக நடத்தியிருக்க வேண்டும். குறைந்த கட்டணத்தில் சீரான கப்பல் சேவையை நடத்த வேண்டியது ஆட்சியாளரது கடமையாகும்.

ஆனால் முன்பொருமுறை தம்மைச் சந்தித்த தமிழ்க் கட்சிகளது தலைவர்களிடம், வடபகுதிக்கான கப்பல்சேவையில் படையினருக்கே முன்னுரிமை தரப்படும், அதன் பின்னர்தான் பயணிகள்!' என்று ஜனாதிபதியே கூறியிருந்தார்.

அதேபோன்று யாழில் கைதாகி காணாமல் போனோர் பற்றி ஆராய விசாரணை ஆணைக்குழு அமைக்கப்போவதாகவும் மூன்று வருடங்களுக்கு முன்பாக உறுதியளித்திருந்தார். இன்றுவரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட சில எலும்புக்கூடுகளுக்கு உரித்தானோரின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு கொடுக்க உள்ளதாகக் கூறியிருப்பதும், கப்பல் சேவைக்கு உத்தரவாதம் கொடுத்திருப்பதும் யாழ் குடாநாட்டு மக்களது கசப்புக்களை தற்காலிகமாகப் போக்கும்விதமான வாக்குறுதிகளேயாகும்.

சாமாதானத்துக்கான போர் என்ற பெயரில் அம்மையார் அரசாங்கம் தொடுத்துவரும் போரே யாழில் தமிழர்கள் காணாமல் போனதற்கும் காரணமாகும்; இன்றைய அன்றாட அவலங்களுக்கும் பிரதான காரணமாகும்.

அவலங்களை உருவாக்கிவிட்டு அவற்றில் சிலவற்றுக்கு அவலங்களை உருவாக்கியவர்களே பரிகாரம் செய்வதும், மேலும் அவலங்களை உருவாக்கும் விதமான இராணுவத்தீர்வை பற்றிப் பிடித்திருப்பதும் முன்னுக்குப் பின் முரணான போக்குகளாகும்.

எனவே, அம்மையாரும், ரணிலும் தமிழ் பேசும் மக்களது உடனடிப் பிரச்சனைகள் பற்றி இத் தேர்தல் நேரத்தில் கரிசனம் காண்பிப்பதைவிட, இனப்பிரச்சனைத் தீர்வுக்கு எத்தகைய திட்டத்தை வைத்துள்ளனர் என்பதை பகிரங்கமாகத் தெரிவிப்பதே நேர்மையான வழி முறையாக இருக்கமுடியும்.

அதனைவிடுத்து தமிழ் பேசும் மக்களுக்கு பொ.ஜ.முன்னணி ஆட்சியில் அவலம் நேர்ந்துவிட்டதாக ரணில் ஒப்பாரி வைப்பதும், தமிழ் பேசும் மக்களது அவலங்களுக்கு பரிகாரம் காணுவது போன்று அம்மையார் வாக்குறுதிகளைக் கூறுவதும் வாக்குகளுக்கு தூண்டில் போடும் உத்தியாகவே கருதப்படும்.

தமிழ் பேசும் வாக்குகளை இவ்வாறு தந்திரமான முறையில் கவருவது ஒருபுறமிருக்க, மற்றுமொரு திட்டமும் தீட்டப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

வடக்கில் இடம் பெயர்ந்த மக்களதும், அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்களதும் வாக்குகளை கள்ள வாக்குகளாக நிரப்பும் திட்டம் உள்ளதாக ஐ.தே.கட்சி புகார் கூறியுள்ளது.

புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதியிலும், மற்றும் இடம்பெயர்ந்தும் இலட்சக்கணக்கான தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றனர்.

இவர்களது வாக்குகள்தான் குறி வைக்கப்பட்டுள்ளது என்றும், சீருடை உதவியோடும் பெட்டிகள் நிரப்பப்படலாம் என்றும் ஐ.தே.கட்சி சந்தேகம் தெரிவித்துள்ளது.

'பாம்பின் கால் பாம்பறியும்' என்று கூறுவது போன்றே, தாம் ஆட்சியில் இருந்தபோது கையாண்ட கள்ள வாக்கு தந்திரங்கள் இம்முறை தமது எதிர்த்தரப்பால் கையாளப்படும் என்று ஐ.தே.கட்சி அஞ்சுகிறது.

இதன் காரணமாகவே வடக்கு-கிழக்கில் தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவதை அக் கட்சி விரும்பியது.

குறிப்பாக வடபகுதியைச் சேர்ந்த ஒருவர் போட்டியிடுவதையே ஐ.தே.கட்சி விரும்பியது. கொழும்பிலும், கிழக்கிலும், மலையகத்திலும் இம்முறை கணிசமான தமிழ் வாக்குகள் தமக்கே கிடைக்க உள்ளதாக ஐ.தே.கட்சி நம்பியுள்ளது.

எனவே இந்தப் பகுதிகளில் வாக்குகளைப் பெற உள்ள தமிழர் போட்டியிட்டால் தமது வாக்குகள்தான் உடையும் என்று ஐ.தே.கட்சி அஞ்சுகிறது. அதன் காரணமாகவே வடக்கில் மட்டும் வாக்குகள் பெறக்கூடிய ஒருவரை போட்டியிட வைக்க முயற்சிக்கப்பட்டது. அவ்வாறு போட்டியிடுபவர் வாக்குகளைப் பெறாதுபோனாலும், கள்ள வாக்குகள் போடப்படாமல் கண்காணித்துக் கொள்வார் என்பதே ஐ.தே.கட்சியின் நோக்கமாக இருந்தது.

குமார் பொன்னம்பலம் போன்ற நாடு முழுவதும் தமிழ் மக்களிடையே பிரபலமான ஒருவர் போட்டியிடுவதை ஐ.தே.கட்சி விரும்பவில்லை. குமார் போட்டியிட்டால் கொழும்பிலும் ஐ.தே.கட்சி தமிழ் வாக்குகளை கணிசமாக இழக்க வேண்டியிருக்கும் என்றே அக்கட்சி தயங்கியது.

சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்ற தமிழ் மக்களிடம் செல்வாக்கற்ற ஒருவரை வேட்பாளராக நியமித்தால், தமக்குரிய தமிழ் வாக்குகள் உடையப் போவதில்லை. அதேசமயம் ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப். உறுப்பினர்களை வடபகுதியில் உள்ள வாக்குச் சாவடிகளில் முகவர்களாக நியமித்து கள்ளவாக்குப் போடப்படுகிறதா? என்றும் கண்காணிக்கலாம் என்பதே ஐ.தே.கட்சியின் சாதுரியமான திட்டமாகும்.

வடக்கில் தேர்தல் சாவடிகளுக்கு முகவர்கள் நியமிக்கும் அளவுக்கு ஐ.தே.கடசியிடம் ஆட்கள் இல்லையென்பதாலேயே தமிழ்க் கட்சி ஒன்றை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

ஆனால் சுரேஸ் பிரேமச்சந்திரன் வேட்பாளராக போட்டியிடுவதை ஏனைய தமிழ்க் கட்சிகள் மட்டுமன்றி, அவரது கட்சிக்குள்ளேயே பலரும் விருப்பவில்லை என்பதால் ஐ.தே.கட்சியின் வியூகம் கைகூடாமல் போயிருந்தது.

இதேவேளை குமார் பொன்னம்பலம் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளராகப் போட்டியிடுவதை பொ.ஜ.முன்னணி மறைமுகமாக விரும்பியதாகத் தெரிகிறது.

கொழும்புத் தமிழ் மக்களது வாக்குகள் தமக்கு இம்முறை கிடைக்கப் போவதில்லை என்பதால், ஐ.தே.கட்சிக்கு அவற்றைச் செல்லாமல் தடுக்கும் அவசியம் பொ.ஜ.முன்னணிக்கு இருக்கிறது.

ஆனால் குமார் பொன்னம்பலம் போட்டியிட மறுத்துவிட்ட செய்தி பொ.ஜ. முன்னணியினரது எண்ணத்துக்கும் மாறாக அமைந்துவிட்டது.

வடக்கு-கிழக்கில் சீருடைத் தரப்பு தமக்கு ஒத்துழைக்கும் என்று பொ.ஜ.முன்னணி மட்டுமல்ல ஐ.தே.கட்சியும் நம்புகிறது.

ஐ.தே.கட்சி ஆட்சியில் பதவி உயர்வு பெற்ற பலர் தமக்கு உதவி செய்யக் காத்திருப்பதாக ஐ.தே.கட்சியினர் கூறுகின்றனர்.

அவ்வாறான உதவிகளோடு தாமும் வடக்கு-கிழக்கில் கள்ள வாக்குகளை நிரப்பலாம் என்ற எண்ணம் ஐ.தே.கட்சியிடம் இருப்பதை அறிய முடிகிறது.

இதனை பொ.ஜ.முன்னணியும் அறியாமலில்லை. ஐ.தே.கட்சி பதவிக்கு வந்தால் புலிகளோடு பேச்சு நடத்துவார்கள். தற்போது நிலைகொண்டுள்ள பல பகுதிகளில் இருந்து படைகளை விலக்கியும் கொள்வார்கள். நாம் மீண்டும் பதவிக்கு வருவது மூலமே யுத்தத்தைத் தொடர முடியும்; புலிகளை தோற்கடிக்கவும் முடியும்' என்று சீருடைத் தரப்புக்குள் உணர்ச்சிகரமான விளக்கங்களை பொ.ஜ.முன்னணியின் முக்கிய அமைச்சர் ஒருவரே முன்னெடுத்துச் செல்வதாகவும் அறியக்கூடியதாகவுள்ளது.

இது பற்றியும் உள்ளிருந்தே ஐ.தே.கட்சிக்கு தகவல் கிடைத்துள்ளது. 'நாம் பதவிக்கு வந்தாலும் போரை நிறுத்தாதுதான் புலிகளுடன் பேசுவோம். கைப்பற்றிய பகுதிகளை விட்டு படை வெளியேறும் நிலை ஏற்படமாட்டாது!' என்று ஐ.தே.கட்சி உயர்மட்டமும் சீருடை அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பியுள்ளது.

தாம் பிடித்த பகுதிகளில் குறுநில மன்னர்கள்போல் இருந்து ருசி கண்ட அதிகாரிகள் போரைத் தொடர்ந்து நடத்துவர் என்று தாம் நம்பும் தரப்பினருக்கு எவ்விதமான உதவிகளைச் செய்யவும் தயாராக உள்ளதாகவும், அவர்களைத் திருப்திப் படுத்தவே இவ்வாறான ஏட்டிக்குப் போட்டியான உத்தரவாதங்கள் வழங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

மொத்தத்தில் 'வழி முக்கியமல்ல, வெற்றியே குறி' என்பதுதான் தேர்தல்களிலும் பொருத்தமான சூத்திரமாயுள்ளது.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு கருணை காட்டுவதை தானும் விரும்புவது போன்று கலைஞர் கருணாநிதி கூறியிருந்தார்.

திடீரென்று கலைஞர் அவ்வாறு கூறியது ஏன்? அரசியல் சாணக்கியத்தில் பழம் தின்று கொட்டை போட்டவர் அவர்.

எரிக் சௌந்தரநாயகம் நாடு கடத்தல் விவகாரத்தில் உலகெங்கும் உள்ள தமிழர்களிடத்தில் கலைஞருக்கு அவப்பெயர். புலிகளுக்கும் கோபம் இருக்கும்.

வெளியே தெரியவே வராது என்று நினைத்த கடத்தல் விவகாரம் அம்பலமாகியதில், கலைஞருக்கு படு பயங்கரமான அதிர்ச்சி.

மத்திய அரசுடன் கலந்தாலோசிக்காது தான் இந்த நாடு கடத்தல் நடந்திருக்கிறது.

இந்த விவகாரங்களில் கெட்டுப்போன பெயரை திருத்தம் செய்யத்தான் ராஜீவ் கொலை வழக்கு தூக்குக்கைதிகள்மீது தனக்கும் கருணை உள்ளதுபோன்று கலைஞர் கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஆனாலும் தமிழக ஆளுஞர் பாத்திமா பீவி கருணை மனுவை நிராகரித்துவிட்டார்.

மாநில முதல்வரின் விருப்பம் அறிந்து கருணை மனு விடயத்தில் முடிவெடிப்பதுதான் மாநில ஆளுநர்களது வழக்கம். ராஜீவ் கொலை வழக்கு தூக்குத் தண்டனை கைதிகள் விடயத்தில் அந்த வழக்கத்தை மீறியுள்ளாரா ஆளுநர்?

உண்மை என்னவென்றால், கலைஞர் கருணாநிதி ஆளுநருக்கு தனது விருப்பம் என்னவென்று குறிப்பால் உணர்த்த பல வழிகள் உள்ளன. ஆனால் தனது பெயரைக் காப்பாற்ற பத்திரிகைகளுக்கு மட்டும் கூறிவிட்டு, பாத்திமாவுக்குக் கூறாது தவிர்த்துவிட்டார்.

எரிக் சௌந்தரநாயகம் நாடு கடத்தல் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையும் அக்கறை காட்டியிருக்கிறது.

குமார் பொன்னம்பலமும் இந்த விடயத்தில் கூர்மையாக இருக்கிறார். அவருடனும் மன்னிப்புச் சபை தொடர்பு கொண்டு விவரங்கள் பெற்றுள்ளது.

***

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் போட்டியிட்டால் மரணதண்டனை என்று புலிகள் கூறியதாக 'லங்காதீப' பத்திரிகை செய்திவெளியிட்டது.

அப் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ஒருவர் கிழக்குக்குச் சென்று புலிகளைச் சந்தித்துத் திரும்பினார். மொழி பெயர்ப்பு மூலமே புலிகளது கருத்தை அவர் அறிந்தார்.

### கலைஞரின் தந்திரம்

அதனால் சில கருத்துக்களை சரிவரப் புரிந்து கொள்ளாது எழுதித் தள்ளிவிட்டார். அது பின்னர் தமிழ்ப் ஊடகங்களிலும் வந்தது.

***

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளர் போட்டியிட வேண்டும் என்று கூட்டணியின் மாவை சேனாதிராஜா, யாழ் உதவி மேயர் ரவிராஜ், யாழ் மாநகர உறுப்பினர் முகுந்தன் ஆகியோர் தமிழ்க் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு விருப்பம் தெரிவித்தனர்.

29.10.99 அன்று ரெலோ, தமிழ்க் கட்சிகளது கூட்டம் ஒன்றுக்கு கூட்டணிக்கு அழைப்பு விடுத்தது.

"கூட்டத்துக்கு வரமாட்டோம். நீங்கள் சுமுகமான முடிவு எடுத்தால், நாம் அதனை பரிசீலிப்போம்!" என்று இரா.சம்பந்தர் ரெலோ தலைவர் செல்வத்திடம் கூறிவிட்டார்.

"சம்பந்தர் சுமுகமான முடிவு என்று எதைக் கருதுகிறார் என்று மை போட்டுத்தான் பார்க்கவேண்டும்!" என்று தமிழ்க் கட்சிப் பிரமுகர் ஒருவர் கிண்டலாகக் கூறினார்.

அம்மையாருக்கும் ஆதரவு. அதனை வெளியில் சொல்லவும் பயம். அவ்வாறான நபர்கள்தான் இம்முறை 'யாருக்கும் நாம் ஆதரவில்லை' என்னும் நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

அதில் கூட்டணியின் ஐயா சம்பந்தரும் அடக்கம். இலண்டனில் இருந்து வேகமாக நாடு திரும்பியதும் ஒரு நோக்கத்தோடுதானாம்.

மாவை சேனாதிராஜா போன்றோர், தமிழ் வேட்பாளர் போட்டியிட ஆதரவு தெரிவித்தால், சம்பந்தர் எப்படி அமையார் முன்பு போக முடியும்?

***

வலிகாமம் காணி சுவீகரிப்பை கைவிட உள்ளதாக ஐந்து மாகாணசபைத் தேர்தலில் கூறப்பட்டது.

இப்போது மறுபடியும் காதிலை பூ. உண்மையிலேயே அம்மையார் காணி சுவீகரிப்புக்கு எதிர் என்றால் அவராக ஒரு அறிக்கை விடுத்து உத்தரவாதம் கொடுப்பதோடு, உடனடியாக வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யலாம்தானே! ஏன் செய்யவில்லை?

வாய்மூல உத்தரவாதங்களை நம்பித்தான் 50 வருடங்களாக அழுதுகொண்டிருக்கிறோம்.

செம்மணிக்கும் நஷ்ட ஈடு கொடுப்பதாகக் கூறியுள்ளார் அம்மையார். காணாமல் போய் படுகொலையானோர். அறுநூறுக்கு மேற்பட்டோர்.

செம்மணி நாடகத்தில் சில எலும்புகளே மீட்கப்பட்டன. மீதி எங்கே?

தோண்டும்போது வெளிநாட்டு மண் ஆய்வு நிபுணர்களை அழைக்க மறுத்து, வெறும் பார்வையாளர்கள் மட்டும் அரசாங்கத்தால் அழைக்கப்பட்டனர்.

இதுவே சந்தேகத்திற்குரியதுதான். அது மட்டுமன்றி புதைகுழிகளில் இருந்து எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டதாக ராஜபக்ஷவும் கூறியிருந்தார்.

இவ்வாறான நிலையில் செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் கையளவு. மூடிமறைக்கப்பட்டவை மலையளவு. கையளவுக்கு நஷ்டஈடு கொடுப்பது, மலையளவை முற்றாக மூடிமறைப்பதற்குத்தானா?

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 86

**கடந்தவாரம்**

**அமீனின் பெண்வேட்டை அதிகமாகிறது. உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரது மனைவிமீது கண்வைத்து, அந்த அதிகாரியை தீர்த்துக்கட்டுகிறான். உகண்டாவின் பிரபல ஹொட்டலான றொறோறோவின் நிர்வாகியின் மனைவிமீதும் அமீனின் பார்வை பாய்கிறது. நிர்வாகி சுட்டுக் கொல்லப்படுகிறார். வியாபார போட்டியால் கொல்லப்பட்டதாக பொலிஸ் கூறுகிறது.**

**இனி...**

# இடி அமீன்

ஹோட்டல் நிர்வாகி ஷெக்கனபோவின் மனைவிக்கு காப்புறுதிப் பணம் கிடைத்ததுமே, அவள் தனக்கு நன்றி சொல்ல எத்தனிப்பாள் என்று அமீன் எதிர்பார்த்தான்.

அதே போலவே அவளும் அமீனுக்கு நன்றி கூறுவதற்காக முதலில் தொலைபேசி மூலம் ஜனாதிபதி மாளிகையுடன் தொடர்பு கொண்டாள்.

அவள் தொடர்பு கொண்டுள்ளதாக அமீனுக்குத் தெரிவிக்கப்பட்டபோது, **"நேரில் வந்து சந்திக்குமாறு கூறு"** என்று தன் செயலாளரிடம் சொன்னான் அமீன்.

அவளும் நேரில் வந்து விட்டாள். அமீனின் மாளிகையின் சகல மூலை முடுக்குகளிலும் வீடியோ கமரா பொருத்தப்பட்டிருந்தது.

அமீனது அறையிலும், அமீனது பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரியின் அறையிலும் இருந்த ரி.வி. திரைகளில் மாளிகைக்குள் வருவோர் போவோரையும் நடமாட்டங்களையும் காணமுடியும்.

அமீனைச் சந்திக்க வந்து காத்திருப்பவர்களை கமரா பதிவு செய்து அனுப்ப ரி.வி. திரை காண்பிக்கும்.

ஷெக்கனபோவின் மனைவி வரவேற்பறையில் சிறிது நேரம் காக்க வைக்கப்பட்டாள், அமீனது அறையில் இருந்த ரி.வி. திரை அவள் அமர்ந்திருப்பதைக் காண்பித்தது. அவளது ஒவ்வோர் அசைவையும் ரி.வி. திரையில் பார்த்துக் கொண்டிருந்தான் அமீன்.

இவ்வாறு மறைமுகமாக, திருட்டுத்தனமாக பெண்களை இரசிப்பதும் அமீனுக்கு ஒரு பொழுது போக்கு. தன்னைச் சந்திக்க வரும் பெண்களை வரவேற்பறையில் காத்திருக்க வைத்துவிட்டு, ரி.வி. திரையில் அவர்களை இரசித்துக் கொண்டிருப்பான்.

அமீனது மாளிகை பாதுகாப்புக்காக புலனாய்வுத் துறையினரால் செய்யப்பட்ட ஏற்பாடு, அமீனது வக்கிர ஆசைகளுக்கும் பயன்பட்டது.

ஷெக்கனபோவின் மனைவியை ரி.வி திரையில் பார்த்து இரசித்து, மனதுக்குள் வக்கிரமான கற்பனைகளையும் உருவாக்கிப் பார்த்துவிட்டு, அதன் பின்னர்தான் அவளை அழைத்து வரப் பணித்தான்.



அவளுக்கு, மிஞ்சிப் போனால் முப்பது வயதுதான் இருக்கும். கணவன் இறந்த துக்கம் அவள் கண்களில் தெரிந்தது. அவள் முகம் காய்ந்து கிடந்தது. அக் கோலத்திலும் அமீனது கண்களுக்கு அவள் அழகாகவே தெரிந்தாள்.

அவளது சோகம், அவளது இழப்பு அமீனுக்குள் ஈரத்தைத் தரவில்லை. தன் நலனை மட்டுமே, தன் ஆசாபாசங்களை மட்டுமே முதன்மைப்படுத்தும் கொடூரமான சுயநல வாதியாக இருந்தான்.

அவள் உள்ளே நுழைந்ததுமே, தழுதழுத்த குரலில் நன்றி கூறினாள். அமீன் தன் ஆசனத்தைவிட்டு எழுந்து வந்து அவளை வரவேற்றது, அவளுக்கு தர்மசங்கடமாக இருந்தது.

**"நன்றியை வாயால் மட்டும் சொன்னால் போதுமா?"** என்று கேட்டான்.

அவள் அடிபட்டவளாக அமீனை ஏறிட்டாள். கண்களில் பயம் தெரிந்தது. உதடுகள் ஏதோ சொல்லத் துடித்தன.

அமீனுக்கு அவள் அருகாமை பெறுமை இழக்கச் செய்தது சட்டென்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவள் இதனை எதிர்பார்க்கவில்லை. "அமீனை பெண்கள் சந்திக்கப்போவது ஆபத்து," என்று அவளது அயல்வீட்டுச் சிநேகிதி கூறியது இப்போதுதான் உறைந்தது.

அவனது பிடி இரும்புப்பிடியாக இருந்தது. அவளது மார்புகள் தன் உடலில் அழுந்தக்கூடியதாக இறுகத் தழுவியிருந்தான்.

அவளால் திமிறக்கூட முடியவில்லை. வாய்விட்டுக் கத்தலாம் என்று வாயைத் திறந்தாள். அமீனின் உதடுகள் அவள் வாயைப் பொத்தி மூடிக்கொண்டன.

அவள் அதிர்ச்சியிலும், அருவருப்பிலும் மயங்கி அமீனது கைகளிலே துவண்டு சரிந்தாள்.

அவள் மயங்கித் துவண்டபின்னரும் அமீனால் அவள் ஆக்கிரமிக்கப்பட்டாள். வேட்டையாடப்பட்டாள்.

கண்விழித்தபோது கட்டிலில் அலங்கோலமாகக் கிடந்தாள். கதறியழுதாள். அமீன் அவளிடம், **"ஒரே ஒருநாள் மட்டும்தானே? இனி உன்னை தொல்லைப்படுத்தவே மாட்டேன். இன்று என் ஆசையை தணித்ததுக்காக, உனக்கு என்ன உதவி வேண்டுமானாலும் கேள். எப்போது வேண்டுமானாலும் கேள் செய்கிறேன். இல்லை என்னைப் பழிவாங்க வேண்டும் என்று நினைக்கிறாயா? முயற்சி செய்து பார். உன் தலைதான் சிதறும்!"** என்று சர்வசாதாரணமாகக் கூறினான்.

அவள் எதுவுமே பேசவில்லை. அங்கிருந்து வெளியேறினாள். அன்றிரவே தற்கொலை செய்து கொண்டாள்.

தன்னுடன் அமீன் பலவந்தமாக உறவு கொண்டதையும், தன் சாவுக்கு அமீனே காரணம் என்றும் விரிவாக எழுதி பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பிவிட்டே தற்கொலை செய்து கொண்டாள்.

அப்பத்திரிகை அக் கடிதத்தை வெளியிடவில்லை. பத்திரப்படுத்தி வைத்திருந்தது. அமீனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அக் கடிதம் வெளியானது. அமீனது பெண் வேட்டைக்கு அதுவும் சான்றாக மாறியது.

ஜிஞ்ஜா மருத்துவமனைக்கு புதிதாக சில கட்டடங்கள் அமைக்கப்பட்டன. அவற்றின் திறப்பு விழாவுக்கு அமீனை அழைத்திருந்தார் சுகாதார அமைச்சர் சியம்பா.

அமீனும் கலந்து கொண்டான். காலையில்தான் திறப்புவிழா என்று அழைப்பிதழில் போடப்பட்டிருந்தது.

மாலை நான்கு மணிக்குத்தான் அமீன் திடீரென்று வந்து சேர்ந்தான். அதுவரை டாக்டர்கள், தாதிகள் உட்பட பல முக்கியஸ்தர்கள் காத்திருந்தனர். காலை முதல் காத்திருந்து களைத்துப் போனார்கள். பாதுகாப்புக் காரணங்களுக்காக குறிப்பிட்ட நேரத்தில் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை அமீன் தவிர்த்து வந்தான்.

இதனால் அமீன் கலந்துகொள்ளும் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பிரமுகர்கள் பாடு பெரும் பாடாகிவிட்டது.

இவ்வாறுதான் அமீன் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றில் காத்திருந்த அதிகாரிகளில் ஒருவர் பொறுமை இழந்து வீட்டுக்குப் போய் விட்டார்.

அந்த அதிகாரிமீது கோபம் கொண்டிருந்த யாரோ ஓர் அதிகாரி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமீனுக்கு கோள்மூட்டிவிட்டார்.

அவ்வளவுதான். அந்த அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டு, நிரந்தரமாகவே வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

இந்தச் சம்பவம் வெளியே தெரிந்ததால், அதன்பின்னர் அமீன் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாவரும் தவறாமல் ஆஜராகிவிடுவர். காத்திருந்த சோம்பலில் கொட்டாவிவிடக்கூட பயந்தார்கள்.

ஜிஞ்ஜா மருத்துவமனையிலும் அனைவரும் காத்திருந்தனர். புதிய கட்டடப் பகுதியை திறந்து வைத்த அமீனின் கண்கள் அங்கு வரிசையில் நின்ற தாதிகள்மீது தாவித்தாவித் திரிந்தன.

வனப்பமாக இருந்த ஒரு தாதிமீது அக் கண்கள் தங்கிநின்றன.

அங்கு நின்ற தாதிகளிலேயே அவள்தான் மிக இளையவள். சில நாட்களுக்கு முன்னர்தான் தாதியாகப் பணியில் சேர்ந்திருந்தாள்.

அமீனின் மெய்காப்பாளர்களால் அன்று இரவே அப் பெண் கடத்திச் செல்லப்பட்டு, அமீனிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

அவள் அழுது புலம்பினாள். அமீனின் கால்களைக் கட்டிக் கொண்டு மன்றாடினாள்.

தருவது
ரசிகன்

**"இளங்கன்று, அதுவும் அழகான இளங்கன்று. அனுபவித்துவிட்டு அனுப்பி வைக்கிறேன். உன்னை பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பி பெரிய ஆளாக மாற்றிக் காட்டுகிறேன். ஒரே ஒரு மணிநேரம் நீ என்னோடு ஒத்துழைத்தால் போதும்; ஒரேயடியாக எட்டாத உயரத்துக்குப் போய்விடலாம்!"** என்று அமீன் அவளை இளகவைக்க முயற்சித்தான்.

"எனக்கு எதுவுமே வேண்டாம். என்னை விட்டுவிடுங்கள். நீங்கள் எனக்கு தந்தை மாதிரி இருக்கிறீர்கள்!" என்று அவள் கூறிய போது, காலால் உதைபட்டாள்.

**"என்னடி, என் மனதை மாற்றப்பார்க்கிறாயா? எனக்கு டசின் கணக்காக பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒவ்வொருத்தியும் குட்டி குட்டியாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். நீயும் எனக்கு குட்டி போட்டுத் தரப்போகிறாயா? என் மாளிகையிலேயே இருந்து கொள்! ஒரு குறையும் இருக்காது!"** என்று கூறியபடியே அவளைக் கைகளில் பிடித்துத் தூக்கினான்.

அவள் பிடிவாதமாக மறுத்தபோது முரட்டுத்தனமாக கன்னத்தில் அறைபட்டாள்.

அறையை வாங்கிக்கொண்டு அவள் கன்னத்தைப் பொத்திக்கொண்டபோது, அமீனின் கரம் அவளது கழுத்தின்கீழே சென்றது.

அவள் கூசிப்போனாள். கோபமுற்றாள். அமீனின் முகத்தில் துணிந்து காறித்துப்பி விட்டாள். அமீன் கோபத்தில் தணலானான்.

தன் பெல்ட்டைக் கழற்றினான். அது கனமான பெல்ட். மிக நிதானமாக அவளை விளாச ஆரம்பித்தான்.

அவள் அந்த அறையைச் சுற்றிச்சுற்றி ஓடினாள். அமீன் உரக்கச் சிரித்தபடியே துரத்தித் துரத்தி பெல்டால் விளாசினான்.

அவளது அழுகுரலும், அவலக்கூச்சலும் அந்த அறையின் நான்கு சுவர்களுக்குள் மோதி மோதி, அதற்குள்ளேயே அடங்கிப்போனது.

அடி தாங்காமல் அவள் பணிந்தாள். அவள் தேகமெங்கும் காயங்கள். அந்தக் காயங்களில் இருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

அவள் பணிந்த பின்னர் அடிபட்ட இடங்களை தன் உதடுகளால் ஒற்றினான் அமீன். இரத்த ருசி பார்த்து சப்புக் கொட்டினான்.

அவளுக்கு அமீனது செய்கை உச்சபட்சமான பயத்தை நெஞ்சுக்குள் திணித்தது.

கண்களை இறுக மூடிக் கொண்டாள். அமீன் அவளிடம் ராட்சதன்போல நடந்து கொண்டான். அதனால் அவள் துடித்ததை, அழுது அரற்றியதை அவன் இரசித்தான்.

அவளது துடிப்பும், வேதனையும் அவனுக்கு உணர்ச்சியைத் தூண்டுவதாக இருந்தது. அந்தளவுக்கு அவனது வக்கிரம் விசுவரூபம் எடுத்திருந்தது.

கல்லிலே அடித்து துவைத்து இறுகப் பிழியப்பட்ட துணியாக அந்த இளம் தாதி அமீனிடம் இருந்து மீண்டாள்.

**"உன்னை வெளிநாட்டுக்கு பயிற்சிக்கு அனுப்பப்போகிறேன். இன்னும் ஏதேதோ சலுகையெல்லாம் உன்னைத் தேடி வரப்போகிறது. கடவுச் சீட்டு எடுத்து தயாராக இரு!"** என்றான் அமீன்.

அவள் மறுக்கவில்லை. "தங்கள் விருப்பப்படியே நடக்கிறேன்!" என்றாள்.

**"இந்தப் புத்தி அப்போதே வந்திருந்தால் உடம்பு புண்ணாகியிருக்காது. பொன்னான மேனி பழுதாகி இருக்காது!"** என்று அவள் முதுகை வருடினான்.

அமீன் கூறியதுபோலவே அவள் கடவுச் சீட்டுப் பெற்றுக் கொண்டாள். ஆனால் தனக்கு மட்டுமல்ல, தன் குடும்பத்தினர் அனைவருக்குமே கடவுச் சீட்டுப் பெற்று, கென்யா நாட்டுக்குப் பறந்துவிட்டாள்.

அமீன் இனி தன்னை அடிக்கடி தொல்லைப் படுத்துவான் என்பதைத் தெரிந்து கொண்டதால் தான் அவள் நாட்டைவிட்டு தப்பிச் சென்றாள்.

கென்யா சென்ற பின்னர் தனக்கு நேர்ந்த கொடுமைகளை அந்த இளம் தாதி பத்திரிகைகளுக்கு விபரித்தாள்.

அமீனின் பெண் வேட்டை இவ்வாறு உலகம் அறிந்த செய்தியாக உலாவிக் கொண்டிருந்தது. ஆயினும் அமீன் இவற்றையிட்டு கவலை கொள்ளவில்லை.

அந்த இளம் தாதி நாட்டைவிட்டு தப்பியோடிய சில மாதங்களுக்குள் இன்னொரு தாதிமீது அமீனது கழுகுக் கண்கள் பாய்ந்தன.

அவள் முலாகோ மருத்துவமனையில் தாதியாகக் கடமையாற்றியவள். அமீனது பிள்ளைகளில் ஒருவனுக்கு நோய் வந்தபோது, மாளிகையில் வைத்தே வைத்தியம் செய்யப்பட்டது.

அப்போது அங்கு வந்து சென்ற டாக்டருடன் கூட வந்துபோன தாதிகளில் அவளும் ஒருத்தி.

அவளை தன் ஆசைக்குப் பணிய வைக்க அமீன் செய்த ஏற்பாடு வித்தியாசமானது.

ஒருநாள் அந்தத் தாதியின் வீட்டு முன்புறம் ஒரு கார் வந்து நின்றது.

அமீனின் மெய்காப்பாளர்கள் சிலர் அக் காரிலிருந்து இறங்கினார்கள். அவர்களுடைய கைகளில் சில பொதிகள் காணப்பட்டன.

அவர்களில் ஒருவனது கையில் 700 ஷிலிங் பண நோட்டுக்கள் ஒரு கட்டாக இருந்தன.

கதவைத் தட்டித் திறந்து உள்ளே போனார்கள். தாதியின் தந்தை நடுத்தர வயதானவர். அவரிடம் ஒருவன் பணக்கட்டை நீட்டினான்.

(இடி தொடரும்)

## உனக்காக

## எல்லாம் உனக்காக



பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸும் அவரது காதலி கமிலாவும் இப்போது ஜாலியாக உலகம் சுற்றும் பறவைகள்.

டயானாவின் மறைவுக்குப் பின்னர் அரச குடும்பத்தின் மத்தியில் கமிலா நன்றாக ஊடுருவிவிட்டார்.

சாள்ஸின் பிறந்தநாள், இளவரசர் வில்லியமின் பிறந்தநாள், இளவரசர் ஹரியின் பிறந்தநாள் போன்றவற்றில் கமிலாவின் கொடிதான் பறந்தது.

கமிலாவின் நடை, உடை பாவனைகளும் அரச குடும்பத்திற்கு ஏற்றதாக மாறியுள்ளன. பெரும் விலை கொடுத்து ஆடைகள் வாங்கி அணிகிறார். இதற்கு சாள்ஸ்தான் பணம் கொடுக்கிறார்.

கடந்த வருடம் மட்டும் கமிலாவுக்காக இரண்டு கோடி ரூபாய்களைச் செலவிட்டுள்ளார் சாள்ஸ்.

சமீபத்தில் அமெரிக்க நியூயோர்க் நகரைச் சுற்றிப் பார்க்கச் சென்றார் கமிலா. அதற்காக சாள்ஸ் செலவிட்ட தொகை 35 இலட்சம். கமிலாவுக்குப் பாதுகாப்பாகவும் இரண்டு பேரை அனுப்பி வைத்தார் சாள்ஸ்.

கோடை விடுமுறைக்கு கமிலா பயணம் செய்ய தனி விமானம் ஒன்றும் சாள்ஸினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஸ்பெயின் நாட்டுக்குத் தனி விமானத்தில் கமிலாவை அழைத்துச் சென்றுள்ளார் சாள்ஸ்.

கமிலாவின் கார்ச் செலவு மட்டும் ஆண்டுக்கு ஏழு இலட்சம் ரூபாய்கள். இதற்கும் சாள்ஸ்தான் செலவு செய்கிறார்.

இதுபோல இந்த ஆண்டில் மட்டும் பத்து இலட்ச ரூபாய்களுக்கு அன்பளிப்புப் பொருட்களை வாரியிறைத்துள்ளார் சாள்ஸ். பொதுமக்களது வரிப்பணம் இப்படி தண்ணீராய்ப் பாய்கிறது.

## அவர்கள் புதைத்தார்கள்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிமீது அடிக்கடி ஊழல் புகார்கள் கூறப்படுவது வழக்கமாகிவிட்டது. அதிலும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குள் இருப்போரும், அந்த நாட்டு இரசிகர்களும்தான் பெரும்பாலான புகார்களைக் கூறியுள்ளனர்.



பாகிஸ்தான் அணி எப்போது தோல்வி கண்டாலும், உடனடியாக இக் குற்றச்சாட்டு கிளம்பிவிடுகிறது.

தற்போது பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான்கானும் அதே குற்றச்சாட்டை வீசியுள்ளார்.

"நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சில போட்டிகளில் சூதாட்டம் இருந்ததை நான் அறிவேன். அது பற்றி கிரிக்கெட் சபை விசாரித்து சரியான நடவடிக்கை எடுக்கவில்லை.

சில வீரர்களை மட்டும் தடை செய்ததோடு அந்த விவகாரத்தைப் ஒரேயடியாக புதைத்து விட்டனர். இதனால்தான் இன்று அணி அடிவாங்கும்போது இலஞ்சம் வாங்கி விட்டதாகப் பொதுமக்கள் நினைக்கிறார்கள்!" என்று இம்ரான்கான் கூறியிருக்கிறார்.

## திருமணமாம் திருமணம்



'பேவாட்ச்' தொலைக்காட்சித் தொடரில் பல கோடி ஜொள்ளர்களின் பேராதரவைப் பெற்றவர் பமீலா.

இவருக்கும் டாம்லீ என்பவருக்கும் இடையே சில வருடங்களுக்கு முன்பு விவாகரத்து நடந்தது. இப்போது இருவரும் மறுபடி ஒன்றுசேர முடிவு செய்துள்ளனர்.

அதனால் மறுபடி திருமண விழாவும் வைத்துள்ளனர்.

இரண்டாயிரமாவது ஆண்டு ஜனவரி முதலாம் திகதி இவர்களது திருமணம் நடக்கவுள்ளது.

திருமணத்துக்கு இருவருமே துணிமணி எடுக்கப்போவதில்லை. ஏன் தெரியுமா? அவர்கள் துணியே அணிந்து கொள்ளப்போவதில்லை.

உலகத்தையே கலக்கப்போகும் இந்தத் திருமணம் பற்றி பமீலா கூறும்போது, "நாம் இயற்கையோடு எவ்வாறு ஒன்றிப் போகவேண்டும் என்று விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவே இவ்வாறு செய்கிறோம்!" என்று கூறியுள்ளாராம்.

கணவரான டாம்லீ தன்னோடு அந்தரங்கமாக இருந்தவற்றை இரகசியமாகப் படம் பிடித்து, விற்பனை செய்வதாக சந்தேகித்தே பமீலா அவரை முன்பு விவாகரத்துச் செய்திருந்தார். இப்போது இருவருமே ஒளிவு மறைவு இன்றி தோன்றப்போகிறார்கள்.


## மோனிக்கா மவுசு

மோனிக்கா லிவின்ஸ்கிக்கு அமெரிக்காவில் பயங்கர மவுசு. அவர் எங்கு சென்றாலும் ஏராளமான இரசிகர்கள் குவிந்து விடுகின்றனர்.

அண்மையில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள திரையரங்கு ஒன்றுக்கு அவர் சென்றிருந்தார்.

ஏராளமான இரசிகர்களும், பத்திரிகை நிருபர்களும் அவரைக் காண்பதற்கு முண்டியடித்தனர்.

மோனிக்கா அவர்களைப் பார்த்து கையசைத்து சிரித்தபடி அந்த இடத்தை விட்டு நழுவிவிட்டார்.



## பசை தயார்

ஆயுத உற்பத்தியில் முன்னணி வகிப்பது அமெரிக்கா. ஆயுத குறைப்பு பற்றி உலகுக்குப் போதிப்பதில் முன்னணி வகிப்பதும் அந்த நாடுதான்.

அண்மையில் புதுவிதமான பசை ஒன்றை அமெரிக்கா தயாரித்துள்ளது. இதனை விமானம் மூலமாக எதிரிகளது டாங்கிகள்மீது தூவினால், அந்த டாங்கிகள் மேற்கொண்டு அசையவே முடியாது. சாலையுடன் ஒட்டி நிற்கவேண்டியதுதான்.

இதேபோல எதிரி நாட்டு வாகனங்களது டயர்களைப் பதம்பார்க்கும் கண்ணாடித் துகள் போன்ற ஆயுதமும் தயாராகியுள்ளது.


இதுதவிர எதிரியை நாற்றம் தாங்காது ஓடவைக்கும் கெட்டவாசனை, கண்ணைக் கூசவைக்கும் வெளிச்ச ஆயுதங்கள் போன்றவையும் அமெரிக்காவிடம் உள்ளன.

## மருந்தாகும் தேன்

தேன் எப்போதும் நமக்குத் தேவையானது. தேனை உணவாக தினமும் பாவித்து வந்தால் நோய் நொடி அண்டாது என்று மருத்துவர்களே கூறுகின்றனர்.

பெரியவர்கள் மட்டுமல்ல குழந்தைகளுக்கும் தேன் தேவையானது. ரொட்டி, ஐஸ்கிரீம், மற்றும் தின்பண்டங்களோடும் தேனைச் சேர்த்து சாப்பிடலாம்.

இனிப்பாகவும், சுவையாகவும் இருக்கும் உணவுப் பொருட்கள் உடலுக்கு தீங்கானதாகவும் இருப்பது வழக்கம். ஆனால் தேன் இனிப்பாகவும் மருந்தாகவும் பயன்படுகிறது.




நம்நாட்டில் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் தேன் விற்பனை செய்யப்படுகிறது. இவற்றைக் கடைகளில் வாங்கலாம்.


## இராணுவ வாகனம்



சின்னக் கார்தான். ஆனால் கெட்டியான கார். இக்காரை இந்திய இராணுவத்தின் தொழில் நுட்பப் பிரிவினர் தயாரித்துள்ளனர். மைக்ரோ கார் என்று பெயர் சூட்டியுள்ளனர்.

கார்க்கில் போரில் காயமடைந்த படையினரை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல இக்கார் பெரிதும் உதவியதாம். இந்தக் கார் கைனடிக் ஹோண்டா என்ஜினில் இயங்குகிறது.

## ஜனவரியில் பார்க்கலாம்




இத்தாலி நாட்டில் பைசா கோபுரம் இருப்பது தெரிந்ததுதான். 800 ஆண்டுகள் பழமையான அக்கோபுரம் 58 மீட்டர் உயரமானது.

இக் கோபுரம் சற்றுச் சாய்ந்துவிட்டதால், இதனை நிமிர்த்த 1990ம் ஆண்டு முதல் முயற்சிகள் தொடங்கின. அதனால் பார்வையாளர்களும் அனுமதிக்கப் படவில்லை.

தற்போது 5 மீட்டர் உயரம் நிமித்தி விட்டார்கள். மேலும் நாற்பது சென்டி மீட்டர் நிமிர்த்த வேண்டும். இதற்கு மூன்று மாதங்கள் தேவைப்படும்.

இரண்டாமிரம் ஆண்டில் ஜனவரியில் பார்வையாளர்கள் நிமிர்ந்த பைசா கோபுரத்தில் ஏறிப் பார்வையிட முடியும். ஆனாலும் 300 ஆண்டுகளுக்கு முன்னர் சாய்ந்திருந்த அளவுக்குத்தான் இதனை நிமிர்த்த முடியும். முற்றாக நிமிர்த்த முடியாது, எனவே சாய்ந்த கோபுரம் என்ற செல்லப்பெயரை மாற்றத் தேவையில்லை.

## தாய்நாடும் தாய்மார்களும்



தாய்நாட்டுக்கு ஒரு கேடு என்றால் தாய்மார்களும் கிளர்ந்தெழுவார்கள். மானமே போனபின்னர் சூடு சுரணை யற்று வாழ்ந்தென்ன இலாபம்? என்பது இந்த செசன்ய தாய் மார்களது கொள்கை. ரசியப் படைகளது ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் செசன்ய படைகளுக்கு உதவியாக ஆயுதமேந்திக் களம் புகுந்துள்ள தாய்மார்களே இவர்கள்.

## மீசைக்காரன்


படத்தில் காட்சி தரும் மீசை மன்னர் ஹிர்சூட் டியற்மர் ஸ்ரோ இவர் நீண்டகாலமாக- எத்தனையோ இடையூறுகளுக்கும் பலருடைய கிண்டல்- கேலிகளுக்கும் அசைந்து, வளைந்து கொடுக்காமல் 80 சென்டிமீட்டர் நீளமான தனது மீசையை ஆசையாக வளர்த்தெடுத்து, அதிக நீளமான மீசைக்காரர் என்ற சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தனது சாதனையினால் ஏற்பட்ட பெருமையில் தனது மீசையை முறுக்கிவிட்டு மகிழ்கிறார். மீசைக்குப் பொருத்தமான கன்னக்குறு மீசையும் தாடியும் கூட அவரை மேலும் அழகுபடுத்துகின்றன.

மீசை அழகர்களுக்கான உலகளாவிய சம்பியன்ஷிப் போட்டி சுவீடன் நாட்டிலுள்ள க்ஸ்ராட் என்ற இடத்தில் விரைவில் நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் தன்னையும் இணைத்துக் கொள்ள டியற்மர் ஸ்ரோ தயாராகி வருகிறார். இப்போட்டியில் வென்று கின்னஸில் இடம்பெற இந்த மீசைக்காரருக்கு ஆசை இருக்கிறது.

தகவல் பெட்டி



நடை ராஜா



## புதுமை

ராட்சத கிளியா, என்று விழிகளை விரிக்காதீர்கள். மனிதர்களது ரசனைகள் புதுமையாக இருக்கும்போதுதான் வாழ்விலும் சலிப்புத்தட்டாது. இங்கு பாருங்கள், தொலைபேசி வாடகை நிலையம் நடத்தும் ஒருவரது புதுமையான சிந்தனை இது. கிளி வடிவில் தொலைபேசிக் கூண்டை அமைத்துள்ளார்.

கால்பந்தாட்ட சூரர்கள் நிறைந்த பிரேசில் நாட்டில் குலாவா நகரில் இந்த தொலைபேசிக் கூண்டு இருக்கிறது. இதன் புதுமையால் உலகப் பிரசித்தம் பெற்றுவிட்டது.



சிலுவையோடு எங்கு கிளம்பிவிட்டார் என்கிறீர்களா?

அமெரிக்காவின் ஃப்ஃோரிடா மாநிலத்திலுள்ள நோர்த் ஃபோட் மியேர்சைச் சேர்ந்த ஆர்தர் பிளேசிற், உலகிலேயே மிக நீண்ட தூரம் கால் நடையாகச் சென்றார் என்ற உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

1969ம் ஆண்டு டிசம்பர் 25ம் திகதி தனது கால் நடைப் பயணத்தைத் தொடங்கினார். மரத்தாலான ஒரு சிலுவையையும் இவர் சுமந்த வண்ணம் 277 நாடுகள் ல் பயணம் செய்துள்ளார். இவர் பயணம் செய்த தூரம் 53 ஆயிரத்தி 350 கிலோமீட்டர் (33,151 மைல்) இவருடைய மனைவி டெனிஸ் என்பவரும் கணவருடன் 224 நாடுகளுக்குக் கா ) நடையாகவே பயணம் செய்துள்ளார்.

யேசுநாதர் சிலுவையைச் சுமந்தது சோதனை. இவர் சிலுவையைச் சுமந்தது சாதனை. அதுவும் உலக சாதனை.

## பாடும் ஃபோன்



செல்லிடப்பேசி (செல்லுலார்ஃபோன்) பற்பல ரகங்களில் வந்துள்ளது. படத்தில் உள்ள செல்லிடப் பேசியில் நீங்கள் பாட்டும் கேட்கலாம். அதற்கு வசதியாக மின்னணு ஓடியோ பிளேயரை இணைத்து வெளியிட்டுள்ளனர். இண்டர் நெட்டில் இருந்தும் பாடல்களை பதிவு செய்துகொள்ள வசதி இருக்கிறது.

ஸம்ஸீக் நிறுவனம் இதனை தயாரித்துள்ளது. 160 நிமிடங்கள் தொடர்ந்து பேசும்வரை தாக்குப் பிடிக்கக் கூடிய பற்றரியும் இதில் இருக்கிறது.

திரையுலக மறுபக்கம் 127

# யார் இவர் தெரிகிறதா?

தமிழ்நாட்டிலிருந்து ஜபன்

சமீபத்தில் தமிழக பிரபல வார இதழ் ஒன்றில் 'இவரைத் தெரியுமா' என்ற கேள்வியோடு வெளியான தகவல் இது. இவரை உங்களுக்குத் தெரிகிறதா பாருங்கள்.

'மிகப் பெரிய அலையாகத்தான் தன் ரசிகர்கள் மனதில் புகுந்தார். தற்போது சித்தப்பா, பெரியப்பா ரேஞ்சுக்கு வயதாகிப் போனாலும், முன் வழுக்கையை மறைத்தபடி திரைத்துறையில் இன்னும் வெற்றிகரமாக வலம் வந்து கொண்டிருக்கிறார். நாம் இவரை மன்மதராசா என்றே சொல்லுவோம்.

எல்லோருக்கும் செக்ஸ் என்பது வாழ்க்கையில் ஓர் அம்சம் என்றால், மன்மத ராசாவுக்கு செக்ஸ்தான் வாழ்க்கையே. நடிக்க வருவதற்கு முன்பே வாலிப விளையாட்டுக்களில் ம.ராசா கில்லாடிதான்.

'டேய் எப்படிடா மச்சி இவ்ளோ பொண்ணுங்கள மடக்குற' கல்லூரியில் இவரது தோழர்களது கேள்வி அது.

'அதுக்கெல்லாம் ஞானம் வேணுமடா மாமு. சில பொண்ணுங்க உஷாராக இருக்கும். நம்மளத் தொடவே விடாது. அப்படிப்பட்ட பொண்ணுங்கக் கிட்ட மட்டும் அவசரப்பட்டோம்னு வெச்சக்க காரியம் குட்டிச்சுவருதான்.

அதுங்ககூட பேசறதுக்காக மட்டுமே தவம் கிடப்பது மாதிரி கையைக் கட்டிக்கிட்டு நடிக்கணுமடா. "இல்லீங்க உங்க முன்னாடி இப்படி இருந்தாத்தான் நல்லது. இல்லேன்னா உங்க அழகு படுத்துற படுத்தல்ல, என்னை எல்லை மீறிடும்" என்று நடுவிலே சீரியஸா சொல்லணும்.

பாவமா முகத்தை வைச்சிட்டு நாம இப்படிச் சொன்னதும் அவ விழுந்து விழுந்து சிரிப்பா. கொஞ்சம் தைரியசாலிப் பெண்ணா இருந்தால், "பரவாயில்லை. இயல்பா இருங்க" என்று கூறுவா.

இதுதான் நேரம் என்று மெள்ள அவ காதுகிட்டபோயி, 'என் கைய மட்டும் உங்க கையோட கோத்துக்கவா' என்று கேட்கணும். அப்புறம் படிப்படியா முன்னேற வேண்டியதுதான்" மராசா விவரிக்கும் இதுபோன்ற வீரதீர சாகசங்களை அவரது நண்பர்கள் வட்டம் வாயைப் பிளந்தபடி கேட்டுக்கொண்டிருக்கும். இதனைக் கூறியிருப்பவர் தற்போது தொழிலதிபராக விளங்கும் மன்மதராசாவின் கல்லூரித் தோழர்.

'என்னுடைய புதுப்படத்துக்கு உங்க பையன் ஏத்தவனா இருப்பான். அவனை நான் நடிக்க வைக்கிறேன்' என்று அனுமதி கேட்டார் ஒரு பிரபல இயக்குநர்.

சினிமாவுக்கு வந்து நல்லபேர் கொட்டோ கொட்டென்று கொட்டத் துவங்க, இன்னொரு பக்கம் வயது பேதம் பாராமல் மராசா புகுந்து விளையாட ஆரம்பித்தார். இவருக்காக தன் கணவரையும் விவாகரத்து செய்யத் துணிந்தார் ஒரு நடிகை.

முதிர் நடிகை ஒருவர் இவரிடம் பயங்கரமாக சிக்கியிருந்த தருணம் அது. அந்த நேரம் பார்த்து வேறொரு அறிமுக நாயகியிடம் விளையாடிவிட்டார் மராசா. அறிமுக நாயகிக்கு சாதிப் பின்புலம் அதிகம். தவிர கோமல்வாரியுமகூட.

சினிமாவில் வருவதுபோலவே சுற்றி வளைக்கப்பட்டு வாழ்க்கைப் பந்தத்துக்குள் சிக்கினார் ம.ராசா. திருமணத்துக்கு பிறகாவது நடிகர் வாலைச் சுருட்டிக் கொண்டு உட்கார்ந்தார் என்றால் அதுவும் இல்லை.

புதுசாக வரும் நடிகைகளுடன் தனிப்பட்ட முறையில் பேசி படிய வைப்பதற்காகவே, தனது டூயட் காட்சிகளில் 'லாங்ஷாட்' வைக்கச் சொல்லுவார்.

அப்போது படப்பிடிப்பு குழுவினர் கூப்பிட்டால் குரல் கேட்காத தொலைவில் இருக்க, இங்கே நடிகையுடன் காதல் வசனம் பேசி, அந்தப் படப்பிடிப்பு முடிவதற்குள் புது நடிகையை வளைத்துவிடுவார்.

அந்த நடிகை ஒரேயடியாக உணர்வுக் கொழுந்தாகி கல்யாண கோரிக்கை வைக்கும் போது, படபடத்துப்போய் சில லகரங்களைக் கொடுத்து சமாளித்துவிடுவார். இவ்வாறு இவர் இழந்த பணம் இதுவரை ஒரு கோடியைத் தாண்டுமாம்.

வாளிப்புக்கு பெயர்போன அந்த வடக்கத்திய நடிகையுடன் மராசா முதன்முறையாக ஒப்பந்தமாகி காமெடி படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது.

அந்த நடிகை அப்போது ரொம்பத் தீவிரமாக இன்னொருவரை காதலித்து வந்ததால் மராசாவின் பக்கம் திரும்புகிற வழியாக இல்லை.

மராசா கடுங்கோபமாகி 'இனி இந்தப் படத்தில் நடிக்க முடியாது' என்று அறிவித்தார். கால்வாசி படமே பாக்கியிருந்ததால் விதிர் விதிர்த்து போனார்கள் தயாரிப்பாளர்கள். அந்த நடிகைக்கு சம்பளத்தோடு இன்னும் சில இலட்சங்களைக் கொடுத்து மா.ராசாவை குளிரவைத்து படப்பிடிப்பை நடத்தி முடித்தனர்.

இவரைப் பற்றிய மேலும் சில தகவல்கள் அடுத்த வாரம். இவர் யார் என்பதையும் மேலும் சூசகமாக அடுத்தவாரம் கூறுகிறேன்.

## மீசை இல்லாமல்

ஒரு தமிழ் கதாநாயகன் இந்தி நடிகர்களைப்போல மீசை இல்லாமல் நடித்தால் ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று பயந்து பயந்து ஜீன்ஸ் படத்தில் நடித்தேன் ஏற்றுக் கொண்டார்கள். இப்போது மீசை இல்லாமல் நடிக்கிறேன் என்கிறார் பிரசாந்த்.




சமன்-ரவளி
படம்: செக்யூரிட்டி ஆபீஸர்

## மினி சினி

## முரளியுடன் ரம்பா

முரளி, ரம்பா முதலில் ஜோடி சேர்ந்த படம் 'தேசியகீதம்' அது படு தோல்விப்படம்.

வழக்கமான வெற்றிப்பட ஜோடிகள்தான் மறுபடி இணைந்து நடிப்பார்கள். ஆனால் 'தேசியகீதம்' படு தோல்வி கண்டபோதும் முரளி, ரம்பா மறுபடி இணைந்துள்ளனர்.

'தென்றலை தூதுவிட்டு' எனும் படத்திற்காக இந்த ஜோடி இணைந்துள்ளது. முதலில் இப்படத்திற்கு 'தாமிரபரணி' என்று பெயர் சூட்டியிருந்தனர்.

ரமேஷ் கண்ணா, ஜெய்கணேஷ், விஜய்சக்கரவர்த்தி, தலைவாசல் விஜய், மனோரமா, வடிவுக்கரசி உட்பட பலர் நடிக்கின்றனர். புதுமுகமாக அறிமுகமாகிறார் யோஜ்ராஜ்.

இயக்குவது இந்திரன். இசைதேவா. சண்டைப்பயிற்சி சூப்பர் சுப்பராஜன்.




## நாயகி மாற்றம்

பிரசாந்த் நடிக்கும் படம் 'சூட்லக்' இப்படத்தின் பாதிக் கதை லண்டன் நடுவே கப்பலில்தான் படமாகிறது. (டைட்டானிக் பாதிப்பு)

இப் படத்திற்காக மும்பாயில் இருந்து மயூரிகோங்கோ என்றொரு புதுமுகத்தை இறக்குமதி செய்தனர்.

ஆனால் கமரா கோணங்களுக்கு ஏற்ற முகம் இல்லை. நடிப்பும் ஒழுங்காக வரவில்லை என்று தூக்கிவிட்டனர்.

இப்போது பிரசாந்த் ஜோடியாக படத்தில் நடிப்பவர் ரியாசென். தாஜ்மஹால் படத்தில் பாரதிராஜாவின் அறிமுக நாயகிதான் இவர்.

தாஜ்மஹால் வர முன்பே பட வாய்ப்புக்களைக் கொத்திக் கொண்டிருக்கிறார் ரியாசென்.

## திருடர்கள்

பார்த்திபன்-முரளி நடிக்கும் 'வெற்றிக் கொடி கட்டு' வேகமாக வளர்ந்து வருகிறது. அதேபோல பார்த்திபன், பிரபுதேவா இணைந்து நடிக்கும் 'ஜேம்ஸ் பாண்டு' படமும் படப்பிடிப்பக்கள் நடந்துவருகின்றன.

இப்படத்தில் பார்த்திபன் ஜோடியாக மீனா நடிப்பதாக இருந்தது. இப்போது மீனாவுக்கு பதிலாக கவுசல்யா நடிக்கிறார். இஷா கோபிகரும் நடிக்கிறார். பார்த்திபனும், பிரபுதேவாவும் திருடர்களாக நடிக்கின்றனர். இயக்கம் செல்வா.

## வந்தார் நக்மா

குஷி படத் துவக்க விழாவுக்கு ஜோதிகாவுடன் அக்கா நக்மா வந்திருந்தார். அவரை பேட்டி காண பலர் முனைந்தும் மறுத்துவிட்டார்.

"நான் இன்னும் பழைய நிலைமையில் இருந்து மீளவில்லை. என்னைப் பற்றி எந்த விசயத்தை எழுதப்போகிறதா" என்று கூறினாராம்.

## பெண் ஆசிரமம்

'பெண் ஆசிரமம்' என்றொரு படம் தமிழ்நாட்டில் திரையிடப்பட்டது. வக்கீல் ராஜா என்பவர் இதனை தயாரித்துள்ளார்.

இப் படத்தில் பெண்கள் இடையே லெஸ்பியன் உறவு பற்றிய காட்சிகளும், மேலும் பல கிளுகிளுப்புகளும் இடம் பெற்றிருந்தன.

தணிக்கையில் ஒருவிதமாக அனுமதி பெற்றுவிட்டனர். பின்னர் இரகசியமாக சில காட்சிகளையும் இணைத்து படத்தைத் திரையிட்டுள்ளனர்.

இது பற்றிப் பொலிசாருக்கு புகார் செய்யப்பட்டதால், படத்தை கைப்பற்றி திரையரங்கை சீல் வைத்து மூடிவிட்டனர். வக்கீல் ராஜாவை தேடி வருகிறார்கள்.


## 36 மெட்டு

ஒரு காலத்தில் இளையராஜா வீட்டில் இயக்குநர்கள் காத்துக்கிடந்தனர். இளையராஜா போட்டுக் கொடுக்கும் மெட்டை மறுபேச்சின்றி ஏற்றுக் கொண்டனர். மறுபேச்சு பேசினால் இசை கிடைக்காது.

இப்போது காலம் மாறிவிட்டது. 'படம்' படத்துக்காக 36 மெட்டுக்கள் போட்டார் இளையராஜா. அதில் ஆறு மெட்டுக்களைத் தேர்ந்தெடுத்தாராம் இயக்குநர் சீத்து விருஷ்ணா.

## அதே கதை

தீன்னன்ன காலத்தின் பின்னர் ... படம் ... 'பூவெல்லாம் கேட்டுப்பார்' ... 'ஜோடி' ... 'மின்சார கண்ணா' ... 'கண்ணே' ...
கலையாதே' போன்ற படங்களின் பட்டியலில் ... ரோஜாத் தொட்டது ... ஓர் கதை ... வென்று காதலில் ஜெயிப்பதுதான் ... முடிக்கதையை ... எழுதிருக்கிறார்கள் ... கட்டத்தில் உருவி எடுத்தார்கள் ...



பார்த்திபன்-முரளி
படம்: வெற்றிக்கொடி கட்டு

## மீனாவுக்கு போட்டி

மீனாவை உரித்து வைத்ததுபோல காட்சி தருகிறார் விந்தியா. சங்கமம் படம் மூலம் அறிமுகமான விந்தியா மளமளவென்று பல படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார்.

'சங்கமம்' படத்தின் தோல்வி விந்தியாவைப் பாதிக்கவில்லை. பிரபுவின் 'திருநெல்வேலி', சத்யராஜுடன் 'உன்னையறிந்தால்', மற்றும் 'கண்ணுக்கண்ணாக' உட்பட பல படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார்.

மீனாவுக்குப் பட வாய்ப்புகள் குறைந்துள்ள நிலையில், அவரைப் போலவே உள்ள விந்தியாவுக்கு பட வாய்ப்புகள் குவியும் மர்மம் என்ன? கோடம்பாக்கத்தில் பலவித மாகக் கூறுகிறார்கள்.

ஒரு நடிகைக்கு மள மள வென்று படவாய்ப்புகள் குவிவதாக இருந்தால், அவர் நடித்த படங்கள் படு வெற்றி பெற்றிருக்க வேண்டும். அல்லது தயாரிப்பாளர்கள், இயக்குநர்களது மனம் அறிந்து நடப்பதில் கண்ணியமானவராக இருக்க வேண்டும்.




விஜய்-
படம்

...து தயாரிக்க பிரபு-மம்முட்டி முதல் முறையாக ...து நடிக்கும் படத்திற்கு 'நல்லவங்க' என்று பெயரி...ள்ளது. இப்படத்தை ராஜகபூர் இயக்குகிறார்.

...படத்தில் பிரசாந்திற்கு ஜோடியாக அறிமுக ...ரீத்தி. 'ஆனந்த மழை' நாயகன் பவன் கல்யா... ஜோடியாக 'தம்பி' என்ற தெலுங்குப் படத்தில் ...வருகிறார்.

...இயக்கத்தில் முதல் முறையாக பிரசாந்த் நடிக்... ...படத்திற்கு 'சூர்யா' என்று பெயரிடப்பட்டுள்ளது. ...படத்தை கே.பாலச்சந்தரின் 'கவிதாலயா' ...தயாரிக்கிறது.

...இயக்கத்தில் பார்த்திபன்-முரளி நடிக்கும் '...கொடி கட்டு' படத்தில் கதாநாயகிகளாக ...-இஷா நடிப்பதாக இருந்தது. இப்போது ...இஷாவுக்குப் பதிலாக மாளவிகா நடிக்கிறார்.

'பூமகள் ஊர்வலம்' வெற்றிப் படத்தை இயக்கிய மதுரவன் அடுத்து 'ஆணவம்' என்ற படத்தை பிரமாண்டமாக இயக்கவுள்ளார். இப்படத்தின் நாயகனாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார் சத்யராஜ்.

இப்ராஹிம் ராவுத்தர் தயாரிப்பில் விஜயகாந்த் மூன்று வேடங்களில் நடிக்கும் 'சிம்மாசனம்' படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் என்ன தெரியுமா? 'இந்திரனும் சந்திரனும்'. ஏற்கனவே கமல் நடித்த படம் 'இந்திரன் சந்திரன்'.

பிரவீன் காந்த் இயக்கிய 'ஜோடி' படம் தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வெளியாகவுள்ளது. தமிழில் வைரமுத்து நடித்த காட்சியை மட்டும் நீக்கிவிட்டு அதில் எஸ்.பி. பாலசுப்ரமணியத்தை நடிக்க வைத்து இணைக்கவுள்ளார்கள்.

நெப்போலியன் கதாநாயகனாக நடித்த வேற்றுமொழிப்படம் ஒன்று 'தி வாரண்ட்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இதில் நெப்போலியனுக்கு ஜோடியாக வினிதா நடித்துள்ளார்.

பெண்களை மட்டுமே வைத்து பிரியதர்ஷன் இயக்கும் படம் தமிழ்-மலையாளம்-தெலுங்கு-கன்னடம்-இந்தி என ஐந்து மொழிகளில் தயாராகிறது. மலையாளத்தில் தயாராகும் படத்திற்கு 'ராக்கிளிப் பாட்டு' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

'ப்ரியமுடன்' படத்தை இயக்கிய வின்சென்ட் செல்வா தற்போது 'வட்டாக்குடி இரணியன்' படத்தை இயக்கி வருகிறார். இதையடுத்து இவர் அஜித்குமார் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

## முகப்பில்

தேவயாணி

விந்தியா

## பிரசாந்துடன் ஏழு நடிகைகள்!

சிங்கப்பூரில் நட்சத்திர நிகழ்ச்சிக்கு பிரசாந்த் உட்பட முன்னணி நடிகைகள் படையெடுத்துச் சென்றனர். மேடையிலும் ஆடினார்கள். 'பிரசாந்த் நைட்' என்ற பெயரில் நட்சத்திர நிகழ்ச்சி நடைபெற்றது.

'பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக்கூட்டம் அதிசயம்' பாடலுக்கு பிரசாந்த்துடன் ஏழு நடிகைகள் கும்மாளம் போட்டனர். குஷ்பு, ரம்யாகிருஷ்ணன், ரம்பா, இஷா கோபிகர், தேவயானி, சிம்ரான், கவலட்சுமி ஆகியோரே அந்த ஏழுபேர்.

ஏழு அதிசயங்களை விவரிக்கும் பாடலில் பிரசாந்த்துடன் ஒவ்வொரு அதிசயத்திற்கு ஒவ்வொரு நடிகை ஆடிக்காட்டினார்களாம்.

## அஜித் — ஐஸ்

விஜயகாந்த் நடிக்கும் 'வானத்தைப்போல' படத்தை தயாரித்துள்ளவர் ஒஸ்கார் ரவி. இவர் அடுத்து தயாரிக்கும் படத்தின் நாயகன் அஜித்குமார். நாயகி யார் தெரியுமா? ஐஸ்வர்யா ராய்.

'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தை இயக்கிய எழில்தான் இப்படத்தை இயக்கவுள்ளார்.

## இந்தியில் ஜோடி

தமிழில் வெற்றி பெற்றுள்ள படம் 'ஜோடி'. இப்படத்தை இந்தியில் தயாரிக்கிறார்கள். அங்கும் பிரவீன்காந்த்தான் இயக்குகிறார்.

இந்தியில் ஷாருக்கான், ஐஸ்வர்யாராய் இருவரும் ஜோடியாக நடிக்கிறார்கள். இதன் பின்னர் மறுபடி தமிழ்ப்படம் இயக்கப் போகிறாராம் பிரவீன் காந்த். அஜித் அல்லது விஜய் கதாநாயகனாக நடிக்கக்கூடும்.

## புரட்சிக்காரன்

தமிழ்ப்பட உலகில் பகுத்தறிவுக் கருத்தோடு துணிந்து படம் எடுத்துவருபவர் வேலுபிரபாகரன். 'கடவுள்' படத்தில் பகுத்தறிவுக் கொள்கையை முன்வைத்திருந்தார். இப்போது சத்யராஜ், ரோஜா நடிக்கும் 'புரட்சிக்காரன்' படத்தை இயக்கி வருகிறார்.

இப்படத்தில் நடிக்க சத்யராஜ் குறைந்த சம்பளம் வாங்கியுள்ளார்.

பாடல்களை எழுதிய வைரமுத்து பணமே வாங்கவில்லையாம். இப்படத்தில் வேலு பிரபாகரனும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார்.







விஜயகாந்த்-மீனா
படம்: வானத்தைப்போல

## ...தோடு சொல்லுகிறோம்

...'ஆசை' நாயகனான குமார நடிகருடன் ...சேர்ந்து நடிகை அவரை விட்டுப் பிரிந்தது ...போது அந்த நடிகையின் வலையில் ...ஒரு பிரபல டென்னிஸ் வீரர். தற்போது ...கொடி கட்டிப் பறக்கும் இரட்டையர்களில் ...ஒருவராம்.

...தொழுந்து 'மா' நடிகை ...மும்பாயில் இருந்து ...வந்திருந்தார். வாலிப ...மேனி கொஞ்சம் ...சகோதரி நடிக் ...முறையிலும் கலந்து ...இதனை அறிந்த ...உடநரைத் தொழில் ...நடிகையை புடி ...ததாராம். நடி ...கட்டதால் சில ...கிடைத்ததாம்.

'க'வில் பெயர் ஆரம்பமாகும் மணியின் பிடியில் சமீபத்தில் சிக்கியுள்ள நடிகை புதுவரவாம். மரணத்திலும் அழியாப் புகழ்பெற்ற இளவரசியின் பெயர் கொண்டவர் அந்த நடிகை. ஒரே ஒரு படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார் இவரது கட்டான அழகு மணியை கவர்ந்து விட்டதாம். கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டாராம்.

சிங்கையில் நடந்த 'கலைச் சேவைக்கு' சென்ற நடிகைகள்கூட்டத்தில் சிலருக்கு ஏகப்பட்ட சம்பாத்தியமாம். 'சிமா' நடிகைக்கு பயங்கர மவுசு. ஆனால் மிகப் பெரிய தொழில் அதிபர் ஒருவரை மட்டுமே சந்திக்க இணங்கினாராம். இந்த விஷயம் சிங்கையில் பரபரப்பாக கசிந்து விட்டதாம்.



சினிமா விமர்சனம்
நமது விமர்சனக் குழு
35/100

## குதறப்பட்ட அப்துல் ஹமீத்

**படம்:** சூர்யோதயம்

**நடிப்பு:** விஜயசாந்தி, ரகுமான், ஹரிராஜ், அனுஷா, விஜயகுமார், சந்தோ, சவோஜா, லால் மற்றும் ரசிய நடிகர், நடிகைகள்.

ஏறக்குறைய நான்கு வருடங்கள் இழுபட்டு தற்போது வெளியாகியுள்ள படம். இந்திய, இலங்கை, ரசியா ஆகிய நாடுகளது கூட்டுத் தயாரிப்பு.

மூன்று நாட்டு நடிகர்களும் நடித்துள்ளனர். 'இசைப்பயணம்' என்ற பெயரில் தயாராகி, பின்னர் சூர்யோதயம் என்று பெயர் மாற்றப்பட்ட படம். முதலில் விஜயசாந்தி கிடையாது. பின்னர் திடீரென்று விஜயசாந்தியை கொண்டுவந்து அவருக்காக கதையை மாற்றினார்கள். விஜயசாந்தி நேரடியாக நடித்துள்ள தமிழ்ப்படம் இது.

பல இயக்குநர்கள் இப்படத்தை அவ்வப்போது இயக்கியுள்ளனர். எனினும் இயக்கம் ஆதவன் என்று காண்பிக்கிறார்கள்.

பிரமாண்டமான படப்பிடிப்பு. ஆங்கிலப் படங்களுக்கு நிகரான சண்டைக் காட்சிகளும் திப் துரத்தல்களும் பிரமிப்பூட்டுகின்றன. எந்தத் தமிழ்ப் படத்திலும் இதற்கு முன் கண்டிராத அளவுக்கு திருப்பமான துரத்தல் காட்சிகள். சண்டைப் பயிற்சியாளரான ...தங்கத்துக்கு சபாஷ் போடலாம்.

இந்திராவாக வரும் விஜயசாந்தி வெளுத்து வாங்குகிறார். அவருக்கு அடுத்ததாக கலக்குபவர்கள் இருவர். ஒருவர் புது வில்லன் வினவுதீத், இன்னொருவர் விஜயகுமார்.

தாவுத்தாக தோன்றும் வின்வழித் கண்களாலேயே மிரட்டுகிறார். கட்டான உடல். நல்ல எதிர்காலம் இருக்கிறது. ரகுமான், சார்லி ஆகியோருக்கு நடிக்க வாய்ப்பில்லை.

பம்பாய் குண்டு வெடிப்புதான் கதையின் உயிர்நாடி. ஆனால் மும்பாயின் குண்டு வெடித்தது என்று செய்தி கூறுவதாக காண்பிக்கிறார்கள். குண்டுவெடிப்பு நடந்த போது மும்பாய் என்று பெயர் மாற்றப்படவில்லை. அதிக காலம் தயாரிப்பில் இருந்ததால் இந்தக் குழப்பம்.

ஆங்கிலப் பட ரசிகர்களுக்கு பிடித்தமான தமிழ்ப் படம். கதையைத்தேடாது. காட்சிகளுக்காக பார்க்க விரும்பினால் பார்க்கலாம். பொழுதுபோக்கு சித்திரம்.

முக்கிய குறிப்பு: அறிவிப்பாளர் அப்துல் ஹமீதும் ஒரு காட்சியில் நடித்துள்ளார். அவருக்கு டப்பிங் குரல் கொடுத்திருப்பது கொடுமையப்பா. அப்துல் ஹமீதின் முத்திரையே குரல்தான். அதனைக் குதறிவிட்டார்களே.

## அடிதடி குஷ்பு

குஷ்பு இதுவரை பட்டு மலையாளப் படங்களில் நடித்திருக்கிறார். ஆனாலும் 'இன்டிபெண்டன்ஸ்' படம்தான் அவருக்குத் திருப்தியைக் கொடுத்திருக்கிறது.

இப்படத்தில் போலீஸ் அதிகாரியாக அடிதடிக் காட்சிகளில் புகுந்து விளையாடியிருக்கிறார். அதிரடியோடு கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் சாகசங்களும் இருக்கிறதாம்.

இப்படம் தமிழில் 'சிட்டி கமிஷனர்' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. கவர்ச்சியாகவும் குஷ்பு பல காட்சிகளில் தோன்றி இருக்கிறார்.

## ஒரு மௌனத்தின் அலறல்

உன்னை சந்தித்தபோது
என் வாழ்வில் வசந்தகாலம்
மலர்ந்து விட்டதாய் எண்ணினேன்
நீயோ...
என் முழுவாழ்வையுமே
மொட்டையாக்கி ஓடி மறைந்தாய்!
▫▫
என் இலக்கிய நேசகனே...!
என் கலையுணர்வுக்கு
உன் மொழிவளம்
கொழுகொம்பென எண்ணினேன்
நீயோ...
என் வலது கரத்தையே
சிலுவையிலறைந்து, என்னை
கலையுலகிற்கு அந்நியமாக்கினாய்,
நீ இலகுவாய்ப் பிரிந்து போனாய்
எங்கோ பறந்து போனாய்!
▫▫
நானோ...
இந்த அழகிய தோட்டத்தில்
அழுக்கான இதயங்களோடு
அடைபட்டுக் கிடக்கிறேன்!
▫▫
ப்ரியவனே...
நாம் வாழ்ந்த நந்தவனம்,
நாம் விவாதித்த நூல்நிலையம்,
நாம் விளையாடிய மைதானம்,
நாம் கைகோர்த்து நடந்த பூங்கா,
நாம் காலாற நடந்த ஏரிக்கரையோரம்,
நாம் சென்ற வழிபாட்டிடங்கள்
அத்தனையும் வெறிச்சோடிக்கிடக்கின்றன
நீ பிரிந்து போனதால்!
▫▫
உடையை மாற்றியெறிவது போல
உள்ளத்தை மாற்றிக் கொண்டவனே!
சொல்...!
நீ ஏன் எனக்கு காதலைத் தந்தாய்?
நீ ஏன் எனக்கு கண்ணீரைத் தந்தாய்?
▫▫
உலக சிகரத்தில் சிறகு விரிப்போம் என்றவனே
ஏனென்னை பிரிவின் வலிய கரங்களுக்குள்
சிறைப்படுத்தினாய்?
சொல்...!
ஏனெனக்கு சோகத்தைத் தந்தாய்?
என் குற்றங்களைக் கூறு,
இல்லையேல் மௌன நிஷ்டை கலைத்துவா...!
▫▫
நீ வாழ்வது புனிதர்களின் மண்ணிலல்ல;
தன்னை மட்டும் நினைக்கின்ற
முதலைகளின் சிறையில்...
மீண்டு வா... மனித மிருகங்களை விட்டு
எம் மண்ணின் மைந்தர்களோடு வாழலாம்!

ஆக்கம்: ஏ. ஆர். சந்துரு-பிலிமந்தலாவ.





## ஒரு தீவு! இரு தீர்வு

போர் நடந்த களமல்ல. இது புதுக்குடியிருப்பு மந்துவில் சந்தைப் பகுதி. விமானக் குண்டு வீச்சின் பின்னர் படுகளமாய்க் காட்சியளிக்கிறது. பலியானவர்கள் போக, படுகாயமடைந்த பாலகன் இவன். பலியானவர்கள் பொதுமக்கள் என்பதை இன்னமும் அரசாங்கம் ஒப்புக் கொள்ளவில்லை. கோணகலவில் உடன் நஷ்டஈடு; ஆயுத விநியோகம். புதுக்குடியிருப்பு சோகத்துக்கு பூசி மெழுகல்.


புதுக்குடியிருப்பும், கோணகலவும் இலங்கைத் தீவில்தான் இருக்கின்றன. தீர்வுகள் மட்டும் இரு விதம்!

## "சும்மாயிரு ஞாபகமே!"

சும்மா கிடந்த மனசுக்குள்
சோம்பல் முறித்தன ஞாபகங்கள்.
••
இரவு விட்டொழிரும் நிலவின்
ஒளியிடைக்குள் தனியே
இருந்துகொண்டு ஆத்மாக்கள்
பேசுவதை நிதானமாய் கேட்கிறேன்.
••
உச்சநடுக் கீர்த்தனங்கள்
ஊடுருவிப் போகாமல்- உச்சிமர
வேம்பினிலும் ஊர்க்குருவி அமராமல்
ஊர்முற்றம் எல்லாமே
ஏனோ ஊரடங்காய் கிடந்ததாம்!
••
கம்பீரச் சாரல்களின் மயக்கங்கள்
வீழ்ந்ததாம்- சாகர முகடுகளின்
தலைவிதிகள் சரிந்ததாம், அழுதாலும்
திரும்பாத அட்சரத்து ஆட்டங்களை
ஆடியே பார்க்கிறோம்- ஐயோ
ஞாபகங்கள் அஞ்சி மெலிவடைந்து
சப்பிகளின் அறுவடையாய் கோவணமும்
இல்லாமல் எங்கேயோ போகுதே!
••
மருள் கொண்ட நெஞ்சத்தில்
மறுதலித்த தவறுகளை மனசுக்குள்
பூட்டி வைக்கும் அடைகாத்த
குற்றங்களை ஆர்வத்தால் தடவிக்
கொள்ளும் இதயங்கள் எத்தனையோ?
••
விழி வடித்த கண்ணீர் முடிந்தவுடன்
உப்பாக, மனசு விடும் ஊமை மூச்சு
ஞாபகத்தால் சிலை எழுப்ப
ஆத்மாக்கள்
இங்கே உயிருக்காய் மட்டுமே
போராட்டம் நடத்துகிறது!
••
வாழ்க்கை கழிவுகளின் ஞாபகங்கள்
சும்மாவே கிடக்கட்டும்; அநாதரவான
மனசுகளை அணைக்கும் வரைக்கும்!

உவைஸ்கனி.

## யார் இவர்?



யார் இவர்? என்றதுமே, அட, நமக்கா தெரியாது, நடிகர் மணிவண்ணன்தான் என்று மகா உறுதியாக நீங்கள் நினைத்திருந்தால் மகா தப்பு!

மணிவண்ணனை உரித்து வைத்ததுபோல இருக்கும் இவருக்கும் மணிவண்ணனுக்கும் ஒரு தொடர்புமில்லை. இவர் தமிழ்நாட்டில் கார்த் தரகராக இருந்தார். 'மணிவண்ணன் போலவே இருக்கிறீர்களே, சினிமாவில் நடிக்கலாமே!' என்று பலரும் கூற, இவருக்கும் ஆசை துளிர்விட்டு, இப்போது தொலைக் காட்சித் தொடர்கள் சிலவற்றில் நடித்துவருகிறார். இவரது இயற்பெயர் மணிகண்டன். தொலைக் காட்சித் தொடர்களில் நடிப்பதற்காக மினி வண்ணன் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டிருக்கிறார். ஆனாலும் அசல் அசல்தான். நகல் நகல்தான்!

## எப்படி?

சிலப்பதி காரமும்
சிந்தா மணியும்
வளையா பதியும்
மணி மேகலையும்!
★★
உளவாய் இன்னும்
ஒருதொகை நூல்கள்
தமிழாள் பெருமை-
தடையதில் இல்லை!
ஆனாலும்-
★★
வயிறாற உணவுக்கு
வழியில்லா வீட்டினிலே
வளையா பதி(ல்)களை
வைத்து
வழித்தா நக்குவது...?

நீர்கொழும்பு
தருமலிங்கம்.

## தேன் கிண்ணம்

## "ஒரு பயணத்தின் முடிவு!"

நான்
படுத்திருக்கிறேன்;
இரத்த ஓட்டங்களெல்லாம்
ஸ்தம்பித்த நிலையில்...!

வெள்ளைச் சீலை தவிர
வேறொரு துணியும்
என் உடலின் மேலில்லை!

சொந்தக்காரர்களெல்லாம்
என்னைச் சூழ
சோக சுலோகங்கள் சுமந்து
ஆர்ப்பரிக்கின்ற
ஆர்ப்பாட்டக்காரர்களாய்..!

அழு குரல்கள்
ஒலி பெருக்கிகளை
போட்டிக்கு
அழைத்துக் கொண்டிருந்தன...!

"போர் நடக்கிறது
போகாதே போகாதே என்றேன்;
கேட்காமல் போனானே!"
என் தாயின் குரல் மட்டும்
தனித்துவமாக
உரத்து ஒலித்தது.

இவ்வளவு நாளும்
மரணம் என்றால்
மனக் கிளர்ச்சியாகத்தான்
இருந்தது;
அந்த
துப்பாக்கிக் குண்டுகள்
என்னில்
துளையிடும் வரை.

இப்போது எனக்கு
இணையற்ற மகிழ்ச்சிதான்;
ஏனெனில்,
அனைத்தும் இங்கேதானே
அனுப்பி வைக்கப்பட்டுள்ளன!

சமாதானம், நிம்மதி,
சத்தமற்ற அமைதி,
சுதந்திரம், ஒற்றுமை,
சுத்தமான புரிந்துணர்வு
அனைத்தும் இங்கேதானே
அனுப்பி வைக்கப்பட்டுள்ளன!

ஏறாவூர் ஸபீர் ஹாபிஸ்.

## தீபாவளி வாழ்த்துக்கள்

தீர்வே! சமாதானமே!
உங்களுக்கு எங்கள்
தீபாவளி வாழ்த்துக்கள்!
★★
உங்கள் விலாசங்களை
பல வருஷங்களாக
தேடிக் கொண்டிருக்கிறோம்;
கேட்டுக் கொண்டிருக்கிறோம்;
யாரும் தருவதாக இல்லை.
★★
நீங்கள் எங்களை
வாழ்த்த வராவிட்டாலும்-நாங்கள்
வாழ்த்துவதன் மூலம்
"எங்களை மறந்துவிடாதீர்கள்,"
என்று சொல்லத்தான்
வாழ்த்து அனுப்புகின்றோம்!
★★
யார் கையில்-இந்த
வாழ்த்து கிடைக்கிறதோ..
தீர்வு சமாதானம்
இவர்களில் யாரிடமாவது
கொடுத்து விடுங்கள்;
அடுத்த வருடமாவது
நம்மைத் தேடி வரமாட்டார்களா?

கதிர்-பிட்டியகந்தை.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

07.11.99 முதல் 13.11.99வரை

**மேடம்:**
கிரகச்சமவக்கிரகம் பலம் இழந்து காணப்படுவதால் எதிலும் வெறுப்பு உண்டாகும். தொழில் கல்வித்துறைகளில் பாதிப்பு ஏற்படலாம். அரசு, வெளித்தொடர்புகளில் கவனமாக இருக்க வேண்டும். நற்பலன்களைக் கெடுக்கும். கணவரால் குடும்பத்தில் உதவிகள் தொடரும். துலாராசிக்காரரால் நன்மை கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 07, 11.

**இடபம்:**
நோய், துன்பங்கள் காணப்படும். தொழில், பண வசதிகள் பெருகும். எதிர்ப்புக்கள், தடைகள் நீங்கும். மனநிம்மதி கிடைப்பதுடன் பலமாற்ற நிலைகள் தோன்றும். பயண வசதிகள் ஏற்படும். சுபநிகழ்வுகளுக்கு திட்டம் தீட்டப்படும். ரோகினிக்காரர்கள் இலாப நிலைகளையும் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 09, 12.

**மிதுனம்:**
பயணம் அலைச்சல் கொடுக்கும். பணவிரயம் தொடரும். தொழில், சுப விடயங்களின் நிலை காலதாமதமடைதல். எதிலும் நிதானம் தவறாது இருக்கவும். சகோதரர்கள் சிக்கலைக் கொடுப்பார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செல்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 07, 11.

**கடகம்:**
திருமணத்தடைகள் சிலருக்கு நீங்கும். எதிர்பார்த்த, பண வருமானம் வந்து சேரும். உறவினர் நண்பர்கள் வந்து சேருவார்கள். ஆலய வழிபாடும்,பெரியோர்களின் உதவியும் ஆசியும் கிட்டும். ஆயிலியக்காரருக்கு சௌக்கியமான நிலை தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 08, 12.

**சிம்மம்:**
பணநிலை, தொழில் வசதிகள் உயரும். ஸ்தல யாத்திரை மேற்கொள்ள நேரிடும். வெளிநாட்டுத் தொடர்புகள், உறவினர்களது வருகை என்பன காணப்படும். முக்கியவிடயங்கள் இவ்வார நடுப் பகுதியில் கைக்கு வந்துசேரும். மனதில் சந்தோஷம் இருக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 09, 10.

**கன்னி:**
முயற்சிகளில் ஒருவிதமான அச்ச உணர்வு குடிகொள்ளும். உடல் நிலை சோர்வாக அமையும். பயண நிலையும் உறவினர், நண்பர்கள் வருகையும் காணப்படும். தொழில் நிலையில் பற்றுக் குறையும். அத்தப் பெண்கள் அச்சமடைவர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 01
அதிஷ்ட திகதிகள் : 10, 11.

**துலாம்:**
கிரக அதிபல நிலை கல்வி பரீட்சை, முயற்சிகளில் அதிக கவனம் செலுத்த வைக்கும். பண, விருந்து வசதிகள் வீடு வரை வரும். வார இறுதியில் நோய் துன்பங்கள் தொடரவாய்ப்பு உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : கலப்பு நிறம்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 10, 12.

**விருட்சிகம்:**
நோய் துன்பங்கள் நீங்கப்பெறும். சுபசெய்திகள் மனதைக் கவரும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வர முயலலாம். மண்பாண்ட தொழில் செய்வோர் வெற்றி, இலாபத்தை அடைவார்கள். கேட்டைக்காரருக்கு நன்மையான காலம்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 09, 12.

**தனுசு:**
அரச எதிர்ப்பு,மனதில் பயம் கொண்ட நிலை; முக்கியபொருட்கள் தொலைதல், நோய் துன்பங்கள் வார இறுதியில் தொடரும். பரீட்சை, கல்வி, முயற்சி வெற்றி தரும். பிரிந்த உறவினர்கள் ஒன்று சேருவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 01.
அதிஷ்ட திகதிகள்: 10, 08.


**மகரம்:**
செவ்வாய் உச்சபலம் கொள்வதால் மனக்கவலை கூடும். செலவுகள், பணவிரயம் விவாசாய முயற்சிகள் பெரிய பாதிப்பைக் கொடுக்க நேரிடும். சிறு பிள்ளைகளுக்கு நோய் துன்பங்களைக் கொடுக்கும். பயணம் மற்றும் பொறுப்புள்ள விடயங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். திருவோண, அவிட்டக்காரர்கள் சிக்கல்களை குறைப்பது நன்று.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்:02.
அதிஷ்ட திகதிகள்: 11, 13.

**கும்பம்:**
புதிய முயற்சிகள் தொடர வாய்ப்புகள் உண்டு. பண முதலீடுகள், தொழில் முயற்சிகள் தோன்றும். ஆலய வழிபாடும் காணப்படும். சகோதர எதிர்ப்பு நிலை தளரவாய்ப்பு உண்டு. நெடுநாள் காத்திருந்த சந்தர்ப்பம் கை கூடும். சதய, அவிட்டக்காரர்கள் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: ஞாயிறு, புதன்.
அதிஷ்ட நிறம்: மண்ணிறம்;எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 08, 10.

**மீனம்:**
07, 11ம் இடங்களில் பலம் மாறிக் கொள்வது சுப விடயங்களைக் கொடுக்கும். மனதில் சிறுமாற்றம், தளர்வு ஏற்படும். பணப்பொருளாதார நிலை, சகோதர அன்பு நிலை உயர்வாகக் காணப்படும். முயற்சிக்கேற்ற பலன் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 10, 12.

## நில் - கவனி - முன்னேறு

"அடேயப்பா, ஒரே வேலை, வேலை, வருவது என்றால் எல்லாம் ஒரேயடியாக வருகிறது. எதை முதலில் செய்வது என்றே தலையைச் சுற்றுகிறது." என்று ஒருவர் அங்கலாய்த்துக் கொள்ளுகிறார். "ஆம். அப்படித்தான் வரும். இது சகஜம்தானே! முக்கியமாய் இருப்பதை முதலில் செய்யுங்கள். மற்றவைகளை தள்ளிப் போடுங்கள்!" என்று அனுபவம் உள்ள அவருடைய நண்பர் ஆலோசனை சொல்கிறார்.



இதைச் சொல்வதற்கு அவ்வளவு அனுபவமும் அவசியம் இல்லை. இது வெறும் பொது அறிவு (Commonsense). எனினும் இந்தப் பொது அறிவு இல்லாமல் நாம் பிரகாசிக்க விரும்புகிறோம்.

அலுவலகங்களில் இம்மாதிரிக் காட்சிகள் தினமும் உண்டு. அதிகாரி அலுவலர்களைக் கூப்பிட்டு, இது ஆகிவிட்டதா, அது ஆகிவிட்டதா? என்று கேட்டுக்கொண்டே இருப்பார்.

தைரியமுள்ள அலுவலர் ஒருவர், "சேர், நீங்கள் கொடுப்பது எல்லாம் அவசரம் என்கிறீர்கள். எதை முதலில் செய்வது எதை பின்பு செய்வது என்று சொல்லிவிடவும். எல்லாம் அவசரம் என்றால் முடியாது!" என்ற தன் எளிய ஆயுதத்தை, ஒரு பேருண்மையைச் சொல்வது போல் சொல்லுவார்!

அவரவர்கள் தேவை, அவரவர்களுக்கு அவசரம் என்பது மருத்துவமனைகள், ரயில் நிலையங்கள், பள்ளிகளில் அனுமதி காலம், சுவாமி தரிசனம், திருவிழாக்கள் இவைகளைக் கூர்ந்து கவனிக்கும்போது தெரியும்.

அம்மாதிரியே நம்மிடம் வரும் பணிகள் எல்லாமே அவசரமாகத்தான் தோன்றும். எனினும் தீர ஆலோசித்து செயல்படுவது முறையாகும். தினம்-ஏன் நிலைமைகள் மாறும் பொழுதெல்லாம் பரிசீலனை செய்து, எதை முன்னர் செய்வது, எதை தள்ளிப்போடுவது என்ற முடிவுகள் எடுப்பது புத்திசாலித்தனம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## வீட்டு வேலையே உடற்பயிற்சி

இப்போது பலவிதமான நோய்கள் புதிய புதிய பெயர்களுடன் தோன்றுகின்றன. தொற்று நோய்களும் அதிகரித்துவிட்டன. ஆனால் நமது முன்னோர்கள் இந்த அளவு நோய்களுக்கு ஆளானதில்லை. 90 வயது வரையில் கூட நோயின்றி தெம்பாக வாழ்ந்தவர்கள் பலர்.

அவர்கள் காலத்தில் சுற்றுச்சூழல் மிக நன்றாக இருந்தது. சத்தான உணவுகள் கிடைத்தன. என்றாலும், அவர்களது மிகக் கடினமான உழைப்புத்தான் அவர்களது ஆரோக்கியத்துக்கு முக்கிய பங்கு வகித்தது என்று கூறலாம். இன்று நமது வாழ்க்கை முறை மிகவும் சொகுசானதாக மாறிவிட்டது.

அந்தக் காலத்தில் தோசைமாவு, இட்லி மாவு, மசாலா பொருட்கள் போன்றவற்றை அரைக்க ஆட்டுக்கல், அம்மி போன்றவற்றைப் பயன்படுத்தினர். உலர்ந்த மாவுகளை அரைக்கக் கைகளால் இயக்கும் கல்லாலான சாதனத்தைப் பயன்படுத்தினர். இவற்றைப் பயன்படுத்துவதே மிகச் சிறந்த உடற்பயிற்சியாக இருந்தது.

துணிகளுக்கு இஸ்திரி போடுவது, வீட்டு



ஜன்னல்கள், கதவுகளைத் துடைப்பது, வீட்டுத் தளபாடங்கள், உபகரணங்களைச் சுத்தம் செய்வது, சிறந்த உடற்பயிற்சியாகும். தனியாக உடற் பயிற்சி செய்யத் தேவையில்லை. வீட்டு வேலைகளைச் செய்வதால் வீடும் சுத்தம் அடையும். உடலுக்குத் தேவையான பயிற்சியும் கிடைக்கும்.

## ருசியும் -மணமும்



உணவில் ருசியும், மணமும் கிடைக்க கராம்பு சேர்க்கப்படுகிறது. இதனைப் பற்பசை, சவர்க்காரம், எண்ணெய் போன்றவற்றிலும் சேர்க்கிறார்கள்.

கராம்பின் பயனை முதன் முதலில் சீனர்கள் அறிந்தனர். பின்புதான் ஐரோப்பியர்களுக்கு இதன் பலன் தெரிந்தது.

கராம்பு செடி வகையைச் சேர்ந்தது. செடியை நட்ட 6 வருடத்திற்குள் கராம்புப் பூக்கள் பூக்கத் தொடங்கும். 12 முதல் 15 வருடங்கள் இதன் பலன் கிடைக்கும்.

கராம்பில் வாசனைத் தன்மை அதிகம் உள்ளது. இதன் மேற்பகுதியை நீக்கி விட்டால் அதிலிருந்து எண்ணெய் தயாரிக்கலாம்.

பல்வலியைப் போக்கும் மருந்தாகவும் கராம்பு செயற்படுகிறது. வேதனை தோன்றும் போது பற்களின் துவாரங்களில் கராம்பைத் தூளாக்கி வைக்க வேண்டும்.

கராம்பு மூலம் சுவாசத்திற்குப் புத்துணர்ச்சி கிடைக்கும். பற்களில் இருக்கும் பூச்சிகளும் கராம்பால் செயலிழக்கும்.

ஆயுர்வேத மருத்துவத்தில் பித்தம், கபம், இரத்த ஓட்டம் தொடர்புடைய நோய்களுக்கு கராம்பு மருந்தாகிறது.

தலைவலி ஏற்பட்டால் கராம்பைத் தூளாக்கி, தண்ணீரில் கலந்து நெற்றியில் தேய்க்கலாம்.

## அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்

**வைரமோதிரப் போட்டியில் அதிஷ்டசாலிகள் இவர்கள்தான்.**

வைரமோதிரப் பரிசு பெறும் அந்த சூப்பர் அதிஷ்டசாலியின் பெயரும், ஆறுதல் பரிசு வெல்லும் ஏனைய பத்து அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் அடுத்தவாரம் இடம்பெறும். முதல் பத்து அதிஷ்டசாலிகளது பெயர்கள் இதோ:

1. நபீஸா முகமட்
   இல. 519/B4, கதிரேசன் வீதி,
   பண்டாரநாயக்க, அனுராதபுரம்.
2. க.பிரபாகினி
   538 A/1,அளுத்மாவத்தை வீதி,கொழும்பு-15.
3. ச.ஞானப்பிரகாசம்
   இல. 11, குட்செட் வீதி, புத்தளம்.
4. ச.நந்தினி
   இல. 48/3, பாரதி வீதி,கல்முனை-03.
5. இ.கமலேஸ்வரன்
   1ம் வட்டாரம், சல்லி சாம்பல்தீவு, திருமலை.
6. அ.சுப்புலட்சுமி
   இல. 5, கற்குழி வீதி,தெகிவளை.
7. செல்வி துஷ்யந்தி மகேந்திரராஜா
   4 PLACE DES VERGERS,
   95140 GARGES LES GONESSE,
   FRANCE.
8. ஜே.லூர்துமேரி
   நு/வ/பிரெம்லி தமிழ் வித்தியாலயம்,
   கந்தபொல.
9. எம்.எம்.நவாஸ்
   இல. 569/22, B.N பிளேஸ், திஹாரிய.
10. என்.விக்கினராஜா
   P.O.Box 30059
   DOHA-QATAR.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GR

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

தொழில்:.....................

கையொப்பம்:.....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13-11-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# புவனா வழங்குவது 15 மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரனைப் பற்றி வெள்ளை மாளிகையில் பணியாற்றும் சக ஊழியர்களான பெண்கள் அடிக்கடி பேசுவதையிட்டு, மோனிக்கா ஒரு முடிவுக்கு வந்தாள்.

அவள் படித்த உளவியல் படிப்பின் பயனாக அவளால் அந்த முடிவுக்கு வரமுடிந்தது.

கிளின்ரன்மீது அப் பெண்களுக்கு ஒரு ஈர்ப்பு இருக்கிறது. அவருடன் நெருங்கிப் பழக ஏங்குகிறார்கள். அதற்கான வாய்ப்புக் கிடைக்காத காரணத்தால், அவரைப் பற்றிக் கிளுகிளுப்பாகப் பேசுவதில் இன்பம் காண்கிறார்கள்.

அவர்களுக்கு மட்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் கிளின்ரனுடன் நெருங்கி உறவாடத் தயாராகவே இருந்தனர்.

கிளின்ரனிடம்அப்படி என்ன கவர்ச்சியைக் கண்டுவிட்டார்கள்? என்பதுதான் மோனிக்காவுக்கு முதலில் எழுந்த பிரமிப்பு.

அரைக்கிழமாகிக் கொண்டிருக்கும் இந்த மனிதரிடம் அப்படி என்ன கண்டுவிட்டார்கள்? என்று யோசித்தாள்.

ஆண்களைப் பற்றிய உண்மையான ரசனையே அப் பெண்களுக்குக் கிடையாது என்று கருதினாள்.

"வெள்ளை மாளிகை பைத்தியக்காரர்களுக்கான மையமாக மாறிவிட்டதா? வோஷிங்டனுக்கு என்னதான் நடந்து விட்டது?" என்று தன் நெருக்கமான தோழியிடம் கேட்டாள்.

"கிளின்ரனை நேரில் பார்த்தால் இப்படியொரு கேள்வியை நீ தொடுத்திருக்க மாட்டாய்!" என கண்சிமிட்டினாள் அத்தோழி.

இவ்வாறு சகலருமே கூறக்கூற கிளின்ரனைச் சந்திக்கும் ஆசை மோனிக்காவுக்கும் வந்துவிட்டது.

அதற்கான முதல் சந்தர்ப்பம் அதே ஜூலை மாதத்தில் கிட்டியது. ஆயினும் கிட்டிய வாய்ப்பு கிட்டத்தில் நின்று பார்க்கும் வாய்ப்பல்ல; கூட்டத்தோடு கூட்டமாக தொலைவில் நின்று பார்க்கும் வாய்ப்பு.

அவ்வாறு தொலைவில் நின்று பார்த்தபோதே மோனிக்காவுக்கு தன்னையும் அறியாது உள்ளூர சிலிர்ப்பு வந்தது.

தன்னுடன் பணிபுரியும் பெண்கள் கிளின்ரன்மீது ஏன் மோகம் கொள்கிறார்கள் என்பதற்கான காரணத்தை மோனிக்கா கிளின்ரனைப் பார்த்தவுடனேயே தெரிந்து கொண்டாள்.

தென்கொரிய நாட்டின் அதிபர் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தார். அவருக்கு அளிக்கப்பட்ட பொது வரவேற்பில்தான் கிளின்ரனை எட்டத்தில் நின்று இரசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.



### விபரிப்பு

மோனிக்கா அந்த முதல் அனுபவத்தை பின்வருமாறு கூறுகிறாள்:

"தென் கொரிய அதிபருக்கான அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது ஒலி பெருக்கியில் ஓர் அறிவித்தல்:

சீமான்களே! சீமாட்டிகளே! அமெரிக்க ஐக்கிய இராச்சியங்களின் அதிபர் அவருடைய பாரியாருடன் இதோ!" என்னும் சொற்கள் கேட்டதும், அனைவரின் கண்களும் மேடையை நோக்கித் திரும்பின.

அப்போதுதான் நான் முதலில் அவரை நேராகப் பார்த்தேன். என்னையே அறியாமல் ஓர் அதிர்ச்சி என்னை ஆட்கொண்டதாக நினைக்கிறேன். எனது மூச்சு ஒரு தரம் தடைப்பட்டது போலிருந்தது. இதயத்துடிப்பு கனவேகத்தில் இருந்தது. என் வயிற்றில் பட்டாம் பூச்சிகள் பறப்பது போன்று உணர்ந்தேன்.

அவரைச் சுற்றி ஒரு காந்தக் கவர்ச்சி அலை வீசியது. எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன்; இவர்மீது பெண்களுக்கு பித்துப் பிடிப்பது நியாயம்தான்!"

எட்டத்தில் நின்று பார்த்தபின் கிளின்ரனை அருகில் நின்று பார்க்க வேண்டும் என்னும் அவா உந்தியது. அதற்கான சந்தர்ப்பம் ஓடோடி வந்தது.

ஜூலை மாத இறுதியில் வெள்ளை மாளிகையை விட்டு பில் கிளின்ரன் தன் குடும்பத்தாருடன் ஒய்வைக் கழிக்க மேரிலாந்தில் உள்ள காம்ப் டேவிட் என்ற இடத்துக்குச் செல்ல இருந்தார்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒருவகையான பிரிவுபசார விழா போன்ற சிறு வைபவம் வெள்ளை மாளிகையில் நடைபெறுவது உண்டு.





பாதையின் இருமருங்கும் சங்கிலியால் தொடுக்கப்பட்ட கம்பங்கள் நடப்பட்டிருக்கும்.

இருபுறமும் வெள்ளை மாளிகை ஊழியர்கள் சகலரும் அணியாக நிற்பார்கள். நடுவே செங்கம்பளத்தில் நடந்துவரும் அதிபர் இருபுறமும் நிற்கும் ஊழியர்களுக்கு கை கொடுத்து விடைபெறுவார். இது ஒரு சம்பிரதாயச் சடங்கு.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் பல போலியான, அநாவசியமான சம்பிரதாயங்களில் இதுவும் ஒன்று.

பில் கிளின்ரன் துரித கதியில் ஒவ்வொருவருக்கும் கைகொடுத்துக்கொண்டு வந்தார்.

தன் அருகே கிளின்ரன் வரப்போகிறார் கைகுலுக்கப் போகிறார்; என்ற நினைப்பில் மோனிக்காவின் இதயப் பிரதேசம் எங்கும் இனம்புரியாத சந்தோசம் பரவியிருந்தது.

அவர் நெருங்க நெருங்க அவளது இதயத் துடிப்பு அதிகரித்தது; எதிர்பார்த்து ஏங்கியது. அருகில் வரும்போது நம்ப முடியாத பிரமை ஏற்படும். மோனிக்காவும் பிரமை பிடித்து நின்றாள்.

இதோ வந்துவிட்டார். இதோ இப்போது அவளுக்கு அருகில் நிற்பவளோடு கைகுலுக்குகிறார்....

அடுத்தது...

ஆம்....அடுத்தது அவள் முறை. உண்மையாகவா? பில் கிளின்ரன்தானா? கனவு காணவில்லையே. தன்னையே கிள்ளிப் பார்க்கலாமா? என்று எண்ணினாள்.

வந்துவிட்டார். அவரது கை அவளை நோக்கி நீள்கிறது. அவரது அதரங்களில் வழக்கமான புன்னகை ஒட்டிக்கிடக்கிறது. அந்தக் கண்களில்... அப்பா, அந்தக் கண்களில்தான் எத்தனை கவர்ச்சி? பெண்களை பற்றிக் கொள்ளும்–தீவைக்கும் கண்கள்.

அவர் கைநீட்டிய பின்னர்தான் மோனிக்கா தன்னை சுதாகரித்துக் கொண்டு கைகளை நீட்டினாள்.

அவரது கை அவளது கையைப் பற்றிய போது, அவரது கண்கள் அவளையே ஊடுருவிப் பார்த்தன. அக் கண்களில் திடீர் பரவசம் தோன்றி மறைந்தது.

அவரது கைகள் தன் கையைப் பற்றிய போதும், பற்றிக் குலுக்கியபோதும், அந்தக் குலுக்கலில் ஏதோ இரகசியம் பரிமாறப்பட்டது போன்ற உணர்ச்சி பாய்ந்தது. அது வார்த்தைகளால் சுலபமாக விபரிக்கமுடியாத உணர்ச்சி.

## முதல் சந்திப்பு

ஆனாலும், எட்டத்தில் நின்று பார்த்தபோது இருந்த ஏக்கமும், எதிர்பார்ப்பும் அருகில் பார்த்தபோது கொஞ்சம் குறைந்துவிட்டது.

அடுத்த மாதமான ஆகஸ்ட் 9ம் திகதியும் இதேபோன்றதொரு நிகழ்ச்சி நடக்க உள்ளதாக மோனிக்கா அறிந்தாள்.

அந்த நிகழ்ச்சியில் கிளின்ரனை எப்படியாவது கவர்ந்துவிட வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தாள். கிளின்ரனைச் சுற்றியே மோனிக்காவின் மனம் அலைபாய்ந்து திரிந்தமையால், பிளேய்லரை அவள் நினைக்க நேரமிருக்கவில்லை.

ஆகஸ்ட் 9ம் திகதி எப்போது வரும் என்று மோனிக்கா காத்திருந்தாள். அந்த நாளும் வந்தது.

### புத்துணர்வு

வோஷிங்டனில் உள்ள பிரபலமான ஆடை விற்பனை நிலையத்தில் மோனிக்காவின் தாயாரான மார்சியா இளம் பச்சை வர்ண ஆடை ஒன்றை வாங்கிக் கொடுத்திருந்தார்.

இளமையையும், புத்துணர்வையும், புதுப் பொலிவையும் காண்பிக்க ஏற்ற ஆடையாக அதனைக் கருதினாள் மோனிக்கா.

ஆகஸ்ட் 9ம் திகதி அந்த ஆடையைத்தான் அணிந்து கொண்டாள். அந்த ஆடையை அணியும்போது மோனிக்காவுக்கு தன்னம்பிக்கை தோன்றுவதுண்டு.

ஆள் பாதி, ஆடை பாதி என்று தமிழில் முதுமொழி இருக்கிறது. அது யாவருக்கும் பொருத்தமானதே.

சில ஆடைகள் புறத்தோற்றத்தில் மட்டுமன்றி, அதை அணிந்திருப்போருக்கு மனதளவிலும் கம்பீரத்தை–உற்சாகத்தைத் தரவல்லன.

இளம் பச்சை வர்ண ஆடையுடன் நின்ற மோனிக்காவுக்கு, இன்று கிளின்ரன் தன்னால் கவரப்படுவது உறுதி என்னும் நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

இம்முறை கிளின்ரன் நிதானமாக பலருடன் உரையாடினார். நாசூக்காகச் சிரித்தார். மோனிக்காவின் எதிர்ப்புறத்தில் அவளுடன் பயிற்சி பெறும் சகா ஒருத்தியும், அவளது தகப்பனாரும் நின்றிருந்தனர்.

கிளின்ரன் அவர்களுடன் சில நிமிடங்கள் பேசிவிட்டு, மோனிக்காவின் பக்கம் திரும்பினார்.

அவரது கண்கள் பளிச்சிட்டன. மனதுக்குள் 'வாவ்' என்றொரு பிரமிப்பு பூத்திருக்க வேண்டும். அதன் பிரதிபலிப்புத்தான் அந்தக் கண்களில் தெரிந்திருக்க வேண்டும்.

மோனிக்காவும் அவரைப் பார்த்தாள். இரு ஜோடிக் கண்களும் ஒன்றையொன்று விழுங்கத் துடித்தன.

மோனிக்கா சுற்றுப்புறத்தை மறந்தாள்.

(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## நிந்தவூர் வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | டபிள்யூ. சர்மிளா நஸ்ரின், 236, கிட்டங்கி றோட், நிந்தவூர்-18. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





சகதி தனக்கே உரிமை யாக்கு-அறு
சக்தியை யெல்லோர்க்குமுணர்வுறுத்தும்
சக்தி தனக்கே உரிமை யாக்கு-அது
(சித்தம்)
சக்திபுகழ் திக்கனைத்தும் நிறுத்தும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நரி செய்த தந்திரம்



ஒரு காட்டில் கரடி ஒன்று வசித்து வந்தது. அந்தக் கரடியின் பெயர் கனகராஜ்.. அதனிடம் ஒரு நரி வேலை செய்து வந்தது. அந்த நரியின் பெயர் நாகராஜ்.

கரடி கனகராஜ் ஒரு நாள் தனது நண்பன் சிறுத்தை சிவராஜை தனது வீட்டில் விருந்துண்ண அழைத்தது. சிறுத்தை சிவராஜ்தான் வழமையாகத் தூக்கித் திரியும் கைப்பையுடன் கரடி கனகராஜ் வீட்டிற்கு வந்தது.

தனது நண்பனுக்காக இரண்டு முயல்களைப் பிடித்து வந்து நரி நாகராஜிடம் கொடுத்து சமையல் செய்யச் சொன்னது கரடி கனகராஜ்.

நரி நாகராஜ் சமையல் செய்யத் தொடங்கியது. கரடி கனகராஜ் ஏதோ ஒரு அவசர வேலை இருந்தபடியால் தனது நண்பனை அங்கே இருக்கும்படி கூறி விட்டு அது வெளியே சென்றது.

கரடி கனகராஜ் வரும் வரையில் அங்கேயே காத்திருந்தது சிறுத்தை சிவராஜ். சமையல் செய்து கொண்டிருந்த நரி நாகராஜ், ருசி பார்ப்பதற்காக இறைச்சியில் ஒரு துண்டைக் கடித்தது. மிகவும் சுவையாக இருந்தது.

இறைச்சி சுவையாக இருந்ததால் அதன் நாவில் எச்சில் ஊறியது. அதன் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் மெதுவாக ஒரு முயலைத் தின்றது. அது மிகவும் சுவையாக இருக்கவே இரண்டாவது முயலையும் தின்று தீர்த்தது நரி நாகராஜ்.

தனது முதலாளி வந்தால் என்னபதில் சொல்வது என்று நினைத்தபோது நரி நாகராஜ் உதறல் எடுத்தது. என்ன செய்வது என்று யோசித்தபோது அதற்கு ஒரு யோசனை உதித்தது.

வெளியில் உட்கார்ந்திருக்கும் சிறுத்தை சிவராஜிடம் தந்திரமாகப் பேச ஆரம்பித்தது நரி நாகராஜ்.

"ஐயா! எனது முதலாளி உங்களைக் கூப்பிட்டதே உங்களுடைய காது இரண்டையும் கடித்து உண்பதற்காகத்தான். அவர் கூரான கத்தி வாங்கத்தான் வெளியே போயிருக்கிறார். உங்களுடைய காதைத் தின்றால் அவருடைய வயிற்றுவலி குணமாகி விடும் என்று மருத்துவர் சொன்னாராம்" என்று சொன்னது நரி நாகராஜ்.

"அடப்பாவி! இதற்காகவா என்னை வரவழைத்தான்? இனி மேல் இந்தப் பக்கமே வரமாட்டேன்" என்றபடி தனது பையைத் தூக்கிக்கொண்டு ஓடியது சிறுத்தை சிவராஜ்.

சிறுத்தை சிவராஜ் தலை தெறிக்க ஓடுவதை, வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த கரடி கனகராஜ் கண்டது. அது நேராக நரி நாகராஜிடம் ஓடிவந்து என்னவென்று விசாரித்தது.

"சமைத்த இரண்டு முயல்களையும் தூக்கிக் கொண்டு ஓடுகிறது;" என்று சொன்னது நரி நாகராஜ். இதைக் கேட்ட கரடி கனகராஜ், சிறுத்தை சிவராஜிற்குப் பின்னால் ஓடியபடி அதனிடம்,

"ஒன்றையாவது தந்துவிட்டுப்போ!" என்று கேட்டது.

கரடி கனகராஜ் தன் காதைத்தான் கேட்கிறது என நினைத்த சிறுத்தை சிவராஜ் தனது காதுகளை மூடியபடி "என்னால் தர முடியாது. எனக்கு இரண்டும் வேண்டும்" என்று கூறி, தப்பினோம், பிழைத்தோம் என ஓடி மறைந்தது.

தனது முதலாளியையும், அவரது நண்பரையும் ஏமாற்றித் தான் தப்பித்துக் கொண்டது நரி நாகராஜ்.

# அதிசயம் - ஆனால் உண்மை!



← இந்தியாவின் பீகார் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் லல்லு பிரசாத் யாதவ். இவர் தனது ஆட்சிக் காலத்தில் ஊழல் செய்ததற்காக அங்குள்ள சிறையில் சிலவாரங்கள் அடைக்கப்பட்டிருந்தார். இதில் வேடிக்கை என்னவென்றால் சில வருடங்களுக்கு முன் இந்தச் சிறைச்சாலையை லல்லுபிரசாத் யாதவ்தான் திறந்து வைத்தார்.



↗ வில்பிரட் ஹார்டி என்ற பழங்குடி மனிதர் தன் உடலில் 96 சதவீத இடங்களில் பச்சை குத்தியுள்ளார். இன்னும் பச்சை குத்தப்படாத இடங்கள் என்றால் கன்னம், நாக்கு, பல்ஈறு மட்டும்தான். இந்த இடங்களிலும் விரைவில் பச்சை குத்தி விடுவாராம்.



← இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தாவில் ஷாங்கிரியா என்ற உணவு விடுதி உள்ளது. இந்த விடுதியில் வேலை செய்யும் 8 சமையல்காரர்கள் குட்டி மசூதி போன்ற ஒரு இனிப்புப் பண்டத்தை 24 நாட்களில் தயாரித்துள்ளனர். இதற்கு 155 கிலோகிராம் பாலும், 150 கிலோகிராம் சொக்லேட்டும் பயன்படுத்தப்பட்டன.

# கற்கோட்டை




இத்தாலி நாட்டின் நுராங்கீஸ் என்ற கிராமத்தை ஒட்டி அமைந்துள்ள தீவின் பெயர் சார்டினியா. இந்தத் தீவுப் பகுதியிலும், கிராமத்திலும் ஆங்காங்கு 7 ஆயிரம் கற்குவியல்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு கற்குவியலும் 18 மீட்டர் உயரமும் 7 மீட்டர் அகலமும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குவியலில் உள்ள ஒவ்வொரு கல்லும் நீள் வட்டமாக மழு மழுவென்று காணப்படுகின்றன.

சார்டினியா மக்கள் ஒரு காலத்தில் சிறந்த போர் வீரர்களாகத் திகழ்ந்துள்ளனர். வாள், கத்தி, ஈட்டி போன்ற இந்தக் கற்களையும் ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளார்கள் என்றும், இந்தக் கற்கோட்டைகள் 11ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

# பெரிய விமான நிலையம்



உலகின் மிகப் பெரிய விமான நிலையம் சவூதி அரேபியாவில் உள்ள மன்னர் காலிட் சர்வதேச விமான நிலையம் ஆகும்.

1983ம் ஆண்டு நவம்பர் 14ம் திகதி இந்த விமான நிலையம் திறக்கப்பட்டது. இந்த விமான நிலையத்தில்தான் உலகின் மிகப்பெரிய கட்டுப்பாட்டு அறையும் உள்ளது. இந்தக் கட்டுப்பாட்டு அறை 243 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

# கிரேக்கர்களின் கணனி




கிரேக்க நாட்டு கடலோரப் பகுதியில் 1900ல் சில மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களது வலையில் ஒரு கனமான பொருள் சிக்கியது. சக்கரம் போன்ற அமைப்புடைய அந்தப் பொருளின் மீது ஏதோ சில எழுத்துக்களும் காணப்பட்டன. இது ஏதோ ஒரு அரிய பொருள் என்று ஆராய்ச்சியாளர்களிடம் ஒப்படைத்தனர்.

சிறிய அளவு தட்டச்சு அளவுள்ள இந்தப் பித்தளைக் கருவியில், பல் சக்கர அமைப்புக் காணப்பட்டது. பல வருட ஆராய்ச்சிக்குப்பின், சூரியன் மற்றும் கிரகங்களின் இயக்கத்தை அறிய கிரேக்கர்கள் இந்தக் கருவியைப் பயன்படுத்தினர் என்று தெரிய வந்தது.

பூமி மற்றும் சூரியனின் சூழற்சிக் கேற்ப, இந்தக் கருவியில் பல் சக்கரத்தைச் சுழற்ற வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் கருவி மூலம் பருவகாலம், சூரிய-சந்திர கிரகணம், புயல், பூகம்ப அறிகுறி போன்றவற்றைக் கிரேக்கர்கள் அறிந்துள்ளனர்.

இன்று கணனி மூலம் நாம் அறிந்து கொள்ளும் பல தகவல்களை, பலநூற்றாண்டுகளுக்கு முன்பே கணனிக்கு ஈடான ஒரு கருவி மூலம் கிரேக்கர்கள் அறிந்து கொண்டது ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

# கண்ணீர்




நம் கண்களில் இருந்து எப்பொழுதும் கண்ணீர் வந்து கொண்டேயிருக்கும். ஒவ்வொரு மேற்பக்க வெளிப்புற மூலைகளிலும் ஒவ்வொரு கண்ணீர்ச்சுரப்பி அமைந்துள்ளது.

நாம் கண்ணிமைக்கும் ஒவ்வொரு முறையும் கண்ணிமை மூடும்போது இச்சுரப்பிகள் அழுத்தப்படுவதால் ஒருவகை நீர் உறிஞ்சி எடுக்கப்படுகிறது. இதைத்தான் கண்ணீர் என்கிறோம்.

கண்களை எப்போதும் உலராமல் வைத்திருப்பதற்கு கண்ணீர் உதவுகின்றது. கண்கள் உலர்ந்தால் கண்களில் எரிச்சல் ஏற்படுவதுடன் பார்வையும் மங்கிவிடும்.

அதுமட்டுமன்றி ஏதாவது அயற்பொருட்கள் கண்களுக்குள் புகுந்து விட்டால் கண்களின் இமைகள் தாமாகவே இயங்கிக் கண்ணீரை வரவழைத்து, அயற்பொருட்களில் இருந்து கண்களைப் பாதுகாக்கின்றது.

# சுவாசம்



நாம் சுவாசிக்கின்ற பிராண வாயுவின் அளவானது நமது உடல் நல ஆரோக்கியத்தைப் பொறுத்துள்ளது. சராசரியாக மனிதர்கள் ஒரு நிமிடத்திற்கு பத்து முதல் பதினான்கு தடவைகள் மூச்சை உள்ளே எடுத்து வெளியே விடுகின்றனர்.

பத்து முதல் பதினான்கு தடவைகள் மூச்சை உள்ளே எடுத்து வெளியே விடும் வாயுவின் அளவு 5 முதல் 6.8 லீட்டர் வரை ஆகும்.

ஆனால் கடினமான உடற்பயிற்சி செய்யும்போது நிமிடத்திற்கு 90 லீட்டர் வரை வாயுவின் அளவு அதிகரிக்கும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **13.11.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **321**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 319

பரிசுக்குரியவர்:
சந்திரமோகன் கிஷாந்,
ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஜெகநாதன் சஜீவன், கடியன்லேன், கெட்டபுலா. | மரியசெல்வம் ஜனார்த்தன், மட்/ இந்துக்கல்லூரி, வாழைச்சேனை. |
| கா. கமல்நாத், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-04. | எஃப். நிஸ்லா நவ்ஷர், கார்ள்ஷு தோட்டம், பொரளை, கொழும்பு-10. |
| எம்.ஈ.என். நிஃப்லா, மின்ஹாத் மகாவித்தியாலய, டிக்வல. | ச. குணதீபன், நு/ நட்போர்ன் த.வி., டயகம. |
| ஃபாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்ஃபோட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | ஏ. கீர்த்தனா, நு/ தமிழ் வித்தியாலயம், தலவாக்கலை. |
| என்.எம். முஸ்தாக் அகமட், மட்/ அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர். | த. நிருஜா, மட்/ தேத்தாத்தீவு ம.வி. தேத்தாத்தீவு. |

# விடுகதைகளும் விடைகளும்

1. தாளைக் கொடுத்தால் தின்னும்;
   தண்ணீர் குடித்தால் மடியும்.
   அது என்ன?
2. வட்ட வட்டப் பாய்;
   வாழ்வு தரும் பாய்;
   ஊரெல்லாம் சுற்றும் பாய்;
   ஒவ்வொருவரும் விரும்பும் பாய்.
   அது என்ன?
3. கண் சிமிட்டும் ஒன்று;
   கடமுடாவென்னும் இன்னொன்று;
   கண்ணீர் வடிக்கும் மற்றொன்று.
   அவை என்ன?
4. காது பெரிது-கேளாது,
   வாய் பெரிது-பேசாது,
   வயிறு பெரிது-உண்ணாது.
   அது என்ன?
5. யானை விரும்பும்;
   சேனை விரும்பும்;
   அடித்தால் வலிக்கும்;
   கடித்தால் இனிக்கும்.
   அது என்ன?
6. பூ காயாகும்;
   காய் கனியாகும்;
   கனி காயாகும்.
   அது என்ன?
7. கல்லாலும் மண்ணாலும் கட்டாத வீடு;
   கதவு இல்லாத வீடு;
   காற்றடித்தால் ஆடும் வீடு.
   அது என்ன?
8. ஐவருக்கும் ஒரே வீடு-ஆனால்
   அவர்கள் பாண்டவர்கள் அல்ல.
   அவர்கள் யார்?
9. தண்ணீருக்குள் இடம் பிடிப்பான்;
   தடுக்கி விழவும் வைப்பான்.
   அவன் யார்?
10. தண்ணீர் இல்லாமல் வளரும்;
    தரை இல்லாமல் படரும்.
    அது என்ன?

## விடைகள்

1. [illegible] 2. [illegible]
3. [illegible] 4. [illegible]
5. [illegible] 6. [illegible]
7. [illegible] 8. [illegible]
9. [illegible] 10. [illegible]

ஜி. மலர்விழி.

## திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 03



பொலிஸ் கமிஷனர் லட்சுமி பதி, ஏர்போர்ட் ஆபீஸர் ருத்ராவை தயக்க மாய் ஒரு பார்வை பார்த்துக் கொண்டு கேட்டார்,

"இந்த மெதனால் மயக்கப் பௌடர் சம்பந்தமாய் உங்களிடம் எனக்குள்ள ஒரு சந்தேகத்தைக் கேட்கலாமா?"

"ப்ளீஸ்..."

"இந்த மெதனால் மயக்க மருந்து பௌடரை ஏர்போர்ட்டில் தயாராக வைத்திருக்கிறீர்களே... இப்படி ஒரு சம்பவம் நடக்கப்போகிறது என்று உங்களுக்கு முன்கூட்டியே தெரியுமா என்ன?"

ருத்ரா புன்னகைத்தார். "உங்கள் கேள்வி நியாயமானதுதான். இப்படியொரு சம்பவம் நடக்கப் போகிற விஷயம் எனக்குத் தெரியாததுதான். ஆனால் சமீப காலமாக விமான நிலையத்தில் பல்வேறு வகையான குற்றங்கள் நடந்து வருகின்றன. அதில் நிறைய குற்றங்கள், கள்ளக்கடத்தல் சம்பந்தப்பட்டவை.

மற்றக் குற்றங்கள் தீவிரவாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. சில சமயங்களில் விமானங்கள் புறப்பட்டுப் போக, கடைசி சில நிமிஷங்கள் இருக்கும்போது, உள்நாட்டுப் பொலிஸிடமிருந்தோ, இண்டர்போல் பொலிஸிடமிருந்தோ, எங்களுக்கு இரகசியத் தகவல் வரும்.

'விமானத்தில் சில தீவிரவாதிகள் பயணம் செய்கிறார்கள். அவர்களை மற்றவர்களுக்குத் தெரியாமல் கைது செய்ய வேண்டும். உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்' என்று எங்களுக்குத் தகவல் கிடைத்ததும், நாங்கள் ட்ரிப்ஷீட்டை செக் செய்து தீவிரவாதிகள் யார் யார் என்பதைக் கண்டுபிடித்து விடுவோம்.

அப்படிக் கண்டு பிடிக்கப்பட்ட தீவிரவாதிகளுக்கு அவர்கள் விமானத்தில் பயணம் செய்யும்போதே, இந்த மெதனால் மயக்க மருந்தை அவர்கள் சாப்பிடக்கேட்கும் உணவில் கலந்து கொடுத்து மயக்கமடைய வைத்து, அடுத்த விமான நிலையத்தில் பொலிஸாரிடம் ஒப்படைத்து விடுவோம்.

இப்படி பொலிஸ்துறைக்கு ஒரு மறைமுக சேவை செய்வதற்காகத்தான் சமீப காலமாய் உலகில் உள்ள எல்லா விமான நிலையங்களும் மெதனால் மயக்க மருந்தை தயார் நிலையில் வைத்துள்ளன, இந்த விமான நிலையத்தில் இதைப் பயன்படுத்துவது இதுவே முதல் தடவை..."

கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா பரபரத்தார்." எது எப்படியோ... நமது கிரிக்கெட் வீரர்களை இப்போது அந்த மனித வெடிகுண்டு பெண்ணிடமிருந்து காப்பாற்றியாக வேண்டும். உடனடியாய் மெதனாலைக் குளிர்பானத்தில் கலந்து, அந்தப் பெண் நிருபர்களுக்குக் குடிக்கக் கொடுங்கள்..."

ருத்ரா குளிர்பான பாட்டில்களை எடுத்து வைத்துக் கொண்டே சொன்னார். "இதோ..! வேலையை ஆரம்பித்தாயிற்று."

☹✈🕘

பிரஸ்மீட்டில்-சில விநாடிகளுக்கு செதுக்கப்பட்ட மாதிரியான நிசப்தம் நிலவ-அந்த ஒடிசலான பெண் நிருபர் மறுபடியும் தயக்கக்குரலில் கேட்டாள்,

"ஒரு பர்ஸனல் கேள்வி...?"

நரேஷ் புன்னகைத்தான்.

"தாராளமாய்க் கேட்கலாம்.. நான் ஒரு திறந்த புத்தகம். என்னிடம் எந்த ஒளிவு மறைவும் இல்லை..."

"கேள்வியைக் கேட்ட பின்னால் என்னை நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது.."

"நான் ஒரு பப்ளிக் ஃபிகர். எனக்குக் கோபம் வரக்கூடாது. உங்கள் கேள்வி எப்படிப்பட்டதாக இருந்தாலும் பரவாயில்லை. கேட்கலாம்."

அந்தப் பெண் நிருபர் தயங்கி விட்டுக் கேட்டாள். "நீங்கள் உங்கள் மனைவிக்கு உண்மையான கணவராக நடந்து கொள்வது இல்லையாமே. உண்மையா?"

"ஸாரி...! உங்கள் கேள்வி எனக்குப் புரியவில்லை!"

"நீங்கள் உங்கள் மனைவிக்குத் துரோகம் செய்வதாகத் தகவல்..."

"அதாவது பிற பெண்களோடு தொடர்பு?"

"எஸ்..."

"ஹைலி இடியாட்டிக்....! இப்படியொரு பொய்யான தகவலை உங்களுக்கு யார் கொடுத்தது...?"

"ஒரு பத்திரிகையில் எழுதியிருந்தாங்க..."

"கிசு கிசுக்களுக்கெல்லாம் பதில் சொல்ல நான் தயாராக இல்லை...!"

"இது கிசுகிசு கிடையாது மிஸ்டர் நரேஷ். உங்களுக்கும் நடிகை வீணாவுக்கும் தொடர்பு இருக்கிறதா. அந்தப் பத்திரிகை நேரிடையாகவே சொல்லியிருக்கிறது. அந்தப் பத்திரிகை ஒரு மஞ்சள் பத்திரிகை கிடையாது. உண்மைகளை மட்டுமே துணிந்து எழுதக் கூடிய பத்திரிகை."

நரேஷ் கோபப்படாமல் புன்னகைத்தான். "எனக்கும் நடிகை வீணாவுக்கும் இடையில் இருப்பது தொடர்பு கிடையாது. நல்ல ஃப்ரெண்ட்ஷிப் மட்டுமே!"

"ஃப்ரெண்ட்ஷிப்ன்னா...?"

"நான் அவங்க நடிப்புக்கு ஃபேன்! அவங்க என் விளையாட்டுக்கு ஃபேன்.. தட்ஸ் ஆல்..."

"உங்க மனைவிக்கு இந்த ஃப்ரெண்ட்ஷிப் பற்றித் தெரியுமா?"

"தெரியும்..."

"உங்க ஃப்ரெண்ஷிப்போட எல்லை எதுவரைக்கும் என்று தெரிந்து கொள்ளலாமா?"

நரேஷ் இப்போது லேசாய் முகம் சிவந்தான்.

"ஸாரி... உங்களுடைய விஷமத்தனமான கேள்விகளுக்கு என்னால பதில் சொல்ல முடியாது. டாபிக்கை மாற்றி வேறு ஏதாவது கேள்வி கேளுங்கள்..."

அந்தப் பெண் நிருபர் சிரித்தாள்.

"உங்களுக்குக் கோபமே வராது என்று சொன்னீர்கள் வந்துவிட்டது. ஒருவருக்குக் கோபம் வந்தாலே அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா?"

"என்ன அர்த்தம்?"

"உண்மையைச் சொன்னால் அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தம்...."

"நீங்கள் சொன்ன வீணா விவகாரத்தில் எந்த உண்மையும் கிடையாது."

"அதாவது உங்களுக்கும் வீணாவுக்கும் தப்பான உறவு கிடையாது என்று சொல்ல வருகிறீர்கள் இல்லையா?"

"ஆமாம்..."

"இதுதான் உங்கள் ஃப்ரெண்ட்ஷிப் லட்சணமா?" அந்தப் பெண் நிருபர் கேட்டுக் கொண்டே, தன் தோளில்மாட்டியிருந்த வானிடி பேக்கின் ஜிப்பைப் பிரித்து, உள்ளே பத்திரப்படுத்தி வைத்திருந்த ஒரு போஸ்ட் கார்ட் சைஸ் ஃபோட்டோவை எடுத்து நரேஷின் முகத்துக்கு நேராகப் பிடித்தாள்.

"இந்த ஃபோட்டோவுக்கு உங்கள் பதில் என்ன?"

எல்லோரும் பார்வைகளை ஃபோட்டோவுக்குக் கொண்டு போனார்கள்.

நரேஷின் இறுக்கமான பிடிக்குள், வீணா வசமாய் சிக்கி கண்மூடி சொக்கியிருந்தாள். பின்னணியில் கடலும் தென்னந்தோப்புகளும் தெரிந்தன.

"இதற்கு உங்கள் பதில் என்ன?"

நரேஷ் அந்த ஃபோட்டோவை வாங்கி இமைக்காமல் சில விநாடி நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அந்தப் பெண் நிருபரை ஏறிட்டான்.

"உங்கள் பெயர் என்ன?"

"பிரதிமா..."

"கல்யாணமாகி விட்டதா?"

"இல்லை..."

"மிஸ் பிரதிமா... நான் இப்படிச் சொல்வதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இப்போது உள்ள கம்பியூட்டர் ஃபோட்டோ டெக்னாலஜியை உபயோகப்படுத்தி இதே மாதிரியான கோலத்தில் நீங்களும் நானும் இருப்பது போல் ஃபோட்டோ எடுக்க முடியும். எடுத்துக் காட்டட்டுமா?"

மற்ற நிருபர்கள் எல்லோரும் சிரிக்க பிரதிமா முகம் சிவந்து போய்க் கேட்டாள்.

"அப்படியென்றால் இந்த ஃபோட்டோ பொய்யா?"

"பொய்தான்! நான் கிரிக்கெட்டில் பேரும் புகழும் பெற்று சந்தோஷமாக இருப்பது நிறையப்பேருக்குப் பிடிக்கவில்லை. என் குடும்ப வாழ்க்கையின் மகிழ்ச்சியைக் குலைத்து விட்டால், என்னால் கிரிக்கெட்டில் கவனம் செலுத்த முடியாது என்று நினைத்து என் எதிரிகள் செய்கிற வேலை இது.

இந்த ஃபோட்டோக்களைக் காட்டிலும் இன்னும் மோசமான ஃபோட்டோக்களை என் மனைவிக்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவள் என் பேரில் இருந்த நம்பிக்கையால் அந்த ஃபோட்டோக்களை என் முன்னாலேயே நெருப்புக்குப் போட்டாள். நான் விளையாட்டையும் ஒழுக்கத்தையும் இரண்டு கண்களாக மதிப்பவன். இனிமேலாவது பத்திரிகைச் செய்திகளை உண்மையென்று நம்பி இது போன்று சீப்பான கேள்விகளை என்னிடம் கேட்காதீர்கள்."

"ஸாரி மிஸ்டர் நரேஷ்! நான் கேட்ட கேள்விகள் உங்கள் மனதுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்."

நரேஷ் சிரித்தான்.

"மிஸ் பிரதிமா... நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. ஒரு பத்திரிகை நிருபர் பரபரப்பான செய்திகளுக்கு ஆர்வம் காட்டுவது இயற்கையே! எனி அதர் குவெஸ்சன்ஸ்...?"

பிரதிமாவுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த உயரமான அந்தப் பெண்நிருபர் இப்போது எழுந்தாள்.

✋💣😐

ரெஃப்ரெஷ்மெண்ட் அறை.

மெதனால் மயக்க கலக்கப்பட்ட குளிர்பான பாட்டில்கள் இரண்டு பெட்டிகளில் தயாராக இருக்க, ஏர்போர்ட் சிப்பந்திகளின் யூனிஃபார்ம்களில் இருந்த பொலிஸ்துறை நபர்கள் இரண்டு பேரிடம் கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா சொல்லிக் கொண்டிருந்தார்.

"நான் சொல்வதை நன்றாகக் கவனியுங்கள். குளிர்பானத்தை முதலில் பெண் நிருபர்களுக்கும்பின் மற்றவர்களுக்கும் விநியோகிக்க வேண்டும். கிரிக்கெட் வீரர்களுக்கு இதைத் தரக்கூடாது. அவர்களுக்காக மயக்க மருந்து கலக்கப்படாத வேறு குளிர்பான பாட்டில்கள் தயாராக இருக்கின்றன..."

ஏர்போர்ட் ஆபீஸர் ருத்ரா இடையில் குறுக்கிட்டுச் சொன்னார்.

"குளிர்பான பாட்டில்களை விநியோகிக்கும்போது இன்னொரு விஷயத்தை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். யாரையும் சந்தேகக் கண்ணோடு பார்த்துக் கொண்டு விநியோகிக்கக்கூடாது. உங்களுடைய எல்லா நடவடிக்கைகளும் இயல்பாய் இருக்க வேண்டும்!"

"எஸ்.ஸார்..."

"பெட்டிகளை எடுத்துக் கொண்டு கிளம்புங்கள்!"

இருவரும் கிளம்ப, ஆச்சார்யா முன்னதாகப் போய் வி.ஐ.பி. அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார். ப்ரஸ்மீட் நடந்து கொண்டிருக்க சுழற்பந்து வீச்சாளர் பங்கஜ் இப்போது ஜோவியலாகச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

"எனக்கு சினிமாவில் நடிக்க வாய்ப்பு வந்தது. உண்மைதான். ஆனால் ஹீரோவாக அல்ல."

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

"பின்னே...?"

"காமெடியனாக...!"

ப்ரஸ்மீட்டில் சிரிப்புப் பற்றிக் கொள்ள, ஆச்சார்யா இறுகிப்போன முகத்தோடு விதவிதமாய்ச் சிரித்துக் கொண்டிருந்த அந்தப் பெண்களையே இமைக்காமல் பார்த்தார்.

'இந்தப் பதினொரு பெண்களில் யார் அந்த மனித வெடிகுண்டு'

"ஸார் கூல்ட்ரிங்ஸ் கொடுத்திடலாமா?"

"ம்..."


அந்த இரண்டு பேரும் குளிர்பானப் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு நிருபர்களை நோக்கிப் போனார்கள். தடக் தடக் கென்று நொண்டும் இருதயத்தோடு ஆச்சார்யா பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்.

**(தொடர்ந்து வரும்)**

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# தர்ம யுத்தம் 13



படப்பிடிப்பிற்கான வேலையைத் தொடங்குமாறு சொல்லிவிட்டு, நான் சிகரெட் பிடித்தபடி, ஓரமாக நடந்துகொண்டிருந்தேன்.

சற்று நேரத்தில் வேகமாக என் அருகில் வந்த ரஜினி, "சார், உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும்" என்றார். "என்ன?" என்று சற்று யோசித்தபடி அவரைப் பார்த்தேன். "இன்னைக்கு ஃபர்ஸ்ட் டே. ஷூட்டிங் முடிந்தபிறகு ஒரு பார்ட்டி வைச்சிக்கலாமா?" என்றார். நான் பதில் சொல்வதற்குள், "வைச்சிக்கலாம் சார்" என்று அவரே முற்றுப்புள்ளி வைத்தார்.

அடுத்து, "பாலகிருஷ்ணன் சார் பார்ட்டியில கலந்துக்குவாரா?" என்று கேட்டார் ரஜினி. "எனக்குத் தெரியாது" என்றேன். "நீங்களே கேளுங்க சார்" என்றார்.


நான் பாலகிருஷ்ணனிடம் சென்றேன். "இன்னைக்கு ஒரு பார்ட்டி வச்சிக்கலாம்'னு ரஜினி சொல்றாரு. நீங்களும் வரணும்னு விரும்பறாரு" என்றேன்.

அவர் தயக்கத்துடன் என்னைப் பார்த்தார். பிறகு "நீங்க வர்றீங்களா?" என்றார். "மொத நாள் கூப்பிடறாரு. போகலாம்னு நெனைக்கிறேன்" என்றதும், "நீங்கள் வர்றதாயிருந்தா நானும் கலந்துக்குறேன்" என்றார்.

நான் ரஜினியிடம் சென்று விஷயத்தைச் சொன்னதும், அவர் சந்தோஷமாகிவிட்டார். பக்கத்திலிருந்த தயாரிப்பாளர் ஜாக்பாட் சீனிவாசனை அழைத்து, "சார்! ஷூட்டிங் முடிஞ்சவுடனே நான், டைரக்டர், கேமிராமேன் எல்லாரும் ஒரு பார்ட்டி வைச்சிக்கலாம்னு இருக்கோம். பார்ட்டி முடிஞ்சதும் இவங்களையெல்லாம் வீட்ல கொண்டு போயி விட்றதுக்கு ஒரு வண்டி வேணும்" என்றார். "அதுக்கென்ன, நம்மவண்டி இருக்கு சார். எடுத்துக்குங்க" என்றார்.

## தனிப்பாதை

படப்பிடிப்பு எட்டு மணிக்கெல்லாம் முடிந்தது. தயாரிப்பாளரின் சொந்த வண்டியான அம்பாசிடர் 3255 என்ற எண்ணுள்ள காரில் நான், ரஜினி, ஒளிப்பதிவாளர் பாலகிருஷ்ணன், கதாசிரியர் பீட்டர் செல்வகுமார், எனது



உதவியாளர் ஜாவுதீன் ஆகியோர் ரஜினியின் வீட்டிற்குப் புறப்படத் தயாரானோம்.

வண்டி புறப்படுகிற நேரத்தில் ஜாக்பாட் சீனிவாசன் வந்து, டிரைவரிடம் கொஞ்சம் பணம் கொடுத்து, "இந்தா இத வச்சிக்கோ, என்ன செலவானாலும் அத நீதான் பாத்துக்கணும்" என்று மெதுவான குரலில் சொன்னார். டிரைவரும் வாங்கிக் கொண்டார்.

பின் சீட்டில் உட்கார்ந்தபடி இதைப் பார்த்துக் கொண்டிருந்த ரஜினி, தயாரிப்பாளரிடம் "என்ன சார், எதுக்கு அவர்கிட்ட பணம் கொடுக்கறீங்க?" என்றார். "ஒண்ணுமில்ல, சும்மா செலவுக்குத்தான்" என்றார் ஜாக்பாட்.

"மொதல்ல, அந்தப் பணத்தை திரும்ப வாங்குங்க. எங்கிட்ட பணமெல்லாம் இருக்கு சார். உங்க செலவில நாங்க பார்ட்டி கொண்டாட விரும்பல்ல. நீங்க வண்டி மாத்திரம் கொடுத்தாப் போதும்" என்று வற்புறுத்தி டிரைவரிடமிருந்த பணத்தை அவரே வாங்கி தயாரிப்பாளரிடம் கொடுத்துவிட்டு, "ம், போகலாம்" என்றார். வண்டி புறப்பட்டது.

எனக்கு ரஜினியிடம் ஒரு மரியாதை பிறந்தது. இந்த மாதிரி நேரங்களில் ஒருசிலர் மொத்தச் செலவையும் தயாரிப்பாளர் தலையில் கட்டிவிடுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ரஜினியின் நடவடிக்கை சற்று வித்தியாசமாக இருந்தது. தனக்கென்று ஒரு தனிப்பாதையை வகுத்துக் கொண்டவர் என்பது அப்போதே எனக்குப் புலப்பட்டது.

அனைவரும் அன்று ராயப்பேட்டையில் ரஜினிகாந்த் குடியிருந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். அங்கு பார்ட்டிக்குத் தேவையான முக்கிய பொருட்களை பையில் எடுத்து வைத்துக் கொண்டு மறுபடியும் காரில் புறப்பட்டோம். ஆழ்வார்பேட்டை ஜங்ஷனில் வண்டியை நிறுத்தி, பற்றாக்குறை ஏற்பட்டு விடக்கூடாது என்று முன் ஜாக்கிரதையின் காரணமாக இன்னும் கொஞ்சம் நொறுக்குத் தீனிகள் வாங்கிக் கொண்டோம். இப்போது பார்ட்டிக்கு எல்லாம் ரெடி.

அப்போது புதிய பிரச்சனை ஒன்று உருவானது. புதிய பிரச்சனை மாத்திரமல்ல, அதுதான் தலையாய பிரச்சினையும் கூட. அது என்னவென்றால், பார்ட்டியை எங்கே நடத்துவது? பார்ட்டி நடத்த இடத்தை முடிவு செய்யாமலேயே, பார்ட்டிக்கான அத்தனையும் தயார் வண்டியில்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஐடியா கொடுத்தார்கள். எதுவுமே ஓ.கே. ஆகவில்லை. காரணம், அப்போது நடந்து கொண்டிருந்த எம்.ஜி.ஆர். ஆட்சியில் மதுவிலக்குச் சட்டம் தீவிரமான முறையில் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. இரவு நேரங்களில் காரில் போவோர், வருவோரைக்கூட நிறுத்தி, வாயை ஊதச் சொல்லிக் கொண்டிருந்த நேரம் அது.

## வழிதெரியாது

ஒருவர் சொன்னார், ஒரு பெரிய ஹோட்டலின் பெயரைச் சொல்லி, அங்கு ரூம் எடுத்துவிடலாம் என்று. அதற்கு ஒருவர் பதறிப் போய், "ஐயையோ, நேத்து கூட அங்க ரெய்டு நடந்திருக்கு. எனக்குத் தெரிஞ்ச ஃபிரண்டே அங்கு மாட்டிக்கிட்டாரு. அந்த ஐடியா வேண்டாம்" என்றார்.

இன்னொருவர், "பேசாம ஊரைவிட்டுத் தாண்டி, ஹைவேசில எங்கேயாவது ஒரு ஓரத்துல வண்டியை நிறுத்தி, பார்ட்டியை முடிச்சிட்டு வந்துரலாம்" என்றார். அந்த யோசனையும் ஏற்கப்படவில்லை. ஹைவே பாட்ரோல் (Highway Patrol) என்ற பெயரில் ஜீப் ஒன்று அடிக்கடி போய் வந்து கொண்டிருக்கும் என்றார்கள்.

இப்படிப் பலவிதமான ஆலோசனைகளுக்குப் பிறகு எனக்கு ஒரு இடம் ஞாபகம் வந்தது. நான் இயக்கிக் கொண்டிருந்த இன்னொரு படத்தின் ஆபீஸ்,கே.கே. நகரில் இருந்தது. அப்போது கே.கே. நகர் இந்தளவுக்கு டெவலைப் ஆகவில்லை. அதுவும் அந்தக் குறிப்பிட்ட அலுவலகம் ஒரு குறுகிய சந்தில் இருந்ததால், ஆபத்து மிகக் குறைவாக இருக்கும் என்று முடிவு செய்தோம். கே.கே. நகரில் ஆபீஸ் இருப்பது எனக்கு ஞாபகம் வந்ததே தவிர, அதற்கு போகும் வழி எனக்கு ஞாபகம் இல்லை.

## கண்டுபிடிப்பேன்

என் உதவியாளர் ஜாவுதீனிடம் கேட்டேன், "உனக்கு அந்த ஆபீஸ் தெரியுமா?" என்று. "தெரியும்" என்றார். உடனே அங்கே போய்விடுவது என்று முடிவு செய்து கார் அங்கே புறப்பட்டது. எப்போதுமே இரவு, பகலாக ஒரு ஆபீஸ் பாய் அங்கு தங்கியிருப்பான்.


பாதி வழியில் வண்டி போய்க் கொண்டிருந்தபோது என் உதவியாளர் ஜாவுதீன் என்னிடம், "ஏண்ணா, அந்த ஆபீஸ் கே.கே.நகருல இருக்கா, சைதாப்பேட்டையில இருக்கா?" என்றார்.

அனைவருக்கும் தூக்கி வாரிப்போட்டது. அவர், 'எனக்கு அட்ரஸ் தெரியும்' என்றதனால்தான் அவரை நம்பி நாங்கள் பின்தொடர்ந்து கொண்டிருந்தோம்.

"என்னப்பா, நீ இடம் தெரியும்னு சொன்னதாலதான் புறப்பட்டோம். பாதி வழியில வந்து சைதாப்பேட்டையா, கே.கே. நகரான்னு கேக்குறியே?" என்றதும், "இல்லேன்னா, அந்த இடத்துக்குப் போயிட்டேன்னா நான் ஒரு அடையாளம் வைச்சிருக்கேன். கண்டுபிடிச்சிருவேன்" என்றார்.

**(அனுபவங்கள் தொடரும்)**

தர்மயுத்தம் பிறந்த கதை



# கண்ணீர் அஞ்சலி

## தர்மராஜா அஜந்தகுமார் (ராஜன்)

சிறு குழந்தை போல முகம், எப்போதும் சிரித்திருக்கும்!
சில காலம் மட்டும் எம்மோடு சேர்ந்திருந் தாய்!
அதிகமாகப் பேசி அலட்டும் குணம் அறவே இல்லை.
அளவோடு அளந்து வார்த்தைகளை உதிர்ப்பாய்.
சினம் என்ற வார்த்தைக்கு பொருளேதும் அறியாத
பண் புள்ளம் கொண்டவனை சீறிவந்த குண்டுகள்
சிதையில் கிடத்தியது.

ஆசிரியருக்கு அருகே இருந்தே ஆருயிரை நீவிட்டாய்! பேச முடியாமல் பெருகுதையா கண்ணீர்! நேசமுள்ள மனையாளையும் பாசமிகு குழந்தைகளையும் அன்புத் தாயையும் பரிதவிக்கவிட்டு உன் மைத்துனருக்குத் துணையாகப் போய் விட்டாயே!

வேதனை தாங்காமல் விம்முகிறோம்.
உன் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்!

-தினமுரசு ஊழியர்கள்-

# எங்கள் ரமேஸ் தோழருக்கு வீரமரியாதை

யார் அந்தத் துரோகிகள்?
யார் அந்தத் துரோகிகள்?
கருத்துக்களை கருத்துக்களால்
வெல்லத்துணிந்திடாமல்
கருவி கொண்டு கொல்ல நினைத்த
துரோகிகள்!
யார் அந்தத் துரோகிகள்.....?

இருள் விழுங்கிய
எங்கள் ஈழ தேசத்தில்
வெளிச்சமாய் விரிந்த
நம் சூரியத் தோழனை
சாய்த்துவிட்ட துரோகிகள்!
யார் அந்தத் துரோகிகள்.....?

தேசத்தின் இடர் தீர்த்திட
தொடரும் பயணத்தில்
தோழர் குழாமோடு
தோள் கொடுத்து வந்தவனை
துரைத்தனமாடிய துரோகிகள்!
யார் அந்தத் துரோகிகள்.....?


மலை தகர்ந்தாலும்
மனம் தளராத
மலையினும் வலிய நம்
தோழரின் தோள்களுக்கு
உரம் சேர்த்த
உன்னத தோழனின்
உயிர் குடித்த துரோகிகள்!
யார் அந்தத் துரோகிகள்.....?

பாவம் அவர்கள்!
சிறு பொறி கண்டு அஞ்சும்
கோழைகள்!

குலுக்கப்படவேண்டிய
உன் கரங்களின்
வலிமை கண்டஞ்சி
அதை அறுத்தெறிந்தனரோ
கோழைகள்!

ஓ தோழனே....!
எழும்போது
விருட்சமாய் எழுந்து

பிறப்பு
..
16
❀
09
❀
1963



அழிப்பு
..
02
❀
11
❀
1999

## நடராஜா அற்புதராஜா (ரமேஷ்)

விழும்போது
விதையாய் விழுந்தவனே!
உனக்கேது மரணம்....?

"மக்களின் உதடுகள்
மறுபடி திறக்க" என்று

தேசத்தின் மௌனங்களை
மொழி பெயர்த்துச் சொன்னவனே....!

ஊரெல்லாம் நுழைந்து
மக்களின் உணர்வுகளை
உளவறிந்து சொன்னவனே!
உனக்கேது மரணம்....?

ஒவ்வொரு தடவையும்
உன் எழுது கோல்
தலை குனியும் போதெல்லாம்
எம் தேசம்
மெல்லெனத் தலை நிமிருமே
உனக்கேது மரணம்....?

எத்தனை வீரியம்
உன் எழுத்துக்களுக்கு
எத்தனை விசாலம்
உன் சிந்தனைக்கு
அரசியலை
துப்பாக்கிக் குழாய்களுக்கும்
கற்றுக் கொடுத்தவன் நீ....

மக்களிடம் கற்றவைகளை
மக்களிடம் சொன்னவனே...!
மக்களின் கட்சியாய்
எங்களின் கட்சியை
ஆக்கிய தோழருக்கு
உன்து கரமே வலக்கரம்.

உன் குருதி குடித்த துரோகிகள்!
யார் அந்தத் துரோகிகள்.....?

ஓ தோழனே....!
உன் கம்பீரக் குரல் கேட்ட
எம் செவிகளெல்லாம்
சப்தமிழந்து விட்டன.
உன்னிடம் அரசியல் கற்ற
கிராமங்கள் எல்லாம்
எழுகின்றன தோழனே...!

சென்று வா தோழனே!
எம் தாய்க்கும் தந்தைக்கும் பின்பு
பயிற்சிப்பாசறைகளில்
எமக்கெல்லாம் நீ வைத்த
இரண்டாம் பெயர்
எப்போதும் உன்னை
ஞாபகப்படுத்தும்.

உன் கண்டிப்பான
உத்தரவுகளும்
கட்டுக்கோப்பும்
எப்போதும் உன்னை
ஞாபகப்படுத்தும்....

விருட்சமாய் வளர்ந்து
விழுதுகள் எறிந்து நிற்கும்
எம் கட்சியின் அமைப்புப் பலம்
உன்னையும் ஞாபகப்படுத்தும்....

சென்று வா தோழனே!
சென்று வா தோழனே!

ஒன்று மட்டும் உறுதி தோழனே!
மரணங்கள் ஒரு போதும்
எம்மை அச்சப்படுத்திவிட முடியாது.

எம் இலட்சிய வெறியின் முன்
குறியற்ற கொலை வெறி
தோற்றுத்தான் போகும்.

விழ.... விழ.... எழுந்து
குருதி துடைத்து
நடந்து வரும்
தோழரின் தலைமையில்
தொடர்ந்து நாம் செல்வோம்
விடியல் ஒன்று கிட்டும் வரை.....

இதுவே உனக்கு
நாம் செலுத்தும்
வீர மரியாதை!
வீர மரியாதை!

கொலை வெறியர்களுக்கு
வரலாறு
தண்டனை வழங்கும்.
இது நிசம்!

(ஈ.பி.டி.பி.)

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி

(Advt.) விளம்பரம்

# ஒரு போராட்டமும் சில சிதைவுகளும்



## இனியவள்

வடக்கில் பிறந்திருந்தாலாவது உரிமைக்கு குரலெழுப்பி, போராடி, உயிர்விட்டு வாழ்வை அர்த்தப்படுத்தியிருக்கலாம். ஆனால் பிறந்ததோ இந்த மலையகத்தில்- நடுத்தர வர்க்கத்து குடும்பத்தில். இலக்கின்றிய வாழ்க்கை. காதல் வயப்பட்ட பின் கொஞ்சமேனும் வாழ்க்கை இனித்ததாய் கற்பிதம் செய்து கொண்டாள் இனியா. கல்யாணமும் கட்டிக் கொண்டாள். எல்லா சராசரிப் பெண்களையும் போல் ஏராளமான கனவுகளையும் கற்பனைகளையும் சுமந்தவாறு, வாழ்க்கையே போர் போன்றதென பின்னர் புரிந்தபோது...

அந்தக் கனவுகள் எல்லாம் வீணாகப் போயிற்று. காதலிக்கும்போது சுற்றிச் சுற்றி வந்தவன் கல்யாணமானதும்-கணவனானதும் முற்றிலும் மாறிப் போனான். சின்னச் சின்ன ஆசைகள் கூட சின்னாப்பின்னமாக்கி எறியப்படுவதை எத்தனை நாள்தான் பொறுத்திருப்பாள்? சிறிய பிளவுகள் பின்னர் பெரிய விரிசலை ஏற்படுத்தின. ஆரம்பத்தில் கண்ணீர் விட்டு அழுவாள். 'இதுதான் காதலா? ஏனிப்படி ஏமாந்து போனோம்' எனத் துடிப்பாள்.

தன் வேதனையும் அழுகையும் அவனால் இரசிக்கப்படுகின்றன என்பதை உணர்ந்த கணம் அவள் அழுகையைக் கைவிட்டாள். காதலனாய் இருந்தபோது குடிக்க மாட்டேன் என சத்தியம் செய்தவன் இப்போது ஒரு நண்பனின் கல்யாணத்தின் பின் மதுவின் வாசனையோடு வீட்டில் நுழைந்தான். 'என் சுவாசமே நீயானதால், பெண்ணே, புகைப்பதைக்கூட நிறுத்திவிட்டேன்' என கவிதை பொழிந்தவன் வளையம் வளையமாய் புகைவிட்டு அவளது புன்னகையை கண்ணீராக்கினான். இனியாவைத் தவிர மற்றெல்லாரும் அவனுக்குப் பிரதானமாகிப் போனார்கள். முக்கியமாக நண்பர்கள். இந்த வீட்டில் அவனுக்கென இவள் காத்திருப்பது அவனுக்கு நினைவே வருவதில்லை. கும்மாளமும் குதூகலமும் எந்நேரமும் நண்பர்கள் கூடவும் பொழுதே போனது. இனியா தனித்துப் போனாள். 'எனக்கென ஒரு குழந்தை வேண்டும்' இனியா ஆசைப் பட்டாள். நீண்ட பரிசோதனைகளின் பின் இயற்கை கூட இனியாவிற்கு சதி செய்துவிட்டது. குழந்தைப்பேறு கிட்டுவது சாத்தியக் குறைவென மருத்துவர் கைவிரித்துவிட்டார். கருப்பையில் உருவாகும் முட்டைகள் பூரணத்துவம் குறைவு- அது இதென மருத்துவர் விளக்கமளிக்க உலகமே இடிந்து வீழ்ந்தாற் போல் உட்கார்ந்திருந்தாள் இனியா. வாழ்க்கை கசந்துபோனது முற்றிலுமாக.

இனியென்ன? விவாகரத்து வேண்டும். இனி கணவனிடம் அதைத்தான் கேட்கப் போகிறாள் இந்த இனியா.

தாம்பத்தியத்தில் ஒரு பெண்ணுக்கு வேண்டியதெல்லாம் தன் கணவனது அருகாமை, அன்பு, ஆதரவு. இவையல்லாமல் வேறு என்ன இருந்தும் அவள் வாழ்வும், மனதும் நிரம்புவதில்லை. இனியா தயங்காமற் கேட்டாள், "விவாகரத்து!" "ஏன், உனக்கு இங்கு என்ன குறை?" திருப்பிக் கேட்டான் அவன். அவளுக்குள் அழுகை வெடித்துக் கிளம்பியது. அழக்கூடாது. அழவே கூடாது. தீர்மானித்து சிரித்தாள். அவனைக் காயப்படுத்த வேண்டுமென்ற வெறி கனன்றது உள்ளுக்குள்.

"குழந்தைப் பேறு கிட்டாதது ஒரு குறை; எனது குறையே. நீங்களே வழக்கை 'பைல்' பண்ணுங்கள். அப்போது உங்கள் கௌரவம் பாதிக்கப்படாது!" என்றாள். புன்னகைத்தவாறு. "இன்னொரு, குறையில்லாத பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள்!" என்றாள் மீண்டும் குரலில் இலேசான கேலி எட்டிப் பார்த்தது இப்போது.

"அதை நீ சொல்லத் தேவையில்லை!" என்றான் முகத்திலடித்தாற்போல் அவன். "ஓ! அதற்கும் ஏற்கனவே தயாரா?" இனியா திருப்பிக் கேட்டாள். "நான் ஓர் ஆண். எதுவும் செய்வேண்டி." அவனும் எகிறினான். "ஆணென்றால் மனிதனில்லையா? எல்லாமே செய்யலாமா?" பதிலால் அடித்தாள் இனியா. இத்தனை நாள் அவனது புறக்கணிப்புக்கான காரணம் இலேசாக அவளுக்குப் புரிவது போன்றிருந்தது. அவளே தொடங்கட்டும் என காத்திருந்தானா? யோசித்தாள்.

"மனிதனில்லை என்றால்... நான் மிருகமா? என்னை மிருகமென்றா சொல்கிறாய்? என்ன திமிரடி உனக்கு?" ஓங்கி ஓர் அறை விட்டான். இனியாவின் மென்மையான கன்னம் சிவந்துபின் நீலம் பாரித்துப் போனது. முகம் மட்டுமல்ல அவள் மனமும் சிவந்து வெடித்தது.

மௌனமாக- தரையில் வீழ்ந்த கண்ணாடிபோல் அங்கு ஓர் உறவு சிதறித் தூளாயிற்று. இருவரும் பிரிந்து இருவேறு திசைகளில் பயணம் செய்தனர். "ஆணென்றால் கொஞ்சம் அப்படி இப்படித்தானிருப்பான். அவளுக்குத்தான் பொறுத்துப் போகத் தெரியவில்லை" என்றனர் சிலர். 'என்ன இது? இங்கு பெண்ணென்றால் மனிதரில் சேர்த்தியில்லையா?' இனியா தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். இனி-அவள்? போராடத்தான் போகிறாள். இந்தச் சமூகத்தோடு!

# கொழும்பு

விடிந்தது.

அப்பா ஓடி வந்தார்.
அவனைக் கட்டி யணைத்தார்.
ஓ' வென்றழுதார்.

அம்மா ஓடி வந்தார்.



அவனைக் கட்டி யணைத்தார்,
ஓ'வென்றழுதார்.

அவனும் அழுதான்.

அண்ணன் அழுதார்,
அக்கா அழுதார்,
தம்பி அழுதான்,
தங்கை அழுதாள்.

அவனும் அழுதான்.

அக்கம் பக்கத்து வீட்டார் ஓடி வந்தனர்,
அவர்களும் அவனைப் பார்த்து
அழுதனர்.

அவனது அழகான இளம் மனைவி
ஓடிவந்தாள்.
அவனைக் கட்டி யணைத்தாள்;
ஒப்பாரி வைத்தழுதாள்.

அவனுடன் சேர்ந்து எல்லோரும்
அழுதார்கள்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவன்
அவன்.
சிங்களமும் தெரியாது.

இன்றுதான்...

முதன் முதலாக
அவன்...

கொழும்புக்குச் செல்கின்றான்
தொழிலுக்கு...!

## கிண்ணியா அமீரலி

# சொல்லத்தான் நினைக்கிறேன்



## க.ராகுலன்

இதயம் எட்டி என் விலாவில் உதைத்துக் கொண்டிருந்தது. 'நான் தாமதமாகிவிட்டேனா?', 'அவள் போயிருப்பாளா?' இவை என்னுள் எழுந்த கேள்விகள். என் பார்வை அவள் வீட்டுவாசலில் பதிந்தது.

அதோ அவள்! அதே பின்னல்; அதே நளினமான நடை; அந்தக் கிளிப்பச்சை நிறச் சுடிதாரில் அவள் மிகவும் அழகாகத் தெரிந்தாள். ஆனால் குருணிக்கற்கள் அவள் உள்ளங்கால்களைக் குத்தினவோ இல்லையோ என்னுள்ளத்தைக் குத்தின. கோயிலுக்குப் போகும்போது பாதணியில்லாமல் போவது ஐதீகமாக இருக்கலாம். அதற்காக இப்படியா? இவள் நிச்சயமாக ஆயிரத்தில் ஒருத்தியாகவே இருப்பாள்.

அவளை நீண்டகாலமாகக் கவனித்திருக்கிறேன். அழகைத் தவிர அவளிடம் உள்ள ஏதோ ஒன்று என்னைக் கவர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் இத்தனைகாலம் என்னுள் வியாபித்திருக்கிறாள்; இனிவரும் காலமும் அப்படித்தான். "பிளீஸ், இனிமே வெறுங்காலோட நடக்காதைங்கோ, என்னால தாங்கமுடியாது!" என்று சொல்ல நினைத்தேன், சொல்லவில்லை.

நான் அவளைத் தொடர்ந்து கோயிலுக்குள் நுழைந்தேன். இங்கு வந்தால் வெளிச் சிந்தனைகள் இருக்கக்கூடாதுதான். ஆனால் என்னால் முடியவில்லையே; "கடவுளே என்னை மன்னிச்சிடு!" என்று சலூட்டையும் அடித்துவிட்டு அவளைப் பார்த்தேன். அவள் சுவரில் சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டிருந்தாள். நானும் அவளுக்கு எதிர்ப்புறமாக அமர்ந்து கொண்டேன்.

அப்போது என் தாத்தா சொன்னது நினைவிற்கு வந்தது. "கோயிலுக்குப்போனா அவசரப்படக்கூடாது; மனதை ஒருமுகப் படுத்தி கும்பிடவேணும்; கொஞ்சநேரம் தேவாரங்கள் பாடலாம் அல்லது தியானத்தில இருக்கலாம்; இப்ப எங்க இதெல்லாம் செய்யினம், இந்தக்காலத்தில கோயிலுக்குப் போறவர்களே அபூர்வம்..."

"தாத்தா, கொஞ்சக்காலத்தில அப்படிப் பட்ட ஒருத்தியை உங்களுக்குக் காட்டத்தான் போறேன்!" அவளைப் பார்த்தபடி நினைத்துக்கொண்டேன். அப்பொழுதுதான் அவள் கண்களைத் திறந்தாள்.

என்னைக் குறிவைத்த அவள் பார்வையை எதிர்கொள்ள முடியவில்லை; அது குத்துகின்ற பார்வை; உயிரைக் குடிக்கின்ற பார்வை; மின்னலொன்று வெட்டியதுபோல் பளிச்சென்ற பார்வை; நான் தலையைக் குனிந்துகொண்டேன்.

"ஒருவர் தம் அருகிலில்லாத இன்னொருவரைப் பற்றி நினைக்கும்பொழுது, அந்த இன்னொருவருக்கும் நினைப்பவரின் நினைவு உண்டாகலாம்!" என்று எங்கோ படித்த ஞாபகம். "இவளையே நினைத்துக் கொண்டிருக்கும் என்னைப்பற்றி ஒரு கணமாவது நினைக்கமாட்டாளா?"- இது என் உள் மனதின் ஏக்கம்.

அவள் எழுந்துவிட்டாள்; வீதிக்கு வந்துவிட்டாள்; நானும் விடுவதாக இல்லை; பின்தொடர்ந்தேன். "அன்பான சொல் அல்லது செய்தி உங்களிடம் இருக்குமானால் தாமதிக்கவேண்டாம், அதனை மறக்கும்வரை; மாறாக அதை இன்றே சொல்லிவிடுவது என்பது அன்பிற்கு ஏங்கும் இதயத்தின் மீது நீங்கள் அக்கறை கொண்டுள்ளீர்கள் என்பதை அறியப்படுத்துவதற்கே" இது ஒரு கவிஞன் கூறியது. இது மாதிரி நல்ல சந்தர்ப்பம் கிடையாது. எப்படி ஆரம்பிக்கலாம். யோசித்தேன்.

சின்னச் சின்ன மழைத்துளிகள் வளியில் சேரத்தொடங்கிவிட்டன. "மழை பெய்யுது; கையில குடையுமிருக்கு; குடையை குடுத்திட வேண்டியதுதான்..." என்றவாறு என் வேகத்தை அதிகரித்தேன். படபடப்பு உடலை ஆக்கரமிக்க, தரையைக் கவனிக்காமல் நானும் நடக்க, "ஐயோ அம்மா..." இடறி விழுந்துவிட்டேன்.

"என்னடா எழுப்பிவிட, திரும்பவும் தூங்கிட்டியா?" அடுப்படியிலிருந்து ஒலித்தது அம்மாவின் குரல்.

# எங்கள் நிலங்கள்



## நெடுந்தீவு மகேஷ்

அந்தக் கிராமத்தின் எல்லை வரை நீண்டிருந்த வயல் வெளிகள் காருண்யனின் நெற் செய்கை முயற்சிக்கு ஏற்ற சூழலையும் சுவாத்தியத்தையும் நிறையவே பெற்றிருந்தன.

சீதனத்தை விரும்பிய பெற்றோரின் நிர்ப்பந்தத்தால் காதலை இழந்து, வயற்காணியைச் சீதனச் சொத்தாகப் பெற்று, விவசாயத்தையே தன் தொழிலாகக் கொண்டவன் அவன்.

பெற்றோரை இழந்த நிலையில், அவனுடன் ஒட்டிக்கொண்ட தங்கையின் திருமண பந்தத்திற்காக, மாப்பிள்ளைத் தேடி நாளெல்லாம் அலைந்தான்.

சீதனம் கொடுக்கும் வகையில் அவனிடம் செல்வம் சேரவில்லை. ஏழ்மையை அவன் தனதாக்கிக் கொண்டான்.

உலகம் அவனது ஏழ்மை வாழ்வின் துயரக் கோலங்களை விமர்சிப்பதிலேயே மூழ்கிக் கிடந்தது. அவனது ஏழ்மைக்கு உதவும் கரங்கள் எதனையும் அவனால் அடையாளம் காண முடியவில்லை.

தனது தங்கைக்கேற்ற கணவனைத் தேடித் தேடியே அவன் அலைந்து சோர்ந்து போனான்.

வெளிநாட்டுக் கலியாணங்கள் அவனுக்கு வெறுப்பையே விளைவித்தன.

முத்தையரின் மகள் இந்தியாவுக்குப் போய் திருமணப் பதிவோடு இலங்கை திரும்பி, எட்டு வருடங்கள் உருண்டோடி விட்டன. கொழும்பிலே பெண்ணும் இலண்டனிலே மாப்பிள்ளையுமாய் வாலிபத்தைத் தொலைத்தபடி வாடி நிற்கும் இதயங்கள்.

சுப்பையரின் பேத்தி, சிங்கப்பூர் போய் தனது உறவான நோர்வே மாப்பிள்ளையைப் பார்த்து, ஏமாந்து தனியாகத் திரும்பி வந்து பிரமச்சரியம் பேணும் துயரங்கள்.

> "அர்த்தமின்றி தொலைந்துபோன உறவுகளைக் காணாமலேயே நிதமும் அழுவதே பலரின் வாழ்வாகிப்போனது"

கந்தையரின் பெறாமகளைக் கொழும்புக்கு வந்து கோலாகலமாகத் திருமணம் செய்த பின்னர், "கனடாவுக்குக் கூப்பிடுகிறேன்!" என்று கதையும் சொல்லிக் கடிதமும் போட்டவர், கனடாவுக்குபோய் பத்து வருடங்களாகியும் திரும்பாமையால், அவருக்காக காத்திருந்து விசாவையும் காணாமல் வெட்கித்து நிற்கும் வேதனைகள்.

வெளிநாட்டு மாப்பிள்ளைக்காய் காத்திருந்த அம்பிகையை நாடிவந்த ஆறுமுகம், சீதனம் பெற்ற கையோடு ஜேர்மனிக்குபோய், வேறு பெண்ணைக் கைப்பிடித்த கதை கேட்டுக் கலங்கி நிற்கும் உள்ளங்கள்.

இங்கெழுந்த எல்லாச் சோகக் கதைகளுமே எமது இனத்துக்குள் விளைந்த சுயநலத்தின் வாழ்வம்சங்களாய் வளர்ந்துவிட்டதை எண்ணிக் காருண்யன் வருந்தினான்.

வாழ்வின் உண்மைகளைப் புரிந்து கொள்ளாமல் வாழ்தல் என்பது போலியானது. அன்பை வளர்த்துக் கொள்ளாமல் ஆசையை வளர்த்துக் கொள்வதால் விளையும் இவை போன்ற ஆபத்துக்களால் எமது இனம் அடையும் இன்னல்களோ ஏராளம்.

இத்தனைக்குள்ளேயும் பிறந்து, தவழ்ந்து, நடந்து வளர்ந்த தாய் நிலத்தை நீங்கமுனையாத- முயலாத உள்ளங்களுக்குள் ஒன்றாகத் தாய் நிலத்தின்மீது அளவற்ற நேசம் கொண்டவன் காருண்யன்.

சொந்த மண்ணிலேயே தமது வாழ்வின் மகிழ்வை அமைத்துக் கொள்வதில் அவனுக்கோர் பெருமை.

ஊரிலே தனது தங்கையைப் பெண் கேட்டுவரும் மாப்பிள்ளைகள்; ஆண் என்ற பெருமைக்குள் விழித்துக்கொள்ளும் போதெல்லாம், சீதனம் கேட்கும் சீரழிவும், இங்கே செழித்திருப்பதை அவனால் அழிக்க முடியவில்லை.

கலியாணத் தரகர்களின் கதைகளுக்குள்ளேயும், மாப்பிள்ளை தேடும் படலம் தொடர்ந்து நடந்தது.

ஒருவாறு தெரிவான மாப்பிள்ளைக்கும், மணமகளான காருண்யனின் தங்கைக்கும் வயதில் அவ்வளவு வித்தியாசம் இல்லை.

நல்லபடியாகத் தனது தங்கையின் திருமணத்தைச் சிறிய அளவிலேனும் ஊரறியச் சந்தோசமாகச் செய்து முடித்துவிட வேண்டும் என்ற ஆசை அவனுக்குள் உயர்ந்தது.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாகக் கூறப்படும் மந்திரத்தில், காருண்யனுக்குச் சம்மதமில்லை. ஆனால் அவனது தங்கையின் கல்யாண நிறைவுக் காட்சியில், அவனுக்கோ சொர்க்கத்தைக் கண்டுவிட்ட மகிழ்ச்சி.

தாய் மண்ணைவிட்டு விலகாமல் அந்த மண்ணின் செழிப்பில் தனது உறவுகளோடு களிப்பதிற்தான் எத்தனை சிறப்பு. தங்கையும் மைத்துனரும் இந்தச் செழிப்பான மண்ணில் சுகம் காண்பர், என்றெண்ணிய போதெல்லாம் அவனது உணர்வுகள் இசை மீட்டின.

கிராமத்து எல்லை வயல் நிலத்தைத் தங்கைக்குச் சீதனமாகத் தந்து திருமணத்தைக் கோலாகலமாக நடாத்தி முடித்தான். அந்த எல்லை வயல் நிலத்தில் விளைந்து நிற்கும் நெல் பயிர்களில், ஆடும் கதிர் மணிகள் மேற் பரவும் அவன் பார்வையிலோர் பரவசம்.

தங்கையின் வாழ்வு களிக்கத் தன் சொத்தைக் கொடுத்த பெருமைக்குள் ஒரு மன நிறைவு.

இத்தனையும் நிறைவான ஓரிரு நாட்களில், வயல் நோக்கிச் சென்று காணாமற் போன தனது மைத்துனரைத் தேடி எங்கெல்லாம் அலைந்தாலும் அந்தக் கிராமத்து எல்லை வயலில் புதையுண்டுபோன எத்தனையோ உண்மைகளுக்குள் இதுவும் ஒன்றாய்ப் போனது என்பதை அவன் எண்ணிய போது உள்ளம் உடைந்து போனான்.

அர்த்தமின்றித் தொலைந்துபோன உறவுகளைக் காணாமலேயே இங்கு நிதமும் அழுவதொன்றே பலரின் வாழ்வாய்ப் போனது.

மிகவும் விருப்புடன் வாழ்ந்த தாய் நிலத்தின் செழிப்புக்களிடையே வேதனை தரும் சோதனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் வெந்துபோகும் மனிதங்கள்.

அந்த வயல் நிலத்தைக் கிளறி அமிழ்ந்து போன மானிடத்தின் எச்சங்களை அலசிப் பார்ப்பதில் தொடரும் நியாயங்களே; எமது மண்ணில் அகலாமல் எஞ்சி நின்றன.

காருண்யன் தன் தங்கையைக் கட்டி அணைத்தபடி அழுது புலம்பினான்.

# வீரன் தான் பிரீன் 10

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
-750 வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
-1900ம் ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
-இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்-
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மனதை உலுக்கும்
எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

**தமிழில் ப.ராமஸ்வாமி**

ஸோலோஹெட்பக் திப்பெரரியிலிருந்து இரண்டரை மைல் தூரத்திலுள்ள ஒரு சிறிய நகரம். லிமெரிக் ஜங்ஷனுக்கும் அதற்கும் இடையில் உள்ள தூரம் ஒரு மைல். கல்லுடைக்கும் இடம் ஒரு கிளை வீதியின் மேல் இருந்தது. அங்கு ஏராளமான பாறைகள் உண்டு. அந்தப் பகுதி மலைப்பாங்கான பிரதேசம். வெகு சமீபத்தில் ஊர்களில்லை.

நிலங்களின் மத்தியில் சில வீடுகள் மட்டும் கட்டப்பட்டிருந்தன. கல்லுடைக்கும் இடம் கிளை வீதியின் வலது பக்கத்திலிருந்தது. அதன் இரண்டு பக்கத்திலும் உயர்ந்த மரக்கிளைகள் இருந்தன. அவற்றிற்குப் பின்னால் முட்புதர்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. ஒளிந்திருப்பதற்கு அவை மிகவும் உதவியாயிருந்தன.

தான் பிரீன் கூட்டத்தாருக்கு வெடிமருந்து வண்டி வரும் நிச்சயமான தேதி தெரியவில்லை. வரப்போகின்ற நாளைக்கு ஐந்து தினங்களுக்கு முன்னதாகவே அது வருவதாக அவர்களுக்குத் தகவல் கிடைத்திருந்தது. அந்த ஐந்து தினங்களிலும் அவர்கள் புதர்களில் மறைந்து காத்திருந்து ஏமாந்தனர்.

வெடிமருந்துக்காகக் கடைசிவரை காத்து நின்றவர்கள் பின் கண்ட ஒன்பது பேர்கள்; தான் பிரீன், ஸீன் டிரீஸி, ஸீமஸ் ரொபின்ஸன், ஸீன்ஹோகன், ஜக் ஓமீரா, பாரிக் மக்கார் மிக், மைக்கேல் ரியான், பாட்ரிக் ஓட்வியர், டிம்குரோ.

எவரும் அறியாதபடி அவர்கள் மறைந்திருக்க வேண்டியிருந்தது. காலம் மிகக் குழப்பமானது. கண்டவர்களையெல்லாம் பொலிஸார் சந்தேகிப்பது வழக்கம்.

கல்லுடைக்கும் இடத்தில் வேலை செய்து வந்த நூற்றுக்கணக்கான தொழிலாளரில் யாரேனும் அந்நியர்கள் அப்பக்கத்தில் நட மாடுவதைக் கண்டால் சந்தேகங்கொள்வர்.

சந்தேகம் சத்துருக்களுக்குக் காட்டிக் கொடுத்து விடும். ஆதலால் அங்கு காத்திருந்தவர்கள், அதிகாலையில் பொழுது விடியுமுன்பே வந்து புதர்களுக்குப் பின்னால் மறைந்து கொள்வது வழக்கம்.

எந்த நேரத்திலும் ஆயுதங்களைக் கைகளில் வைத்துக்கொண்டு பகைவரின் வரவை அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டேயிருந்தனர்.

இரண்டு மணிக்குப் பின்பு பொலிஸார் வரமாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் பொலிஸார் அங்கிருந்து நகரத்திற்கு இருட்டும் முன்பே திரும்ப வேண்டியிருக்கும்.

இரண்டு மணிக்குப் பின் தான் பிரீன் தோழர்களுடன் தன் வீட்டுக்குச் சென்றுவிடுவான். வீட்டில் அவனுடைய அன்னை யாவருக்கும் உணவு சமைத்துப் போடுவது வழக்கம்.

அதிகாலையில் நான்கு மணிக்கே காலை ஆகாரம் தயாரித்துக் கொடுத்து, அவள் அவர்களை வழியனுப்புவாள்.

ஆறாவது நாள் காலையில் அவள் காலை உணவு கொடுக்கும்பொழுது 'இன்று காரியத்தை முடிக்காமல் வந்தீர்களானால் நாளை முதல் நான் உங்களுக்குச் சோறு படைப்பது சந்தேகந்தான்!' என்று எச்சரிக்கை செய்தனுப்பினாள்.

கடைசியாக ஜனவரி 21 ஆம் திகதி வந்து சேர்ந்தது. அன்றைய தினம் அயர்லாந்தின் சரித்திரத்தில் மிக விசேஷமான தாகும். சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து அயர்லாந்து விடு பட்டுத் தனது உயிரினும் இனிய குடியரசை அன்று தான் ஐதாபித்துக் கொண்டது.

டப்ளினில் டெயில் ஐசான் ஏற்பட்டதும் அன்றுதான்.

உலகத்திலுள்ள சகல சுதந்திர நாடுகளுக்கும் அயர்லாந்து யாருக்கும் அடிமையில்லை என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் தினத்தில் தான் பிரீன் கூட்டத்தார் ஸோலோஹெட்பக் புதர்களில் பகைவரை எதிர்பார்த்து வெகு நேரம் காத்திருந்தனர்.

அவர்கள் அனுப்பியிருந்த தூதுவன் கிளைவீதியில் நடமாடிக் கொண்டு திப்பெரரி வீதியில் வண்டி வருகின்றதா என்று மிகுந்த கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் திடீரென்று ஓடிவந்து சுடர்விடும் கண்களுடன், "ஆசாமிகள் வந்துவிட்டனர், வந்து விட்டனர்!" என்று கூவினான்.

உடனே ஒவ்வொருவனும் முன்னரே குறித்தபடி தனது இடத்திற்குச் சென்று தயாராய் நின்றான்.

அவர்களில் யாருக்காவது கூச்சமோ அதிர்ச்சியோ ஏற்பட்டிருந்தாலும் ஒருவரும் அதை வெளிக்காட்டவில்லை. மின்னல் பாய்வதுபோல் ஒவ்வொருவரும் விரைந்து சென்று கடமையில் ஈடுபட்டனர்.

வெகு சீக் கிரத்தில் போராட்டத்தில் அவர்களுக்கு வாழ்வு அல்லது மரணம் ஏற்படக் காத்திருந்தது.

தூதன் மீண்டும் ஓடிவந்து வருகிறவர்களுடைய எண்ணிக்கையையும், எவ்வளவு தொலைவில் வருகிறார்கள் என்பதையும் அறிவித்தான்.

வண்டி நெருங்கி வந்துகொண்டிருந்தது. சக்கரங்கள் வீதியில் 'சடசட'வென்று உருளும் ஓசை கேட்டது. குதிரைக் குளம்புகளின் ஓசையும் கேட்டது.

தான் பிரீன் பரபரப்படைந்தான். மிகவும் அமைதியுடன் நிற்க வேண்டுமென்று விரும்பினாலும் அது மிகக் கஷ்டமாயிருந்தது. கூடியவரை ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, புதரை விலக்கி வெளியே வீதியில் எட்டிப் பார்த்தான்.

குதிரை வண்டி வெகு சமீபத்தில் வந்து விட்டது. குதிரையின் இரண்டு பக்கத்திலும் இருவர் வந்து கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் வண்டிக்காரன், மற்றவன் ஒரு சகரவபை வேலைக்காரன், வண்டிக்குப் பின்னால் சிறிது தூரத்தில் ஆயுதந் தாங்கிய இரண்டு பொலிஸாரும் வந்து கொண்டிருந்தனர்.

பொலிஸார் வெகுசமீபத்தில் வந்தவுடன் புதரில் தங்கிருந்தவர்கள் அனைவரும் ஒரே தொனியில் "தூக்குங்கள் கை களை!" என்று உரக்கக் கூவினார்கள்.

ஆனால் பொலிஸார் இருவரும் கைகளைத் தூக்குவதாகக் காணப்படவில்லை.

தான் பிரீன் முதலியோர் அவர்களை வீணாகக் கொன்று தள்ள மனமின்றி, மீண்டும் "தூக்குங்கள் கைகளை!" என்று உத்தர விட்டனர்.

பொலிஸார், கைகளைத் தூக்குவதற்குப் பதிலாக, யுத்த வீரர்களைப் போல், துப்பாக்கிகளைக் கையில் பிடித்துச் சுடுவதற்குக் குறிபார்த்தனர். அவர்களும் ஐரிஷ் காரர்கள் அல்லவா!

மரியாதையாகப் பொலிஸார் துப்பாக்கிகளைத் தூர எறிந்திருந்தால், உயிர்ப் பிச்சை பெற்றிருப்பார்கள். அந்நிய அரசாங்கத்திடம் வாங்கிய கூலிக்காக அவர்கள் உயிரைவிடத் துணிந்து நின்றனர்; ஒரு நிமிஷம் தாமதித்திருந்தால் புரட்சிக்காரர்கள் மடிந்திருப்பார்கள்.

ஆதலால் அவர்கள் கண்கொட்டு முன்னால் பொலிஸாரைக் குறிவைத்துத் துப்பாக்கி விசைகளை இழுத்து விட்டனர்.

குண்டுகள் ஏக காலத்தில் குறி தவறாமல் பாய்ந்தன. இரண்டு பொலிஸாரும் மூச்சற்றுக் கீழே சாய்ந்தனர். ஐரிஷ் தேசிய வீரர்கள் தங்களுடன் பிறந்த ஐரிஷ் சகோதரர்களை வீழ்த்தி விட்டனர்!

நாட்டுப்புறத்திலே, வீதி நடுவிலே, குண்டோசை கேட்டது! வயல்களிலும் பண்ணைகளிலும் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் திடுக்கிட்டுப் போயினர்.


ஆங்காங்கே சிதறிக்கிடந்த வீடுகளின் வாயில்களில் ஆண்களும் பெண்களும் மொய்த்து நின்று, என்ன விசேஷம் என்று கவனித்தனர்.

மாண்டு கிடந்த பொலிஸாரைப் பார்த்த வழிப்போக்கர்கள் பிரமித்து நின்றனர்.

வண்டிக்காரன் ஜேம்ஸ் காட்கிரேயும், முனிசிப்பல் வேலைக் காரன் பாட்ரிக் பிளினும் சாலை ஓரத்திலே மெய்மறந்து கிடந்தனர்.

ஒரு மணி நேரத்தில் அதிகாரிக்குத் தகவல் தெரிந்தவுடன் பல்லாயிரம் பட்டாளத்தார் அங்குவந்து விடுவார்கள். சந்துகள், பொந்துகள் வீதிகள் எல்லாம் இராணுவ வீரர்கள் மொய்த்து விடுவார்கள்.

தான் பிரீன் ஒரு வினாடியேனும் வீண் போகக்கூடாதென்று அறிந்து பொலிஸார் கையிலிருந்த ஆயுதங்களையும் தோட்டாக்களையும் பறித்துக்கொண்டு, இரண்டு பேரைத் தவிர மற்றத் தோழர்களை எல்லாம்



பல திசைகளிலும் பறந்தோடும்படி உத்தர விட்டான்.

அவனுடன் இருந்த நண்பர்கள் ஸீன் டிரீஸியும், ஸீன் ஹோகனும் வெடிமருந்து வண்டியின் பின்பக்கத்தில் தான் பிரீனும், டிரீஸியும் அமர்ந்து கொண்டனர்.

ஹோகன் சாரதியாக மாறினான். ஏனெனில் வண்டியில் இருந்தவர்களுடைய உயிர்கள் அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

ஹோகன் லகானை இழுத்த வண்ணமாகவே இருந்தான். வழியிலே வண்டியிலுள்ளவர்களைக் கண்டு பள்ளிக்கூடப் பிள்ளைகளும், குடியானவர்களும் ஆச்சரியப்பட்டுக் கொண்டே சென்றனர். வண்டி இடையில் நிற்கவில்லை.

டோனாஸ்கி என்னுமிடத்தை நோக்கி வண்டி சென்றது. வழியில் வெகுநேரம்வரை தொண்டர்களில் ஒருவரும் வாய்திறக்கவில்லை.

கரடுமுரடான மலைப்பாங்கான வீதியில் வண்டி கற்களில் தூக்கிப்போடும் பொழுது குடல் தெறித்துவிடும்போலிருந்தது. ஆனால் வெடிமருந்து மட்டும் எப்படியோ வெடிக்காமலிருந்தது. வண்டியிலுள்ளோர் தாங்கள் தேடிக் கொணர்ந்த பண்டமே தங்களைத் தீர்த்துவிடுமோ என்று பயந்து கொண்டே சென்றனர்.

கடைசியாக அவர்கள், முன்னரே ஏற்பாடு செய்திருந்த இடத்தை அடைந்தனர்.

அங்கே தயாராக வைக்கப்பட்டிருந்த குழியில் வெடிமருந்தைக் கொட்டி மூடிவைத்தனர்.

தான் பிரீன் இரண்டு வெடிமருந்துக் குச்சுகளை மட்டும், பொலிஸார் கண்ணில் மண்ணள்ளிப்போடுவதற்காகக் கையில் வைத்துக் கொண்டான். குதிரையை அவிழ்த்து ஓட்டி விட்டு அந்த இடத்தில் அவற்றைப் போட்டு வைத்தான்.

பின்னால் பொலிஸாரும், இராணுவத்தாரும் அப்பக்கத்தில் மாதக் கணக்காய் தேடும்பொழுது, வெடிமருந்து புதைக்கப்பட்ட இடத்தின் மேலே பல தடவை நடந்துவந்த போதிலும் அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

ஆனால் வெகுதூரத்திற்கு அப்பால் கிடந்த இரண்டு குச்சிகளையும் சுற்றிச் சுற்றிப் பல நூறு சுரங்கங்களைத் தோண்டி விட்டார்கள். வெடிமருந்து பூமிக்குள் இருப்பதாகக் கருதி அதை எடுப்பதற்காக அவர்கள் வெட்டிய குழிகளை, ஆயிரக் கணக்கான சிப்பாய்கள் பாசறைகளாக உபயோகிக்கலாம். அவ்வளவு சிரமப்பட்டு, அவர்கள் நாட்டுப்புறம் எங்கும் குழிதோண்டி விட்டனர்!

ஆனால் மருந்துள்ள இடம் மட்டும் அவர்கள் கண்ணுக்குப் புலப்படவில்லை. வெளியே போடப்பட்டிருந்த இரண்டு குச்சிகளும் அவர்களை முற்றிலும் ஏமாற்றிவிட்டன.

தொண்டர்கள் தென்பக்கத்தில் காலடீ மலைகளை நோக்கி நடந்து சென்றனர். அம்மலைகளில் பிறர் அறியாமல் மறைந்திருக்க முடியும் என்பது அவர்கள் நம்பிக்கை.

நான்கு மைல்களுக்கு அப்பால் அவர்கள் பிட்ஸ்ஜெரால்டு என்ற ஒருத்தி வீட்டில் சிறிது நேரம் தங்கி உணவெடுத்துக்கொண்டார்கள். காலையில் வீட்டில் சாப்பிட்ட பிறகு அதுதான் அவர்களுடைய இரண்டாம் வேளை உணவு. அங்கு அதிக நேரம் தங்காது மீண்டும் வழி நடக்கத் தொடங்கினர்.

குளிர் தாங்கமுடியாமல் இருந்தது. வழியில் இரண்டு மலை ஆடுகள் நின்றதைத் தவிர வேறு உயிர்ப் பிராணிகள் எதுவும் அப்பக்கத்திலே காணப்படவில்லை.

அவர்களுக்கு மலைப் பாதைகள் சரியாகப் புலனாகவில்லை. வழியிலே இருந்த இரண்டொரு வீட்டாரிடம் பாதையை விசாரிக்கலாம் என்றால் அவர்களுடைய வாய் சும்மா இருக்காது.

(பயணம் ...தொடரும்)

---

# அரங்கம் அந்தரங்கம் 35

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

–கண்ணதாசன்–

அது, சந்திரசூரியனுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது.

அவர் எதிர்பாராத நிலையில் திடீரென்று அவர் சம்பந்தப்பட்ட கம்பெனிகளிலே எல்லாம் வருமான வரிச் சோதனைகள் நடக்கத் தொடங்கின. ஆனால் எதிலும் அவரைப் பற்றிய தடயம் சிக்கவில்லை.

ஆரம்பத்தில் ஆட்சி மாற்றம் பற்றி அவர் பயந்தவராக இருந்தாலும் ஒரு மாத காலத்திற்குள்ளே அவர் துணிந்தவராகி விட்டார்.

ஏனென்றால் தமிழகத்தில் தன்னை அனுசரித்துத்தான் பிற கட்சிகள் வாழ முடியும் என்பது அவருக்கு நன்றாகப் புரிந்திருந்தது.

அந்த அதிர்ச்சியிலிருந்து அவர் நீங்கிய உடனேயே தொழிலதிபரும், உறுப்பினருமான நாராயணசாமியின் வீட்டில், அவருக்கு ஒரு பிரம்மாண்டமான இரவு விருந்து நடந்தது.

கோபம் தணிந்து சட்டசபைத் தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டிருந்த விஜயா வேதாசலம், அந்த விருந்தில் ஒரே பெண்களாகக் கொண்டு வந்து குவித்து விட்டாள்.

சந்திரசூரியன்தான் மதுவைத் தொட மாட்டாரே!

அங்கே கிராமிய நடனங்கள் எல்லாம் நடந்தன.

"நாங்க ஒத்துழைக்க நாடு பிழைக்க



நீங்க ஜெயிக்க!"

-என்று பாட்டுப் பாடி எல்லோரும் ஆடினார்கள்.

வக்கீல் வரதராஜன் ஒவ்வொரு கிளாஸ் அருந்திய பிறகும், சந்திரசூரியன் காலில் ஒவ்வொரு தடவை விழுந்து எழுந்தார்.

நாராயணசாமி அவரைவிடக் குறைவாகவே விழுந்தார்.

தங்கசாமி முதலில் விழுந்தவர்தான், பிறகு எழுந்திருக்கவே இல்லை.

நாராயணசாமி, கற்பகத்தையும் அவர் காலில் விழும்படி கழுத்தைப் பிடித்துத் தள்ளினார்.

கற்பகம் அவர் காலில் விழுந்த போது கைத்தாங்கலாக அவளை எடுத்தார் சந்திரசூரியன்.

"அடுத்த பிரதான மந்திரியே நீங்கள் தான்!" என்று ஐநூறு முறை சொன்னார் வரதராஜன்.

"நான் குடித்துவிட்டுப் பேசவில்லை. இது கிடக்கிறது கழுதை!" என்று கையில் இருந்த கண்ணாடி டம்ளரைப் போட்டு உடைத்தார்.

"ஐயையோ! உங்கள் உள்ளங்கால் வியர்க்கிறதே!" என்று தன் வேட்டியால் சந்திரசூரியனின் காலைத் துடைத்துவிட்டார்.

"உங்க 'ஒய்ப்' வரவில்லையா...?" என்று கேட்டார் நாராயணசாமி. வரதராஜனைப் பார்த்து.

"ஒய்ப் வரவில்லை; 'லைப்' வந்திருக்கிறது!" என்று ரங்கநாயகியை அறிமுகப்படுத்தினார் வரதராஜன்.

பாவம் கமலா! குமாஸ்தாவின் பெண்.

அவள் இப்போது இந்த சொஸைட்டிக்குப் பக்குவப் பட்டுவிட்டாள்.

சுடச்சுட மாமிச வகைகளை அவள்தான் கொண்டுவந்து வைத்தாள். கற்பகம் ஒரு தட்டில் ஆம்லெட் கொண்டுவந்து வைத்த போது, 'நீயும் உட்கார்!' என்று திருவாய் மலர்ந்தார் சந்திர சூரியன்.

அவர் அப்படிச் சொன்னாரோ இல்லையோ, "நாமெல்லாம் வெளியே போய்விடுவோம். வாருங்கள், வாருங்கள்!" என்று வேட்டியை ஒழுங்காகக் கட்டிக் கொண்டு எழுந்தார் வரதராஜன்.

அப்போது, "சாரி மிஸ்டர் நாராயண சாமி!" என்று சொன்னபடி சில பொலிஸ் அதிகாரிகள் உள்ளே நுழைந்தார்கள்.

எல்லோரும் அவரவர் கையில் இருந்த கிளாசை சட்டைப் பைக்குள் மறைத்துக் கொண்டார்கள்.

ஆனால் வந்தவர்கள் மதுவிலக்கு நடவடிக்கைகளுக்காக வரவில்லை; கற்பகத்தை கைது செய்யும் வாரண்டோடு வந்திருந்தார்கள்.

**கவியரசு கண்ணதாசன்**

★–★–★

பல நாகரிகங்களின் படை எடுப்பைக் கண்ட நாடு இந்தியா.

இந்திய மக்களின் பலரின் வெளி வாழ்க்கையில் பல்வேறு நாகரிகங்களின் சாயம் கலந்திருப்பது அதனால்தான்.

ஆடவர்கள் போடுகின்ற ஜிப்பாவும், ஜட்டியும், லுங்கியும் உருதுக்காரர்கள் கொடுத்தவை.

முழுக்கைச் சட்டையும், பாண்டும், கோட்டும் வெள்ளைக்காரர்கள் கொடுத்தவை.

பழந் தமிழர்கள் கால்களில் தோல் அணி அணிவதில்லை. கட்டை அணிவது வழக்கம்.

வெள்ளை நாகரிகம் நமக்குப் பூட்சைக் கொடுத்தது.

உணவிலே பிரியாணி வகைகளை உருதுக்காரர்களும், விதவிதமான ஆவிச் சமையல்களை வெள்ளைக்காரர்களும் கொடுத்தார்கள்.

காய்கறிகளில் பீட்ரூட், பீன்ஸ், தக்காளி, முட்டை கோஸ் எல்லாம் இறக்குமதியே!

பல்லாயிரம் திசைச் சொற்களும் நமது மொழிகளிலே கலந்தன.

டம்ளர், ஜாலி, சட்னி, சாம்பார்- ஒன்றா இரண்டா?

இவ்வளவு கலப்பிற்குப் பிறகும் கூட இந்திய நாகரிகம் ஒன்று ஒரு இன்றுவரையிலே காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது.

(அந்தரங்கம் வரும்)

# திருமறை தரும் போது நெறி

## புதிய ஆகமம் 25

ஆண்டவருடைய திருக்குமாரரான போதும் மண்ணில் ஒரு தாய் வயிற்றில் கருவாய் வளர்ந்து, மண்ணில் பிறந்து, இதே மண்ணில் தவழ்ந்து விளையாடி மண்ணின் மைந்தராகவே வாழ்ந்தமையினால், மனிதருக்குள்ள சுகதுக்கங்களையும் நன்மை தீமைகளையும் வேதனை-சோதனைகளையும் ஏற்றாக வேண்டிய நிலை இயேசுபிரானுக்கும் இருந்தது. 'ஆண்டவருடைய அவதாரமாகக் கருதப்படும் ஒருவரால், அவருக்கு வரும் துன்பங்களிலிருந்து தன்னைத் தானே காத்துக் கொள்ள ஏன் முடியவில்லை?' என்ற வினாக்கள் எழவே செய்தன.


உலகில் பிறந்த எவரும் உலகியல் மரபுகளைப் புறம் தள்ளிவிட முடியாது. இவ்வுண்மையை எவரும் மறந்துவிடலாகாது.

இயேசுபிரானுக்கு முன்னும் பின்னும் உலகில் அவதாரமெடுத்த எவரும் எப்போதும் இன்பத்தில் மட்டுமே திளைத்தவர்களல்ல. சாதாரண மனிதர்களை எதிர் கொள்ளும் உலகியல் பிரச்சனைகள் அவர்களையும் ஆட்டிப் படைக்கத் தவறியதில்லை.

ஏற்கனவே மத்தேயு அளித்த உபதேசங்களிலிருந்து நாம் தொகுத்துத்தந்த அதே

# வேதனையான சோதனைகள்

கருத்துக்கள், இப்போது யோவான் அளித்த நற்செய்தியிலும் இடம் பெறுகின்றன. முன்னதும் பின்னதும் சில இடங்களில் ஒரே முறையாகவும், வேறு பல இடங்களில் சற்று மாறுபட்டும் இடம் பெறுகின்றன. இயேசு பெருமானுடைய வாக்கியங்கள் கூடுமானவரை விடுபட்டுப் போகாதிருக்கவே இவற்றை இணைத்துள்ளோம். ஆகவே, ஏற்கனவே கூறியவற்றையே மீண்டும் தருகிறார் என்று குறை கூறாதிருக்கும்படி வாசகர்களிடம் வேண்டிக் கொள்கிறோம்.



### சாத்தானே உங்கள் தந்தை

ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த காணிக்கைப் பெட்டியருகே அமர்ந்து இயேசுபிரான், தன்மீது நம்பிக்கை வைத்திருந்த யூதர்களிடம் உரையாடிக் கொண்டிருந்தார்.

"என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்; உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" என்றார்.

யூதர்கள் அவரைப் பார்த்து, "உங்களுக்கு விடுதலை கிடைக்கும்' என நீர் எப்படிச் சொல்லலாம்? நாங்கள் யாருக்கும் ஒருபோதும் அடிமைகளாய் இருந்ததில்லை. நாங்கள் ஆபிரகாமின் வழிமரபினர் ஆயிற்றே!" என்றார்கள். அதற்கு இயேசு, "பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். வீட்டில் அடிமைக்கு நிலையான இடம் இல்லை; மகனுக்கு அங்கு என்றென்றும் இடம் உண்டு. மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள். நீங்கள் ஆபிரகாமின் வழிமரபினர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என்வார்த்தை உங்கள் உள்ளத்தில் இடம் பெறாததால் நீங்கள் என்னைக் கொல்ல முயலுகிறீர்கள். நான் என் தந்தையிடம் கண்டதைச் சொல்கிறேன். நீங்கள் உங்கள் தந்தையிடமிருந்து கேட்டதைச் செய்கிறீர்கள்!" என்றார். அவர்கள் அவரைப் பார்த்து, "ஆபிரகாமே எங்கள் தந்தை" என்றார்கள். இயேசு அவர்களிடம், "நீங்கள் ஆபிரகாமின் மக்கள் என்றால் அவரைப் போலச் செயல்படுவீர்கள். ஆனால் கடவுளிடமிருந்து கேட்டறிந்த உண்மையை உங்களுக்கு எடுத்துரைத்த என்னை நீங்கள் கொல்ல முயலுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே! நீங்கள் உங்கள் தந்தையைப்போலச் செயல்படுகிறீர்கள்!" என்றார்.

கூடியிருந்த யூதர்களிடம் சில அவநம்பிக்கையாளர்களும் இருந்தனர். அவர்களில் ஒருவர் எழுந்து "நாங்கள் பரத்தைமையால் பிறந்தவர்களல்ல; எங்களுக்கு ஒரே தந்தை இருக்கிறார். அவரே கடவுள்!" என்றார். இதற்கு பதிலளித்த இயேசுபிரான்,

"கடவுள் உங்கள் தந்தையெனில் நீங்கள் என்மேல் அன்பு கொள்வீர்கள். நான் கடவுளிடமிருந்தே இங்கு வந்துள்ளேன். நானாக வரவில்லை; அவரே என்னை அனுப்பினார். நான் சொல்வதற்குச் செவிசாய்க்க உங்களால் இயலவில்லை. எனவேதான் நான் சொல்வதை நீங்கள் கண்டுணர்வதில்லை. சாத்தானே உங்களுக்குத் தந்தை. உங்கள் தந்தையின் ஆசைப்படி நடப்பதே உங்கள் விருப்பம். தொடக்க முதல் அவன் ஒரு கொலையாளி. அவனிடம் உண்மை இல்லாததால் அவன் உண்மையைச் சார்ந்து நிற்கவில்லை. அவன் பொய் பேசும் போதும் அது அவனுக்கு இயல்பாக இருக்கிறது. ஏனெனில் அவன் பொய்யன், பொய்மையின் பிறப்பிடம். நான் உண்மையைக் கூறுவதால் நீங்கள் என்னை நம்புவதில்லை. என்னிடம் பாவம் உண்டு என்று உங்களுள் யாராவது என்மேல் குற்றம் சுமத்த முடியுமா? நான் உங்களிடம் உண்மையைக் கூறியும் நீங்கள் ஏன் என்னை நம்புவதில்லை? கடவுளைச் சார்ந்தவர் கடவுளின் சொல்லுக்குச் செவி சாய்க்கிறார்; நீங்கள் கடவுளைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆதலால் அவர் சொல்லுக்குச் செவி சாய்ப்பதில்லை!"

இயேசுபிரான் இக்கருத்துக்களைக் கூறியதைத் தொடர்ந்து யூதர்களில் சிலர், "நீர் பேய் பிடித்தவன்!" என்று தயங்காமல் கூறினர். இதற்கு எதுவித கோபமும் கொள்ளாமல் அவர் இவ்வாறு கூறினார்:

"நான் பேய் பிடித்தவன் அல்ல; என் தந்தைக்கு மதிப்பளிப்பவன். ஆனால் நீங்கள் என்னை அவமதிக்கிறீர்கள். நான் எனக்குப் பெருமை தேடுவதில்லை. அதை எனக்குத் தேடித்தருபவர் ஒருவர் இருக்கிறார். அவரே தீர்ப்பளிப்பவர். என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்!"

இக்கருத்துக்களையும் மறுதலித்த சிலர், "ஆபிரகாமும் இறந்து விட்டார். அவரின் பின்னர் வந்த இறைவாக்கினரும் இறந்து விட்டனர். அவ்வாறான பின்னரும் நீர் யாரென்று நினைத்துக் கொண்டு இவ்வாறெல்லாம் பேசுகிறீர்? ஆபிரகாமைவிட நீர் பெரியவரோ?" என்று வினவினர்.

இதற்கு பதிலிறுக்கு முகமாக இயேசுபிரான் இவ்வாறு கூறினார்:

"நானே என்னைப் பெருமைப்படுத்தினால், அது எனக்குப் பெருமை இல்லை. என்னைப் பெருமைப்படுத்துபவர் என் தந்தையே. அவரையே நீங்கள் உங்கள் தந்தை என்றும் சொல்கிறீர்கள். ஆனால் அவரை உங்களுக்குத் தெரியாது; எனக்குத் தெரியும். எனக்கு அவரைத் தெரியாது என நான் சொன்னால் உங்களைப் போல நானும் பொய்யனாவேன். அவரை எனக்குத் தெரியும். அவருடைய வார்த்தையையும் நான் கடைப்பிடிக்கிறேன். உங்கள் தந்தை ஆபிரகாம், நான் வரும் காலத்தைக் காண முடியும் என்பதை முன்னிட்டுப் பேருவகை கொண்டார்; அதனைக் கண்டபோது மகிழ்ச்சியும் கொண்டார்!" என்றார்.

### உண்மை தெரியாதவர்கள்

இக்கருத்துக்களும் யூதர்களுக்கு ஏற்புடையதாகவில்லை. "உமக்கு இன்னும் ஐம்பது வயதுகூட ஆகவில்லை. நீர் ஆபிரகாமைக் கண்டிருக்கிறீரா?" என்று கேட்டார்கள்.

"ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன். இதனை உறுதியாக உங்களிடம் கூறுகிறேன்!" என்றார்.

இவ்வார்த்தைகளைச் செவிமடுத்த யூதர்களில் சிலருக்கு, அவ்வார்த்தைகளுள் பொதிந்திருந்த உண்மைப் பொருள் புரியவில்லை. ஆகவே அவர்கள் ஆத்திரமடைந்தனர். இயேசுபிரான்மீது கற்களை வீசித்தாக்க ஆயத்தமானார்கள். இதனைத் தெரிந்து கொண்ட இயேசுபிரான் அவ்விடத்தை விட்டகன்றார்.

ஆலயத்தின் பிறிதோரிடத்தில் பிறவியிலிருந்தே பார்வையற்றவர் ஒருவர் இயேசுபிரானை அணுகி, தனக்குப் பார்வை தருமாறு வேண்டினார். இயேசுபிரான் மண்ணைச் சேறாக்கி அதில் ஒரு பகுதியை எடுத்து பார்வையற்றவரின் இரு கண்களிலும் அப்பினார். சிலோவாம் குளம் சென்று கண்களைக் கழுவும்படி அவரிடம் இயேசுபிரான் சொன்னார். அங்கிருந்தவர்கள் சிலர் அவரை குளக்கரைக்குக் கொண்டு சென்று கண்ணைக் கழுவுவித்தனர். அவரும் உடனடியாகப் பார்வை பெற்றார்.

### மோசேயின் சீடர்கள்

இதனைக் கண்ட பரிசேயர்கள், "ஓய்வுநாள் சட்டத்தை மீறி இவர் பார்வையற்ற ஒருவருக்குப் பார்வை கிடைக்க வகை செய்யலாமா?" என்று ஆர்ப்பரித்தனர். கண்ணெதிரே கண்ட அற்புதச் செயலைக் கூட நம்ப மறுத்தவர்களாக, கண் பார்வை பெற்றவரையும் அவருடைய பெற்றோரையும் துருவித் துருகிக் கேள்விகள் கேட்டனர்.

பரிசேயரில் ஒருவர், "நாங்கள் மோசேயின் சீடர்கள். மோசேயோடு கடவுள் பேசினார், என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் இவன் எங்கிருந்து வந்தான் என்பதே தெரியாதே!" என்றனர். இதனைக் கேட்ட பார்வையற்றவர், உறுதியுடன் இவ்வாறு கூறினார்:

"எனக்குப் பார்வை அளித்திருக்கிறார்; அப்படியிருந்தும் அவர் எங்கிருந்து வந்தவர்

**இராஜகுமாரன்**

எனத் தெரியாது என்கிறீர்களே! பாவிகளுக்குக் கடவுள் செவிசாய்ப்பதில்லை; இறைப்பற்றுடையவராய்க் கடவுளின் திருவுளப்படி நடப்பவருக்கே அவர் செவி சாய்க்கிறார் என்பது நமக்குத் தெரியும். பிறவியிலேயே பார்வையற்றிருந்த ஒருவர் பார்வை பெற்றதாக வரலாறே இல்லையே! இவர் கடவுளிடமிருந்து வராதவர் என்றால் இவரால் எதுவுமே செய்திருக்க இயலாது," என்றார். அவர்கள் அவரைப் பார்த்து, பிறப்பிலிருந்தே பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் நீயா எங்களுக்குக் கற்றுத் தருகிறாய்?" என்று சொல்லி அவரை வெளியே தள்ளினர்.

தன்னால் பார்வை பெற்றவரை யூதர்களுடன் இருந்த பரிசேயர்கள் துன்புறுத்தியதைப் பற்றிக் கேள்வியுற்ற இயேசுபிரான்:

"தீர்ப்பு அளிக்கவே நான் இவ்வுலகிற்கு வந்தேன்; பார்வையற்றோர் பார்வை பெறவும் பார்வையுடையோர் பார்வையற்றோர் ஆகவுமே வந்தேன்" என்றார். அவரோடு இருந்த பரிசேயர் இதைக் கேட்டபோது, "நாங்களுமா பார்வையற்றோர்?" என்று கேட்டனர். இயேசு அவர்களிடம், "நீங்கள் பார்வையற்றோராய் இருந்திருந்தால், உங்களிடம் பாவம் இராது. ஆனால் நீங்கள் 'எங்களுக்குக் கண் தெரிகிறது' என்கிறீர்கள். எனவே நீங்கள் பாவிகளாகவே இருக்கிறீர்கள்" என்றார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு-ஆ] 22 விடை:** நிலத்தைத் தோண்டி பணத்தைப் புதைத்து வைத்தார்

**பரிசு பெறுவோர்:**

1. **செ.அன்ரனியேசுராஜா,** 1800 பாலையூற்று, திருகோணமலை.
2. **பி. நடராஜி பாலசுப்பிரமணியம்,** உடரதல்ல தோட்டம், நானுஓயா.
3. **பி. கனகேஸ்வரி,** 43/18, கோவில் வீதி, மஸ்கெலிய.
4. **வி. றோசானி,** வி.வி. வீதி, இல.52, கல்முனை-02.
5. **சரஸ்வதி மயில்வாகனம்,** செல்வா நகர்-02, ஆரையம்பதி.

**திருமறை (பு.ஆ) 25 வினா :-** பரிசேயர் எவருடைய சீடர்கள் என்று கூறினார்கள்?

நவம்பர் 13 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
**திருமறை-பு.ஆ.25-தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# கந்தசாமியும் முத்துத்தம்பியும்



க: தொல்லை தவிர்ப்புக்குழு அம்மையார் தலைமையால் கூடுவது முறையோ?

மு: சும்மாயிரும் பிள்ளாய்! இதுவரை காலமும் அரசாங்கத்தின் தொல்லை தவிர்க்கும் குழுவாக இருந்தது. இப்ப, அம்மையாரின் தேர்தல் பிரசாரக்குழுவாக மாறியிருக்குது. எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்ற கதைதான்.

க: கடந்த ஐந்து வருடமாக தமிழ்க் குடிமக்கள் கொத்துக் கொத்தாக கைதானபோது இந்த அக்கறை எங்கே போனது என்கிறேன்?

மு: இது எங்கட சனத்துக்கு விளங்காதோ என்கிறேன்? வையுங்கோ பூவை எண்டு காதை நீட்டப்போகினமோ என்கிறேன்?

க: ஐக்கிய தேசியக் கட்சியும் வில் எடுத்து அம்பு தொடுத்து எங்கட வாக்கு வங்கிகளுக்கு குறிவைக்குது. செந்தமிழ் பேசும் மக்களோடு சொந்தம் கொண்டாடப்பார்க்குது?!

மு: தெற்கிலே கடும் போட்டி. ஐம்பத்தொரு வீத வாக்குகள் எடுத்தால் தான் சிம்மாசனத்தில் சம்மணம் போடலாம். கடும் போட்டி காரணமாக 50 வீதம் வருவது கூட சந்தேகமாம். அதுதான் செந்தமிழ் பேசும் சனத்தோடு சொந்தம் கொண்டாடி அந்த துண்டு விழும் ஒரு வீதத்தை சரிக்கட்டப் பார்க்கினம்.

க: இவை துண்டு விழும் தொகையைப் பார்க்கினம். எங்கட சனம் குண்டு விழும் தொகையைத்தான் பார்க்குது! அவையும் அன்று போட்டவை குண்டு. இவையும் இன்று போடுகினம் குண்டு.

மு: குண்டு போடும்போது சொந்தமும் இல்லை. பந்தமும் இல்லை. வாக்கு வரவில் துண்டு விழும்போது தான் சொந்தம், பந்தம் எல்லாம்.

க: என்ன செய்யிறது முத்துத்தம்பியர், எங்கட பக்கமும் பந்தம் பிடிக்கிற ஆட்கள் இருக்கினமல்லோ.

மு: தங்களுக்கும் வெளிச்சத்துக்காகத்தானே பிடிக்கினம் பந்தம்: அது போகட்டும், ரம்ழான், கிறிஸ்மஸ், க.பொ.த பரீட்சை என்று இடக்கு முடக்கான நேரம் பார்த்தோ தேர்தல் நடத்துறது? ஜனவரிக்கு பிறகு நிதானமாக நடத்தியிருக்கலாம்தானே?

க: மக்களுக்காகவோ தேர்தல், தேர்தலுக்காத்தானே மக்களே தேவைப்படுது!

மு: அலை யார் பக்கம் வீசுது?

க: யாரும் கடும் பலத்தோடு வெல்லக்கூடாது. அதுதான் பாருங்கோ முக்கியம்.

மு: யார் வென்றாலும் வெல்லட்டும், வென்ற பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று தமிழர் பணிக்குழு அறிக்கை விட்டிருக்கிறதே?

க: அது தப்பான அறிக்கை.. கடும் பலத்தோடு யார் வென்றாலும், எங்கள் தலையில் ஓங்கி இடிவிழும். தலைகால் தெரியாமல் ஆடுவினம். அதனால் யாராவது வெல்லட்டும் நமக்கென்ன என்று சொல்லுவது யாருக்கோ ஒரு பக்கத்துக்கு சார்பான நழுவல்தான் பாருங்கோ! இந்த முறை பல பிரமுகர்கள் இப்படித்தான் நழுவி மீனுக்கு வாலையும், பாம்புக்கு தலையையும் காட்டப் போகினம்.

மு: நீர் தேறிவிட்டீர்.

க: நான் மட்டுமோ, எங்கட சனமும் சகல சுத்துமாத்துக்களையும் டக்கு டக்கு என்று கண்டு பிடிச்சுப் போடுதுகள். ஆனால் சிலர்தான் இரண்டு பக்கமும் பாடத்தோதான நிலைப்பாடு தேடுகினம்.

மு: இரண்டு பக்கத்தில் இருந்தும் உதை விழும் ஒரு நாள்! அப்ப மூன்றாவது பக்கத்தில் இருந்து தமிழச் சனமும் உதைக்கும் பாரும் ஒரு உதை! அப்ப என்ன தெரியும்?

க: சிலரை பலநாள் ஏமாற்றலாம். பலரைச் சிலநாள் ஏமாற்றலாம். எல்லோரையும் எல்லா நாளும் ஏமாற்ற...

மு: முடியவே முடியாது!

# தீபாவளியும் போட்டியும்



தமிழ் மக்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டுக்கும் இடையே பலத்த மோதல் ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு தாமே அதிக இனிப்புப் பொட்டலங்களை வழங்க உள்ளதாக பொதுஜன முன்னணி அறிவித்துள்ளது.

இந்தப் பொட்டலங்கள் வழங்குவது தொடர்பான கூட்டம் அம்மையார் தலைமையில் நடைபெற்றது.

இதே வேளை தம்மால் மட்டுமே தரமான இனிப்புப் பொட்டலங்களை தர முடியும் என்றும், பொதுஜன முன்னணியின் இனிப்புப் பொட்டலங்களில் சீனி குறைவாகப் போடப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

தீபாவளி புத்தாடை தரித்த தமிழ்ப் பிள்ளைகளது கைகளைக் கோர்த்தபடி அம்மையாரின் புகைப்படம் பத்திரிகைகளில் வெளியானது.

இதனைக் கண்ணுற்ற ஐ.தே.கட்சியினர் தமிழ்ப் பிள்ளைகள் சிலரை சிறிது கட்டாயமாகப் பிடித்து, புதுச் சட்டை அணிவித்து, தங்கள் தலைவருடன் நிற்கவைத்து புகைப்படம் எடுத்துள்ளனர்.

தீபாவளியை முன்னிட்டு விடுத்த செய்தியில், தாம் பதவிக்கு வந்தால் இரண்டு மணித்தியாலத்தில் இனப் பிரச்சனையைத் தீர்க்க உள்ளதாக அம்மையார் கூறியுள்ளார்.

இதற்கு போட்டியாக ரணில் அண்ணா ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

'இரண்டு மணி நேரத்தில் தமிழர் என்ற பிரச்சனையை தீர்ப்பதாக அம்மையார் கூறியுள்ளார். அணுக்குண்டு நம்மிடம் இல்லாதபோது எவ்வாறு அப்படிச் செய்ய முடியும்? நாம் பதவிக்கு வந்தால் முதல் 24 மணிநேரத்தில் அணுக்குண்டு செய்வோம், அதற்கு அடுத்த 24 மணி நேரத்தில் தமிழர் என்ற பெரும் பிரச்சனையை பூண்டோடு தீர்த்துவிடுவோம் என்று கூறியிருக்கிறார்.




**காதிலை பூ கந்தசாமி**



அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, நாலி வீதி வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEASTREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331




சேகரிப்பு



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


♦ இது என்ன புதுவிதமான அலங்காரமா? அல்லது உலக சாதனை முயற்சியா? இரண்டும் இல்லை.

இவர் ஒரு வெறிபிடித்த அரசியல் கட்சித் தொண்டர். இந்தோனேசியாவில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தபோது, மேகவதியை ஆதரித்து, அவரது கட்சிச் சின்னத்தை இப்படி உடலில் அணிந்துகொண்டு புதுமையாக பிரசாரம் செய்தார்.

இவ்வாறான வெறிபிடித்த தொண்டர்கள் இருந்தும் அம்மணி மேகவதி தோல்வி கண்டதுதான் ஆச்சரியம். முன்னாள் ஜனாதிபதி சுகர்னோவின் புத்திரிதான் மேகவதி. சுகர்னோ என்றால் 'சுத்தமான கண்களை உடையவன்' என்று அர்த்தமாம்.

♦ உலகிலேயே அதக பலசாலி என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் பொஸ்டனைச் சேர்ந்த ஜோன் ஷுட்டன், 14.52 மில்லியன் கிலோகிராம் எடையுள்ள சரக்குக் கப்பலை 40 நிமிடங்களவரை இழுத்திருக்கிறார்.

ஃபோட் வொடர் டெவிலுள்ள எவர்கிளாடன் துறையில் இச்சாதனையை ஜோன் ஷுட்டன் புரிந்துள்ளார். 'ஜலன்ட் அட்வெஞ்சர்' என்ற கப்பலையும் அவர் 21 மீட்டர்வரை இழுத்திருக்கிறார். இவருக்கு வயது 31.

சமீபத்தில் ஷுட்டன் தனது முழுபலத்தையும் ஒன்றுதிரட்டி 14 ஆயிரம் தொன் எடையுள்ள சரக்குக் கப்பலை இழுப்பதைப் படத்தில் காணலாம். நம்மால் ஒரு காரைக்கூட இழுக்க முடியாதவை!

↑ 'போல்பொயின்ட்' பேனாக்கள் பல ரகங்களில் வந்துவிட்டன. வகைவகையாக வண்ண வண்ணமாக மிக மிக மலிவான விலையில் கிடைக்கும் இந்தவகை எழுது கோல்களைச் சேர்ப்பதில் இங்கு சிறுவர் முதல் பெரியவர்வரை அதிக ஈடுபாடு காட்டுகின்றனர்.

ஜேர்மன் நாட்டின் புன்னையாகேன் என்ற விடத்தைச் சேர்ந்த அஞ்ஜெலிகா அன்யுரோவ என்ற பெண்மணி கடந்த ஐந்து வருடங்களில் மொத்தம் ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 700 போல்பொயின்ட் பேனாக்களைச் சேர்த்துவிட்டார்.

இவற்றில் 117 நாடுகளில் தயாரிக்கப்பட்டவையும் உள்ளன. மேற்கூறப்பட்ட தொகையில் ஒரே ரகத்தில் ஒரேபேனாதான் உண்டு. இவரிடமுள்ள போல்பொயின்ட்களில் தங்கத்தாலும் வெள்ளித்தாலும் உருவாக்கப்பட்ட பேனாவும் ஒன்றுண்டு. இப்பேனாவின் மதிப்பு 500 டொலர் (சுமார் 35, ஆயிரம் ரூபா).

போல்பொயின்ட் பேனாக்களை சேகரிப்பதில் உலக சாதனை படைத்துள்ள முதல் ஆள் இவர்தான்.







← உணவுப் பண்டங்களையும் மிகப் பிரமாண்டமான அளவில் செய்து, சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிக்கும் முயற்சிகள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன.

கனடாவின் ஒண்டாரியோ மாநிலத்தைச் சேர்ந்த எம்.எம்.மீற் ஷொப்ஸ் (இறைச்சிக்கடைகள்) ஜேஸன் ஷ்கினிட்ஸ் நிறுவனம் ஆயிரமாய் ஒன்றிணைந்து இறைச்சியை உட்போதித்த உருண்டை போலவைப் போன்ற நீளமானதாக உருவாக்கினார்கள். இதனை செஸேஜ் என்று கூறுவார்கள்.

இதன் நீளம் 16.3 கிலோமீட்டர் (1354 மைல்). இது 1995 ஏப்ரல் மாதம் தயாரிக்கப்பட்டது. இது ஒரு உலக சாதனையாகும்.

படத்தில் பூகோஸ்லாவியாவில் ஸ்ரெஞ்ஜா பக்கா என்ற இடத்தைச் சேர்ந்த மாணவர்கள் 'சலாமி' என்ற உணவுப் பொருளை மிகப் பெரிதாக உருவாக்கி உலக சாதனை படைக்க எடுக்கும் முயற்சியைக் காண்கிறீர்கள். இதன் எடை 676.9 கிலோகிராம் (1492 இறாத்தல் 5 அவுன்ஸ்). இதன் நீளம் 20.95 மீட்டர் 68 அடி 9 அங்குலம் சாதனையாகக்! சாப்பாடுமாக!




↓ உலகிலேயே மிகப் பெரிய பூசனிக்காயையும் அதனைப் பயிரிட்டு உருவாக்கியவரான கனடா ஒண்டாரியோ மாகாணத்தைச் சேர்ந்த கேரி புருக் என்பவரையும் ஏற்கனவே முரசில் பிரசுரித்திருந்தோம். அப்பூசனிக்காய் 495 கிலோகிராம் (1092 இறாத்தல்) எடையுள்ளது. படத்தில் ஜப்பான் நாட்டின் அகிபெட்ச நகரைச் சேர்ந்த சொஜி ஷிராய், தனது தோட்டத்தில் பயிரிட்டு வளர்த்தெடுத்த 440 கிலோ கிராம் (970 இறாத்தல்) எடையிலான பூசனிக்காயுடன் காட்சி தருகிறார்.

ஜப்பானில் சாதாரணமாக ஒரு பூசனிக்காயின் எடை ஒன்று அல்லது இரண்டு கிலோகிராமாகத்தான் கிடைக்கின்றன. பெரிய பூசனிக்காய்க்கு அருகில் காட்சி தருகின்றவைதான் சாதாரண பூசனிக்காய்கள். ஆகவே, இத்தனை பெரிய பூசனிக்காயைப் பயிரிட்டு வளர்த்தெடுத்த சொஜி ஷிராய்க்குப் பெரும் பாராட்டுக்களும், பரிசில்களும் வந்து குவிகின்றனவாம். ஜப்பானில் இதுவரை காலத்தில் மிகப் பெரிய பூசனிக்காய் இதுதான்.




1 வது பிறந்த நாள் வாழ்த்து

திரு.திருமதி வித்தியாகரன்-யசோதினி தம்பதியரின் செல்வப்புதல்வன் ஹவிவேன் தனது முதலாவது பிறந்த நாளை 10.11.99ல் Germany BAD SASSENDROFல் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.


வித்தியாகரன் ஹவிவேன் 10.11.1999

இவரை அன்பு அப்பா, ஆசை அம்மா, தவாலிவில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார் பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார் அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் உரும்பிராயில் வசிக்கும் பாட்டா, பாட்டி அப்பப்பா, அம்மம்மா, மாமாமார், சித்திமார் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- கே.வித்தியாகரன்



[illegible]